
# கனிச்சாறு



பாவலரேறு
பெருஞ்சித்திரனார்
பாடல்கள்

6

காதல்
இயற்கை
இறைமை

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்

(கனிச்சாறு)

படையல்

- எதிர்காலத் தமிழின மீட்பர்களுக்கும்
- தமிழீழ விடுதலைத் தலைவர்களுக்கும் மறவர்களுக்கும்
- அயல்நாடுகளில் வாழும் தமிழின மக்களின் முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும்

இந் நூற்றொகுதிகள் படையலாக்கப்படுகின்றன.

– ஆறாம் தொகுதி

முழுமையான
முதற்பதிப்பு : திபி. 2043. துலை ( அத்தோபர் 2012 )

நூல் தலைப்பு : **பாவலரேறு**
**பெருஞ்சித்திரனார் பாடல்கள்**
(கனிச்சாறு - ஆறாம் தொகுதி)

ஆசிரியர் : *பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

வெளியீடு : *தென்மொழி பதிப்பகம்*
செந்தமிழ் அடுக்ககம்
(சி.கே. அடுக்ககம்)
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை - 600 100
94444 40449

அச்சாக்கம் : *தென்மொழி அச்சகம்,*
சென்னை - 600 100

உரிமை : *தாமரை பெருஞ்சித்திரனார்*

பக்கங்கள் : 26+130

தாள் : படத்தாள் (மேப் லித்தோ 18.6)

அளவு : தெம்மி (1/8)

படிகள் : 1000

விலை : உரு. 120.00

# முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது.கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச் சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவுநிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல்போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி

அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.

ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப்படுகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப் பண் என்றும் பாவென்றும் உயர்நிலைப்படுத்துவிக்கும். இப் பண்ணொடு தாளம் சேர்ந்து இசையென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து பாடல் என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்கவில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.

இனி, பாடல் என்பது **பா தழுவிய கருத்துமொழி** என்று பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையமுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந்திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது.** அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அஃதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை

ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

அ. சொற்கள்

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

ஆ. சீர் அமைப்பு:

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஓட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

இ. யாப்பு

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

ஈ. அணிகள்

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.

2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

**உ. கருத்து**

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக் குழந்தைகளைக் கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தங்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற்போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது. பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித் தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுவுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத் தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள்,உரிமை உணர்வுகள், மாந்தநிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப் பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு - எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் **கனிச்சாறு** என்று பெயர் தரப்பெற்றது. மிக அரும்பாடுபட்டு இத் தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

சென்னை - 5
14-4-1979

அன்பன்
பெருஞ்சித்திரன்

# முதல் பதிப்பு - பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், பெரியாரின் இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, ‘தென்மொழி’ என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் ‘தென்மொழி இயக்க’த்தின், வினை வேளாண்மைக்கென மொழி - இன - நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, **‘கனிச்சாறு’** ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய ‘வீறெய்தி மாண்ட’ வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப் பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங்

கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்**, அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்**, ஊக்கப்படுத்திய **திரு.க. ஆகுன்றன்**, கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழம்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,

*14.4.1979* **'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'**

# வெளியீட்டுரை

கனிச்சாறு(பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) தொகுதி முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தபின், 1995 இல் பாவலரேறு மறைவுவரை வெளிவந்த அனைத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று முழுமைபெற்ற முதற்பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை: 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப்பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் ‘பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் _ அடங்கல்’ என்னுமாறு இப்பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ்வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல்கள் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி வினாக்குறி யிடப்பட்டுள்ளது.

இக் கனிச்சாறு தொகுதிகளில், தமிழ்,இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் நாட்டுரிமை, தமிழீழம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம் ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள் முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

2009இல் தமிழக அரசு, பாவலரேறு அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்டது. அதனால் அவர்தம் படைப்புகளைப் பலரும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் வெளிவராத பாடல்கள் பலவற்றையும் நாம் வெளியிட்டால் மட்டுமே மற்றவர்கள் வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்பதால் நாம் முழுமையாக வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

எட்டுத் தொகுதிகளையும் ஒரே நேரத்தில் வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவைப்பட்டதால், முன்வெளியீட்டுத் திட்டம் ‘தென்மொழி’ யில் அறிவிக்கப் பெற்றது.

தென்மொழி அன்பர்கள் பலரும் முனைந்து தொகை அனுப்பி வைத்திருந்தனராயினும், அத் தொகை, தேவையான எல்லைக்கு மிகவும் குறைவான அளவையே நிறைவு செய்தது. நாமும் அந்தக் காலக்கட்டத்திற்குள் வெளியிட இயலாமல் சற்று காத்திருக்கநேர்ந்தது.

அவ்வாறு காத்திருக்கும் காலத்திற்குள்ளும் எதிர்மம், அச்சுக்கூலி, தாள் இவற்றின் விலையேற்றம் அளவு கடந்து உயர்வும் பெற்றன. அவற்றையும் நெருக்கியே வெளியிட வேண்டியதாயிற்று.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

– தென்மொழி பதிப்பகத்தினர்

# கனிச்சாறு ஆறாம் தொகுதி

(காதல், இயற்கை, இறைமை)

## பொருளடக்கம்


| எண் | பாடல் தலைப்பு | பக்கஎண் |
|---|---|---|
| **காதல்** | | |
| 1. | வழிந்த தேன்! | 3 |
| 2. | விரித்த முல்லை! | 6 |
| 3. | உள்ளடம் நொந்தேன்! | 8 |
| 4. | இதுதான் காதல் கூத்தோ? | 10 |
| 5. | என்துயர் தீர்ப்பாயடி! | 11 |
| 6. | என்னடி சொன்னாரவர்! | 12 |
| 7. | விளைந்த பாடல்! | 13 |
| 8. | முத்த வித்து | 15 |
| 9. | ஒப்புமோ? | 17 |
| 10. | ஊர் அறியும் முன்! | 18 |
| 11. | ஊடலுவகை! | 19 |
| 12. | உள்ள அழகு! | 20 |
| 13. | இறுதி நாள்! | 21 |
| 14. | பாரதிதாசன் காதலி! | 23 |
| 15. | ஈக்காதல்! | 25 |
| 16. | காணேன் தோழி! | 26 |
| 17. | முன்னும் பின்னும்! | 27 |
| 18. | குழந்தை வேண்டும்! | 28 |
| 19. | பாவலன் காதலி! | 29 |
| 20. | அழகு எது? | 31 |
| 21. | நானும் அவளும்! | 32 |
| 22. | நிலவு சொல்லாதா? | 35 |
| 23. | பிரிவுத் துன்பம்! | 36 |
| 24. | வளைத்தாய்; வளைத்தேன்! | 37 |
| 25. | காதல் மறத்தி! | 38 |
| 26. | அத்தானின் குறும்பு! | 39 |
| 27. | நாணமென்ன? | 40 |
| 28. | அழற்காதல்! | 41 |
| 29. | அவளும் பெண்! | 42 |
| 30. | தற்காலக் கண்ணகி! | 43 |
| 31. | அரச ஊழியர் மனைவி! | 44 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 32. | அன்புருவே வாழ்க! அறநெஞ்சே நீ வாழ்க! | 45 |
| 33. | இறந்தாள் நினைவு! | 46 |
| 34. | தனிமை கொடியது! | 47 |
| 35. | மணநாள்! | 48 |
| 36. | காதலிக்கு! | 49 |
| 37. | அன்றில் பேடு! | 50 |
| 38. | வாங்க அத்தான்! | 51 |
| 39. | ஒட்டு மாங்கன்று! | 52 |
| 40. | அன்றுபோல் இல்லை...! | 54 |
| 41. | தோழியின் அன்பு! | 55 |
| 42. | என்னுளத்தில் நீந்துகின்றாய்! | 56 |
| 43. | வருவாளோ? | 58 |
| 44. | மகனே இதுகேள்!(முடிவுறாப் பாடல்) | 59 |
| 45. | கலித்துறை (முடிவுறாப் பாடல்) | 60 |
| 46. | இன்பமேன் தோழி! | 61 |
| 47. | வஞ்சித் தாழிசை(முடிவுறாப் பாடல்) | 61 |
| 48. | மருத்துவக் காதல் | 62 |
| 49. | மறப்பரோ? | 64 |
| 50. | காத்திருந்தேன் உங்களுக்கே! | 65 |
| 51. | வீடுமாற்றம்! | 67 |
| 52. | ஒரு காதல் கதை | 74 |
| 53. | வீரனின் காதல்! | 76 |


## இயற்கை


| | | |
|---|---|---|
| 54. | இயற்கையும் தமிழும் | 79 |
| 55. | அருவி! | 80 |
| 56. | கடல்! | 83 |
| 57. | பூவும் புழுதியும்! | 84 |
| 58. | பரிதியின் காதல்! | 85 |
| 59. | காற்றே வாழ்த்துகின்றேன்! | 87 |
| 60. | கனவு களைந்தது | 88 |
| 61. | கடலே! | 90 |
| 62. | காவிரித் தாய்! | 91 |
| 63. | உள்ளக் கூத்து! | 92 |
| 64. | நிலவும் நானும்! | 94 |
| 65. | கலிவிருத்தம் (முடிவுறாப் பாடல்) | 95 |
| 66. | பொறுமை நிறை நிலமே! | 96 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 67. | நீ துகள்! | 98 |
| 68. | குழந்தை..... | 99 |
| 69. | ஆடிய வன்புயல்! | 100 |

## இறைமை

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 70. | உலகத்தின் கடைசிக் கொள்கை! | 105 |
| 71. | உணர்வுக் கனல்! | 107 |
| 72. | ஆடுவித்தாய்! | 108 |
| 73. | செம்பொருள் விளக்கம்! | 109 |
| 74. | இறைப் பத்து! | 110 |
| 75. | உணர்வுப் பத்து! | 112 |
| 76. | ஏன் படைத்தாய்? | 114 |
| 77. | அறியாமை வாழ்வு! | 115 |
| 78. | இறைவணக்கப் பாட்டு! | 117 |
| 79. | வித்தும் விளைவும்! | 118 |
| 80. | நடக்கின்ற செயலனைத்தும் நாடகமே! | 122 |
| 81. | எவ்வழி நினைவோ, அவ்வழி நிகழ்ச்சி! | 123 |
| 82. | துன்பமும் இன்பமும் | 125 |
| 83. | விளையாட்டும் வாழ்க்கையும்! | 127 |
| 84. | ஒவ்வோர் உடம்பும் ஒவ்வோர் உலகம்! | 128 |

# கனிச்சாறு ஆறாம் தொகுதி

(காதல், இயற்கை, இறைமை)

## பாடல் விளக்கக் குறிப்புகள்

----

### –காதல்–

1. தன் நாணத்தை விட்டுத் தன் காதலைக் காதலனுக்குத் தோழிவழி செய்தியாக அனுப்பினாள் ஒருத்தி. இவ்வாறு துணிவது தீமையும் பயக்கும் என்னும் உலகியல் உண்மையைக் கூறி அவள் காதலையும் ஏற்றுக் கொண்டான் அவன்.

2. குளஞ் செல்லும்பொழுது அவளைப் பின்தொடர்ந்தான் அவன். ஏனென்று கேட்க விரும்பினாள் அவள். பின்னர் நடந்தது ஒரு நாடகம். நாடகத்தின் முடிவு இன்பியல்.

3. 'பல தடைகளை மீறி உங்களைச் சந்திக்க வருகின்றேன்' என்றிருந்தாள். வந்திருந்தான் அவன். ஆனால் அவள் வரவில்லையே! ஏன் என்று அலமருகிறது அவன் நெஞ்சம். (மேற்கண்ட மூன்று பாடல்களும் பாவலரேறு ஐயா அவர்கள் தம் பதினைந்தாம் அகவையில் எழுதியது)

4. நூற்றுக்கணக்கான மங்கையரைப் பார்க்கின்றான்; ஆனால் அவர்களிடமெல்லாம் அவன் மனம் செல்வதில்லையே, ஏன்? என்று வியக்கின்றான் தலைவன். இதைத்தான் காதல் என்று சொல்வார்களோ என்பது அவன் கேள்வி.

5. பிரிவிற்குப்பின் திரும்பிய தலைவனை எப்படியெல்லாம் வரவேற்று மகிழ்ந்தாள்! அவனும் என்னென்ன குறும்புகள் செய்தான்! வந்தபின் அவனோடு ஊட வேண்டும் என்று கூறியிருந்த தோழிக்கு அவள் அமைதியன்றோ சொல்ல வேண்டியிருந்தது? இப்பாடல்'பகுத்தறிவு' இதழில் வெளிவந்தது.

6. தலைவனிடம் தூது சென்று திரும்பிய தோழியை 'அவர் சொன்னது என்ன?' என்று துடிப்புற விளித்துப் பாடுகிறாள் தலைவி.

7. பாவலன் வீட்டில் வறுமை தலைவிரித்தாடுகிறது. பாவலன் மனைவி வறுமைச்சுமை தாளாது அவன் எழுதிய பாடல்தாளை எடுத்துக் கிழித்துப் போட்டு அவனது தூவலைப் பிடுங்கித் தரையில் கீறி அமைதி கொள்கிறாள். ஆசிரியர் 1950–51ஆம் ஆண்டுகளில் வறுமை வயப்பட்டு நின்றபொழுது பாடிய பாடல் இது. கண்ணதாசனின் 'முல்லை'யில் வெளிவந்தது.

8. அத்தை மகள் ஒருத்திக்கு முத்தமிட்டுக் காதலை மூட்டினான் ஒருவன்! அவன் தந்த முத்தத்தால் அவள் உள்ளத்தில் காதல் முளைத்துக் கிளைத்து மரமாகிப் படர்ந்தது. இந்நிகழ்ச்சியைச் சுவைபடக் கூறுகிறது இப்பாட்டு.

9. ஒரு கிளியின் அழகு நிலைகள் அவனுடைய காதலியின் அழகுக்கு எந்த நிலையிலும் ஒப்புவதில்லை என்னுங் கருத்தை இனிமையாகக் கூறுவது இப்பாட்டு.

10. தான் காதலித்த பாணன் ஒருவனின் அடையாளங்களைத் தோழியிடம் சொல்லி அவளைத் தேடி வரச் சொல்கிறாள் தலைவி. பாட்டு இசையோடு துள்ளுகிறது.

11. இயற்கைப் பொருள்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைவதை வரவேற்கின்றன. ஆனால் இவளிடத்தில் மட்டும் ஏனிந்த வேறுபாடு? சேரத்தழுவும் தன் கைகளை விலக்கும் வகை என்ன? என்று வியக்கின்றான் தலைவன்.

12. குயிலும் தமிழும் தாமரையுங் கொடியும் எனக்கு உவப்பூட்டும்; உன் அழகு உருவம் எனக்கு எதற்கு? என்று பழிப்பதுபோல் புகழ்கின்றான் தலைவன்.

13. மகப்பேற்றுக்காகச் சென்றனள் அவன் மனைவி! ஆண்டு அவள் இறந்தாள் மகவொடு! ஈண்டு இவன் துன்பம் இது!

14. தமிழை மணந்த பாவேந்தர் பாரதிதாசனிடம் ஒரு பெண் காதல் கொண்டாள். அத் தமிழ் என்னும் பெண்ணைத் தவிர வேறொருத்தியைத் திரும்பிப்பாரேன் என்று மறுத்தான் அப் புலவன். 'வாழ்க' எனக் கூறி வழிநடந்தாள் அவள். பாவேந்தர் பாரதிதாசன் முன்னிலையில் 'பாரதிதாசன் எண்சுவை' என்னும் தலைப்பில் நடந்த பாட்டரங்கத்தில் 'இளிவரல்' பற்றிப் பாடியது.

15. புதுமையான பாடல் இது. ஈக்கள் இரண்டின் இன்பியல் நாடகத்தையும், துன்ப முடிவையும் அழகிய கற்பனையால் வெளிப்படுத்துகிறது இப்பாட்டு.

16. மீன்பிடிப்புக்கெனக் கடலுள் புகுந்த தன் காதலன் வராமையால் வாடிப் போய்த் தோழியிடம் வருந்தித் தன் பிரிவாற்றாமையைக் கூறுகிறாள் தலைவி.

17. அழுதுவடித்தத் தலைவியிடம் தலைவனை அழைத்த வந்தபின்னும் 'மீண்டும் விட்டு விட்டுச் சென்றுவிடுவாரே' என அழுகிறாள் தலைவி.

18. 1952–ஆம் ஆண்டில் 'குழந்தை ஒரு தொல்லை' என்று 'முல்லை'யில் கண்ணதாசன் எழுதியிருந்த பாட்டிற்கு மறுப்புப் பாட்டு இது.

19. காதல் நினைவுகள் வேறு; காதலியின் ஈடுபாடு வேறு; காதல் பாட்டுணர்வை வளர்க்கும். காதலியின் ஈடுபாடு பாட்டுணர்வைத் தேய்க்கும். 'எட்டியிரு; கிட்டேவராதே; என்னை அணைக்காதே; என்பாடல் வாழ வேண்டும்' என்று காதலிக்குத் தடையிட்டுப் பீறிவரும் பாடல்களைப் படைக்கிறான் பாவலன்.

20. நெற்றிப் பிறையும், கூந்தலருவியும் அவனுக்கு அழகாகப் படவில்லை. அவளிடம் அவன் சுவைத்த அழகு எது? பாடல் சுவைபட விளக்குகிறது.

21. அவளுடைய பார்வை, அசைவு, சாயல், நாணம், நடை, இதழ்த்துடிப்பு எனும் ஒவ்வொன்றுக்கும் பொருள் உண்டா? ஒவ்வொரு பொருளையும் சுவைபடக் கூறுகின்றன பாட்டடிகள்.

22. நெடுந்தொலைவு பிரிந்து சென்றவனிடம் 'என்னை நினைக்கும்படி சொல்லாதா இவ்வெரிக்கும் நிலவு' என்று நினைத்து மறுகுகின்றாள் அவள்.

23. பொருள்தேடச் சென்ற தலைவனின் நினைவு, குடும்பச்சுமை இத்தனையும் தாங்கிக் கொள்ள அவள் நெஞ்சம் அவளிடத்தில் இல்லை என்கிறாள்; உண்மைதான். அஃது அவனையே தொடர்ந்து சென்றுவிட்டதன்றோ? 'முகிலில் ஏறி வான்வழியே வந்திறங்கிப் பேதை என்னை வாரியணைத்திடுக' என்று உணர்வுத் தூதனுப்புகின்றாள் தலைவி.

24. வில் வளைத்த பாட்டு.

25. தன் தலைவனை நாட்டை மீட்கும் எண்ணத்தில் நாட்டங் கொள்ளச் செய்கிறாள் தலைவி. அவனுக்காக அவள்தான் என்றுங் காத்திருப்பாளே! நாட்டை மீட்கும் பணியில் இருவரும் சாவதை, இருவரும் சேர்ந்து வாழ்வதைவிடப் பெருமையாகக் கருதுகிறாள். இவள் காதல் மறத்திதானே!

26. 'அத்தான் என்னென்ன குறும்புகள் செய்தான்' என்று தோழியிடம் கூறி மகிழ்கின்றாள் தலைவி.

27. 'இயற்கையின் வளமெல்லாம் நம்மைச்சுற்றிச் சூழ்ந்திருக்க நீ ஏன் வந்திணைந்திடாமல் இருந்து நாணுகிறாய்?' என்று தலைவன் கேட்பதான பாடல்.

28. காதற் கனலில் மெழுகாயுருகும் ஒருத்தியின் எண்ணத் தணலை எடுத்தியம்பும் பாடலிது.

29. ஏழ்மை அவளிடத்திலிருந்த அழகையெல்லாம் தின்னுகிறது. ஆனால் அவளும் ஒரு தலைவனுக்காக ஏங்கிடும் ஒரு பெண்தானே. அவளைப் பற்றிய அவல வரிகள் இவை.

30. மாமி செய்கின்ற கொடுமைகளைக் கணவன்முன் சினப்பட்டுப்பேச, அவளை அமைவுபடுத்திக்கேட்ட கணவனிடம் 'இக்கால அழகு இது' என்றாள்.

31. அரசு ஊழியர் குடும்பத்தின் மாதக்கடைசி நாள்கள் எப்படியிருக்கும் என்பது பற்றிய ஒரு நகையோவியம் இது.

32. தமிழ்நெஞ்சமாய் இருக்கும் அன்புரு நெஞ்சத்தினனை எண்ணித் தலைவி பாடுவதான இனிய பாடல்.

33. இறந்துவிட்ட தன் அன்புத் துணையாளின் இன்ப நினைவைச் சொல்லி ஏக்கமுறும் பாடல்.

34. ‘அவரைப் பிரிந்த தனிமை இவ்வளவு கொடியதாக உள்ளது.’ தலைவனுக்கு ஒப்புதல் கொடுத்துவிட்டு அவனை அனுப்பியபின் உள்ளம் நோகின்றாள் அவள். ‘தென்றலில்’ வெளிவந்த பாடலிது.

35. ‘திருமணம் என்றைக்கு? என்று கேட்டு எழுதியிருந்தீர்கள். அன்னை நாட்டின் அழகு விடுதலை முன்னை வேண்டுக; மூச்சிருந்தால் பிறகு இப் பெண்ணை வந்து தீண்டுக’ என்று பேசுகின்றாள் தலைவி. தூய தமிழ்ப் பெண்ணல்லவோ இவள்! பாவேந்தரின் ‘குயில்’ இதழில் வெளிவந்தது.

36. திடுமென ஒருநாள் காதலியிடம் சொல்லாமல் மறைந்து போனான் தலைவன். தேடித் தேம்பினாள்; வாடிக்குலைந்தாள். இறுதியில் அவனிடமிருந்து ஒரு மடல் வந்தது. “தமிழ்நாட்டை மீட்கப் படையில் சேர்ந்துள்ளேன். முடிந்தால் நீயும் வா!” என்பது அம் மடல். ‘தென்றல்’ இதழில் வெளிவந்தது.

37. 1956–இல் தமிழகத்தின் தென்பகுதியில் அடித்த புயலால் சில நிலப்பகுதிகள் நீருள் மூழ்கின; பல ஏழைக் குடும்பங்கள் துன்புற்று வாடின. பலர் ஏதிலிகளாக்கப்பட்டனர். புயலுள் மாய்ந்த தலைவனை எண்ணித் தலைவி தன் குழந்தைகளுடன் மறுகும் அவலக் காட்சி இது. ‘தமிழ்நாடு’ ஞாயிறு மலரில் வந்தது.

38. தனக்குக் குழந்தை பிறந்த செய்தியை வெளியூரில் உள்ள தலைவனுக்குத் ‘தித்திக்கும் ஒரு செய்தி’ என்று மடல்வழித் தெரிவிக்கின்றாள் தலைவி. குழந்தைக்குத் ‘தனிக்குன்றச் செந்தோளைக் காட்டுதற்குத் தடம் பார்த்துக் கிடக்கின்றேன், வாருங்கள்’ என்று அழைப்பு விடுகின்றாள் அவள். கண்ணதாசனின் ‘தென்றல்’ இதழில் வெளிவந்தது.

39. மனைவியை இழந்தான் ஒருவனிடம், முதியவர் ஒருவர்க்கு மூன்றாவதாக வாய்த்த இளம்மனைவி தன் உள்ளத்து ஆசைகளைக் கொட்டியளக்கின்றாள். இருவரும் ஒட்டுமாங்கன்றினைப்போல் வாழ்ந்தாலென்ன என்று அவன் உளவு கேட்கிறான். கண்ணதாசனின் ‘முல்லை’யில் வெளிவந்தது.

40. சிறு அகவைப் பொழுதில் குளிர்ந்து மகிழ்வித்த நிலவு பருவமுற்றபின் கொதிப்பதேன்? என்று முனிந்து காய்கிறாள் தலைவி. பாவேந்தரின் ‘குயிலில்’ வெளிவந்தது.

41. தலைவியின் பிரிவு அவலத்தைத் தோழி தலைவனிடம் நெஞ்சுருகுமாறு எடுத்துச் சொல்லி அவனைத் தலைவியோடு தலைக்கூடும்படி செய்கிறாள். அவளன்பை வியந்து பாராட்டுகின்றாள் தலைவி. ‘வானம்பாடி’யில் வெளிவந்தது.

42. கைக்கு எட்டாத கற்பனைக் காதலியை உணர்வு வரிகளால் ஓவியப்படுத்தியிருக்கிறது இப்பாடல்.

43. இளம்பெண் ஒருத்தியின் அழகு நலன்களை எண்ணி 'அவள் அருகில் வரமாட்டாளா?' என்று ஏங்கிப் பாடியது.

44. மகனை இணக்கப்படுத்தி, பெண்ணைப் பார்த்து வர அனுப்புகிறாள் தாய்.( எழுதி முடிக்கப்பெறாமல் சுவடியில் இருந்த பாடல்)

45. இப்பாடலும் எழுதி முடிக்கப்பெறாமல் சுவடியில் இருந்தது.

46. இதுநாள் வரையிலும் வராதவன் இன்று வந்ததே தன் பெருமகிழ்வுக்குக் காரணம் என்கிறாள் தோழி.

47. இப்பாடலும் எழுதி முடிக்கப் பெறாமல் சுவடியில் இருந்த பாடல்.

48. மருத்துவத்திற்காக வந்த ஒரு பெண்ணை மருத்துவம் பார்க்கத் தீண்டுகிறார் மருத்துவர். மருத்துவரின் மனைவிக்குப் பொறுக்கவில்லை நெஞ்சம். நல்ல நகைச்சுவைப் பாட்டு.

49. 'தலைவனோடு சேர்ந்து விளையாடிய நிகழ்ச்சிகள், பொழுதுகள் எத்தனையோ. அவற்றில் ஒன்று நினைவுக்கு வந்தாலும், அவர் என்னை மறந்திருக்க முடியாதே' என்று ஏங்குகின்றாள் தலைவி.

50. 'தமிழ் மொழி தாழ்த்தப்படுகிறது; காதல் செய்ய நேரமில்லை' என்கிறான் தலைவன். 'தமிழில் அகத்துறைக்கு விலக்கு இருக்கிறதா' என்று கேட்கிறாள் தலைவி. அவர்கள் காதல் தமிழ்மொழி நலனுக்காக உதவுகிறது.

51. எதிர்வீட்டுக்குக் குடிவந்த மணமான பெண்ணின் இழிநிலையை விளக்கும் கதை பொதி பாடல் இது. 1977இல் பாவலரேறு ஐயா அவர்கள் 'மிசா'க் கொடுஞ்சிறையில் இருந்தபோது எழுதப்பெற்றது.

52. இலக்கியங்கள் யாக்கின்றார், தமிழ் சொல்கின்றார் என்று விரும்பித் திருமணம் செய்து கொண்டவர் தம்மைத் துன்புறுத்தும் அல்லல் கண்டு மனம்வருந்தி அவர் மனந்திருந்தி வாழ்வாரோ என வருந்திப் பாடுவதான பாடல்.

53. மொழி, இன, நாட்டுமீட்பு முயற்சிக்குப் போராடிக் கொண்டிருக்கும் வீரனுக்காக ஓங்கி நிற்பவளுக்குத் தன் கொள்கைக்கான செயல் நிறைவேறிய பின்னே மணப்பதாக அவன் கூறுவதாக இப்பாடல் அமைந்திருக்கிறது. ஐயா அவர்கள் 1994–இல் 'தடா'க் கொடுஞ்சிறைக்குட்பட்டிருந்தபோது, அக்கால் உள்ளிருந்த போராளிகளை மனங்கொண்ட நிலையில் எழுந்ததிப் பாடல்.

**—இயற்கை—**

54. பாவலரேறு உயர்நிலைப் பள்ளி மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தபோது, தம் 14–ஆம் அகவையில் எழுதிய பாடல் இது. 1952 இல் ‘பகுத்தறிவில்’ வெளி வந்தது. ஒரு தாளிகையில் அச்சேறிய முதல் பாடலும் இதுதான். எதுகையில் பொதிந்த ஓரிரு வடசொற்கள் களையப் படவில்லை, காலம் உணர்த்துகையால்.

55. அருவியின் அழகிய இயற்கை ஓவியமிது.

56. கடலைப்பற்றி எழுந்த இனிய கற்பனை இது.

57. இயற்கையைப் பற்றிப் பாடல் எழுதவா? என்று கேட்ட பாவலனிடம் மக்களைப் பற்றி எழுதுங்கள் என்று அறிவுறுத்துகிறாள் மனைவி. பாட்டைப் படியுங்கள்.

58. பரிதிக்குத் தாமரை இதழின்மீது இருக்கும் அன்புணர்வை விளக்கும் அழகிய இயற்கைப்பாடல்.

59. காற்றுடன் பேசுகின்றது பாட்டு. மக்கட்குப் பொதுமைச் சீர்திருத்தம் செய்யவும் காற்றை அழைக்கிறது.

60. கிள்ளும் பசியால் படுத்திருக்கையில் கண்ட கனவு கலைந்த அழகுறு இயற்கைக் காட்சி.

61. கடலின் அழகை விரித்துரைக்கும் அழகுக்காட்சி.

62. காவிரித்தாயின் அழகிய ஓவியமிது. இந்தப் பாடலைச் சிலர் வேறுவகையில் கையாண்டு திரைப்படங்களில் பாடியுள்ளனர். இருபொருளழகு வரப் பாடிய இப்பாடல் இயற்கையின் எழிலைச் சுவைபெற எழுதிக் காட்டுகிறது. ‘தென்றலில்’ கண்ணதாசன் முன்னுரையோடு வந்த பாடலிது.

63. 1959 சென்னைத் தமிழ் எழுத்தாளர் மன்றப் போட்டிக்கு விடுத்த பாடல் இது. பாராட்டும் பரிசும் பெற்றது. பாவலனின் உள்ளம் ஆட்டுவிக்கும் உணர்வுக் கூத்தைப் பாட்டின் ஒவ்வோரடியிலும் காணலாம். திரு.ம.இலெ. தங்கப்பாவின் ஆங்கில மொழி பெயர்ப்புடன் ‘வானம்பாடி’யில் வந்தது.

64. நிலவைப் பெண்ணாய்ச் சொல்லி உவந்து பாடிய அழகிய இயற்கைப்பாடல்.

65. முடிவுறாப் பாடலாய்ச் சுவடியில் இருந்தது

66. நெறியற்ற மாந்தர்க்கு நெறிமுறைகள் கூறும்படி வானப்பறவைகளையும் காட்டுவிலங்குகளையும் பட்டுப்பூச்சிகளையும் தாமரைப் பூக்குளத்தையும் தேனுண்ணும் வண்டினத்தையும் நீந்தும் மீனினத்தையும் பல்லி, தேள், பாம்பு போன்ற நச்சுயிரினங்களையும் இறைஞ்சி அழைக்கின்றது இப்பாட்டு.

67. An expert is one who knows more and more about less and less என்பது ஆங்கிலப் பொன்மொழி. ஒரு சிறு துகளைப் பற்றி எவ்வாறெல்லாம் நினைத்துப் பார்க்க முடியும் என்பதை விளக்குகிறது இப்பாட்டு.

68. குழந்தையின் அழகை அழகுறச் சொல்லும் பாடல்.

69. 1977–இல் தமிழகத்தையும் ஆந்திரத்தையும் அலைக்கழித்த புயலைப் பற்றிய இயற்கை ஓவியமிது. 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளிவந்தது.

**–இறைமை–**

70. இறுதியில் இவ்வுலகில் என்னென்ன கொள்கைகள் வாழும்; எவையெவை வீழும் என்பது பற்றிய படப்பிடிப்பு இது. மாந்த இனத் தொடக்கத்திலிருந்து படிப்படியாக வரும் மாற்றங்களும் மேலாளுமை செய்யும் கொள்கைகளும் இதில் விரித்துரைக்கப் பெறுகின்றன.

71. உணர்வுக் கனல் இது. வெதும்பலுறும் பாவலரின் மனம் என்ன பாடுபடுகிறது! எத்தகைய கதறல்!

72. ஆசிரியரை இயக்குகிறது இறைமை என்று சொல்கிறது இப்பாட்டு. அவர் என்ன சொல்கிறார்?

73. சொற்களின் பொதுப்படவான பொருள் அல்லாமல் அதன் ஆழ்பொருளை விளக்கும் பாடல்.

74. இறை என்பது எது? உலகம் தோன்றிய நாளிலிருந்து விடுக்கப்படும் வினா. பத்து வெண்பாக்களில் மறுக்க வொண்ணா விடைகள் கூறப்பெறுகின்றன.

75. மெய்யுணர் வில்லாதவர்கட்கு மெய்யுணர்வு கொடுக்கும் பத்து முத்துப்பாடல்கள் இவை.

76. உயர்வான பல பொருள்களையும் படைத்துத் தந்த இறைமை, சிற்சில தீமைகளையும் ஏன் படைத்திடல் வேண்டும் என்று அலமருகிறது நெஞ்சம்.

77. மக்களினச் சிறப்பு இழிவுபடுத்தப் படுகிறது. உலகில் அறியாமையால் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு அறிவு கொளுத்துகிறது இப்பாடல்.

78. ஆங்காங்கு நடைபெறும் கூட்டங்களிலும், விழாக்களிலும், பொதுவுணர்வெழுப்ப வேண்டிய பள்ளிகளிலும் தொடக்கத்தே பாடப்பெறும் இறைவணக்கப் பாட்டுப் பொதுவானதாக இல்லை என்ற குற்ற ஆசிரியரிடம் கூறப் பெற்றதுண்டு. எனவே மாந்த இனத்திற்கே பொதுவானதும், மெய்யுணர்வு ஒன்றே கொளுவப் பெற்றதுமான இப் பாட்டை எழுதினார். பொதுவினார் பயன்படுத்திக் கொள்க.

79. தொடக்கக்காலத்துத் தென்மொழித் தொடர்பாளர்களின் துயர அழுத்தங்களால் கிடைத்த நல்ல பாடங்களுள் இதுவுமொன்று. ஆசிரியர் அறிவு திறந்து தம் நெஞ்சத்துடன் உரையாடுவதும், நெஞ்சம் அவர்க்கு விடையிறுப்பதும் எத்துணை வியத்தகு உணர்வு வெளிப்பாடுகள்! ஆழ்ந்த கருத்துகள் ஊடாடுகின்றன. கரிக்கொட்டைகள் உணர்வுச் சூட்டுள் வயிரமணிகளாக மாறுவதுபோல் கற்பனை மூட்டங்கள் வாழ்வின் துன்பச் சூட்டால் பாடல்மணிகளாகத் தெறிக்கின்றன. அழுந்திச் சுவைத்துப் பாருங்கள்.

80. பொருள்களில், மக்கள் நிலைகளில், வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதை மெய்யறிவோடு பொருத்திக் கூறுகிறது.

81. உலகின் நிலையாமை நிலைகளும், அவ்வுலகில் மாந்தன் அவனையறியாமலேயே வந்து பிறப்பதும் வாழ்வைத் துறப்பதும் நேர்கின்றன. இவ்விடைநாள்களையே அவன் வாழ்க்கை என்கிறான். இங்கு வாழும்வரை அவன் நல்லவற்றையே தேர்ந்து நல்லதொரு சிறப்பு வாழ்க்கையே வாழவேண்டுமென்னும் கருத்தை எடுத்து வலியுறுத்துவது இப்பாடல். மெய்ப்பொருளுணர்வு முகிழ்க்கப் பாடியது.

82. துன்பம் என்பதும், இன்பம் என்பதும் வெறும் மான உணர்வுகளா? எவ்வளவு விளக்கமாக உரைக்கிறது இப்பாடல். எத்தனை எத்தனை வேறுபாடுகள்! எத்தனை எத்தனை உள உணர்வுகள். பாட்டில் தோய்ந்து பாருங்கள்.

83. இவ்வுலக வாழ்க்கையும் விளையாட்டின் தன்மையில் எவ்வாறு இயைந்திருக்கிறது எனத் 'தமிழ்ச்சிட்டு'களுக்கு எழுதிய மெய்ம்மைப் பாடல்.

84. உலகத்தின் சொல்சுருக்காய் இவ்வுடலம் இயங்கிக் கொண்டிருக்கையில் எவர் ஒருவரும் தம் கடமைத் தவறாமல் செயலாற்றிடச் சொல்லுகிறது பாடல்.

## கனிச்சாறு ஆறாம் தொகுதி

(காதல், இயற்கை, இறைமை)

## பாடல் முதற்குறிப்பு


| பாடல்முதற்குறிப்பு | பாடல் எண் |
|---|---|
| அத்தான் !என் | 38 |
| அத்தைக்கொரே மகள் | 8 |
| அதிர்ந்ததுவண்டி | 51 |
| அவள்விரும்பி | 52 |
| அவள்விழிகள் | 21 |
| அறம் எனச் சொல்லுவ | 73 |
| அன்புள்ள அத்தான் ! | 35 |
| அன்புள்ள என்னத்தான் ! | 23 |
| அன்று பார்த்த | 53 |
| ஆற்றாத பேருணர்வோ, | 71 |
| இதுவரை நுகரா | 60 |
| இருகண்கள் வீழருவி | 41 |
| இறைவநின் அருள்செவி | 76 |
| உமக்கெனப் பூத்தவள் | 48 |
| உன்னை, இவ்வுலகத்தின் | 19 |
| உனக்குமுன்னும், இவ் | 81 |
| ஊனுயிரை உந்துவதும் | 74 |
| எண்ணருங் கோடி | 67 |
| எரிதழற் பரிதி மாய்ந்து | 3 |
| என்னடி சொன்னார் | 6 |
| என்னை இறையென் | 72 |
| என்னை எழுதென்றே | 7 |
| என்னைப்பேரன்போடு | 33 |
| ஒவ்வோர் உடம்பும் | 84 |
| ஒளிதவழும் முகம் வாடி | 31 |
| ஒடிஒளிந்துன் ஒளிமுழ்கி | 40 |
| ஒவிய நலன்கள் | 43 |

| பாடல்முதற்குறிப்பு | பாடல் எண் |
|---|---|
| கடல்நீரை மேகம்உண்டு, | 55 |
| கத்தரிப் பிஞ்சுகள் | 37 |
| களிப்புற்றாய் | 61 |
| கன்னங் கரியமுடி ! | 68 |
| கன்னியை எண்ணாரோ? | 22 |
| கனியின் சுவையும் | 34 |
| காட்டுவழி கடந் | 49 |
| காணேன்தோழி ! | 16 |
| காத்திருந்தேன் உங்களுக்கே ! | 50 |
| காற்றே ! யான் | 59 |
| குடத்தினை இடுப்பிலே | 2 |
| குயில்போலும் குரலினாள்; | 28 |
| கொத்தான மலரினைக் | 26 |
| கொழித்த செந்தமிழ்க் | 14 |
| கோட்டு மலரெனக் | 25 |
| கோவை இதழ்க்குன்றன் | 9 |
| சோலையில் ஊதுங் | 54 |
| தாயுந் தாதையுஞ் | 75 |
| துன்பம் என்பதோ | 82 |
| தென்மொழிக்கே | 79 |
| நடக்கின்ற செயலனைத்தும் | 80 |
| நானிருக்க என | 27 |
| நிலமெனும் பெண்ணுக் | 56 |
| நீந்தும் கடலலை | 20 |
| நெஞ்சமெனும் நீள்விசும்பில் | 32 |
| நெடுநாள் மறந்தவன் | 5 |
| பானையில் உள்ள | 1 |
| பீடுறு மயிலே ! | 36 |
| பூங்குயில்,வண்ணப் | 57 |
| பூவிரித்தாய்; வண்ணப் | 62 |
| பெருநீர் வடித்தழுத | 17 |
| பொன்னே போலுடை | 46 |

| | |
|---|---|
| மக்களினம் இவ்வுலகிற் | 70 |
| மகனே இது கேள்! | 44 |
| மடப்பிடியைமதவேழம் | 47 |
| மருந்தாலும் தீராத | 4 |
| மன்பதையின் சிறப்பறியீர்; | 77 |
| மாங்குயில் இசைகேட் | 12 |
| மாட்டுத் தொழுவத்திலே, காண | 15 |
| மாமலர் தடவிய | 30 |
| மானுக்கு நிறமும் | 29 |
| முல்லை! இவ்வீட்டிற்கு | 39 |
| முழுமை நிலவின் | 18 |
| மெல்லியந் தென்றல்வந் | 63 |
| யானுந் தோழியு | 45 |
| வந்துவந்து வாழ்ந்துயிர் | 13 |
| வாழ்க்கை எனும் | 83 |
| வானங் கருத்தது; | 69 |
| வானத்து நீள்நெஞ்சில் | 42 |
| வானத்து முகிலில் | 11 |
| வானப் பறவைகளே | 66 |
| விரிவிசும்பை செங்கதிரை | 78 |
| வில்வளைத்தாய்; பின்னுன் | 24 |
| வெள்ளி நிலா | 65 |
| வேடிக்கை என்னடி | 10 |
| வேய்தலை நீடிய | 64 |
| வையத்தின் மக்கள் | 58 |

# காதல்

## 1 வழிந்த தேன்!

*பானையில் உள்ள பாலோ*
*'பருகெ'னச் சென்று கூவிப்,*
*பூனையை அழைப்ப தில்லை;*
*பூவுந்தன் னிடையில் தங்கும்,*
*தேனைவந் துண்ணு தற்குத்*
*தும்பியை அழைப்ப தில்லை;*
*ஏனைய பொருளும் இவ்வா*
*றிருக்க நான் அழைப்ப தேனோ?* 1

*தாமரைப் பெண்ணோ, தங்கத்*
*தழல்வந்து கலவா முன்னர்,*
*தாமாக பெண்மை என்னும்*
*தீங்கனி கிளிபாற் சென்று*
*தாமாக 'வா'னெப், பெண்மைத்*
*தன்மைவிட் டழைப்ப தில்லை;*
*ஆமென்றால், அவனை நான்போய்*
*அணைப்பதற் கழைப்ப தேனோ?* 2

*"யாழினில் இசையை வேண்டின்,*
*அருகிற்சென் றிசைத்தல் வேண்டும்;*
*ஆழியான் தன்னைத், திங்கள்*
*அணைத்திட முந்த வேண்டும்;*
*நாழிதோய் இன்பத் திற்கோ*
*நாணத்தை யகற்றல் வேண்டும்?"*
*தோழியிவ் வாறு கேட்டுந்*
*துணைவரை அழைப்ப தேனோ?* 3

*தென்றலைத் தோழி யாக்கித்*
*தெள்ளிய மகரத் தூளை,*
*மன்றலின் ஓலை யாக்கி,*
*மலர்ப்பெண்ணாள் தேனை உண்ண,*
*பொன்றளிர்த் தும்பி தன்னைப்*
*புறப்பட்டு வரச்சொல் கின்றாள்!"*
*என்றனள் தோழி; நானும்*
*எழுதியோர் மடலைத் தந்தேன்!* 4

சென்றவள் மீண்டும் வந்து
செய்தியைச் சொன்னாள்; சின்னக்
குன்றினை இரண்டு தோளாய்க்
கொண்டவன்; என்னுள் ளத்தை
வென்றவன்; நெஞ்சில் என்றும்
விலகாமல் எழிலைக் காட்டி
நின்றவன் மறுத்தான்; என்னை
நெருப்பினில் தூக்கிப் போட்டான்! 5

“பானையில் உள்ள பால்போய்ப்
‘பருகெ’ன அழைத்தும், வாராப்
பூனையைக் கண்ட தில்லை;
பூவோ,தன் னிடையில் தங்கும்
தேனைவந் துண, அ ழைத்தும்
திரும்பிய தும்பி யில்லை;
ஏனைய பொருளு மவ்வா
றிருந்திட மறுத்த தேனோ? 6

கனியொன்று விழைந்தும் வாராக்
கிள்ளையைக் கண்ட தில்லை;
இனிமைச்செந் தமிழில் யாழ்செய்
இசையினை வேண்டா தார்யார்?
தனிமையில் அவனுக் கின்பம்
துளியேதவ் வாறி ருக்கக்
கனியிதழ் வேண்டா மென்று
கழறிய தேனோ, காணேன்!” 7

வாய்விட்டு மேலே சொன்ன
வாறெலாஞ் சொல்ல, தோழி
வாய்விட்டுச் சிரித்தாள் “என்கண்
வடித்தநீர் உலரும் முன்னே
போய்விட்டு வந்தாய் தோழி,
பொய்நீக்கி மெய்சொல்” என்று
காய்விட்டுக் கனிகண் டாற்போல்
கெஞ்சினேன்; இதனைச் சொன்னாள்; 8

"இனிமைத்தேன் இளமைக் கொப்பே!
இதழுக்கு நாணம் ஒப்பு!
கனிகின்ற இளமை போல்தேன்,
கசியினும் நாணம் என்ற
அணியித ழிட்டு மூடி,
அடங்கப் பெண் பழக வேண்டும்;
துணிவது தீ" தென் றானாம்!
துள்ளிற்றென் உள்ளத் தன்பு! 9

**-1948**

## 2 விரித்த முல்லை !

குடத்தினை இடுப்பி லேந்திக்,
குளஞ்சென்றேன் தோழி! செல்லுந்
தடத்தினில் ஒருவன் நின்று
தவித்தலைக் கண்டால், அந்த
இடத்தினில் ஒருவர்க் காக
எதிர்பார்ப்பான் போல்வான்! ஆனால்
எடுத்தெனை விழுங்குவான் போல்
ஏனவன் பார்த்தல் வேண்டும்? 1

விழியினைப் பாதை தன்னில்
விளையாட விட்டுக், கால்கள்
வழியினை வருடு மாறு
வளர்தென்னஞ் சோலை தாண்டி
எழிலினை மலர்கள் தூவும்
குளஞ்சென்றேன் தோழி! முன்செய்
பழியினை வாங்கு வான் போல்
பார்த்தேனோ வெயர்த்தல் வேண்டும்? 2

அடியினை அடிவந் தெட்ட
அவைதம்மோ டென்கண் சென்று
படியுமா றங்குச் சென்றே,
புனல் மொண்டு திரும்புங் காலென்
அடியினைத் தொடர்ந்தா னென்றெ
அஞ்சிநான் பார்க்குங் காலேன்,
குடியனைப் போல நோக்கிக்
குறுநகை சிந்தல் வேண்டும்? 3

(வேறு)

பொங்குமலை நீர்சுழித்து மடங்கி வீழ்தல்
போல் சிலிர்க்கும் தென்னோலைத் தென்றல் வாழுந்
தெங்கு மரத் தோப்பின் வழிச் சென்றே தோழி,
தெள்ளுபுனல் கொண்டுவருங் காலென் னோடு,
தங்குவதுந் தயங்குவது மாக வந்தே
தவித்திடுதல் கண்டே நான் திரும்பி நின்றேன்.
அங்குமிங்கா யவன் பார்த்தே வெயர்த்த தேனோ?
அவனுடற்பின் நடுங்குதலேன் வேண்டும் தோழி? 4

முத்தெடுத்துக் கோத்தாற்போல் அரும்புப் பாளை,
முடிச்சிட்ட பொற்பதக்கக் குரும்பு தொங்க;
கொத்தாகக் குலையாகக் காய்கள் ஈனும்
குளிர்தென்னஞ் சோலைவழிச் சென்றே, மீனை
எத்தாகக் கொத்திடவே நாரை நிற்கும்
எழிற்குளத்தின் புனல்மொண்டு வந்தேன், தோழி,
பித்தாக என்னையவன் நோக்கி, ஏனோ
பிதற்றுவான் போல் ஏதோ சொல்லல் வேண்டும்? 5

வான்விரித்த வாறிருக்குந் தென்னந் தோப்பின்
வழிநடந்தே, அல்லி மலர் வண்டு குந்த,
தேன் சொரியும்; குளஞ்சென்றே புனலை மொண்டு
திரும்புங்கா லெனைவளைத்துத் தடுத்துப் பின்னை
ஏன்சிரித்தான்? தோழி, அவன் என்பேர் கேட்டான்,
'இருவாட்சி' என்றேனா, உடனே என்னை,
'மான்' என்றான்: 'மயில்' என்றான்; 'மலரே' என்றான்;
மறுநொடியில் கைநீட்டித் தொடலேன் வேண்டும்? 6

தொட்டகை நடுங்கிற்று! நடுங்கிற் றுள்ளம்!
தோளில் அவன் கைவீழக் குடத்தை விட்டேன்.
விட்டகுடம் விழுந்ததவன் காலில்; நானோ
வெடுக்குற்றேன்; தோழி, என்நெஞ்சை ஏதோ
தொட்டிழுக்கக் கீழ்க்குனிந்தே அவன்கால் தொட்டேன்;
துணுக்குற்றான்; ஆயினும் என் உயிரைத் தன்பால்
கட்டியிழுப் பதுபோன்றோர் பார்வை சிந்திக்,
கண்ணீரைத் தான்விட்(டு)ஏன் வருந்தல் வேண்டும்? 7

'பிழை செய்தேன்' என்றான்; நான் 'இல்லை' என்றேன்.
'பின்னென்ன செய்தேன்நான்?' என்றான் மீண்டும்!
'பிழை செய்யத் தூண்டினீர் அன்றோ?" என்றேன்.
பின்னலினைத் தொட்டிழுத்து முகத்தை ஏந்தி,
'தழைக அன்பு இன்றுமுதல்; அதற்கு வித்தைத்
தருகின்றேன்' என்றியம்பிக் கூந்தல் நீவி,
மழை போலும் சொரிந்திட்டான் முத்தம்; காதல்
மடைதிறந்து விட்டவன் ஏன் மறத்தல் வேண்டும்? 8

**-1948**

## 3 உள்ளம் நொந்தேன்!

"எரிதழற் பரிதிமாய்ந்து மேற்கு வானில்
இறங்கிய பின் வருக, அத்தான்" என்றே நீண்ட
சுரிகுழற் கரும்பு சொன்னாள் என்றே, தாழை
செறிந்துள்ள மடுச் சென்றேன்; காத்து நின்றேன்!
விரிந்துள்ள அவ்விருளில் மெய்யை மூடி,
வெண்முகத்தில் ஒளிபூசி நிலவுப் பெண்ணாள்
புரிந்து வரும் புன்னகையின் குளிர்மை கண்டேன்;
பொழில் மேனி வரக்காணா துள்ளம் நொந்தேன். 1

கருங்குழலைப் பிய்த்தெடுத்து வானில் வீசி,
கண்சிமிட்டும் விண்மீனில் பார்வை தோய்த்து
மருங்கெழிலைத் தென்றலிலே ஆடு கின்ற
மடுத்தாழை மலரதிலே பிழிந்து வார்த்தே,
அருங்காதல் இன்மொழியைக் கிள்ளை வாயில்
ஆடவிட்டுப், பொன்னுடலின் குளிர்மை யெல்லாம்
வருந்தென்றற் காற்றினிலே ஊற்றி விட்டு,
வார்ப் பதுமை வரக்காணா துள்ளம் நொந்தேன்! 2

"குளஞ் செல்லுங் காலென்றன் தாய் என்னோடு
கூடவரு கின்றாள்; நான் தோட்டஞ் சென்றால்,
இளந் தங்கை தனையனுப்பு கின்றார், பெற்றோர்!
எத்தனைநாள் இவ்வாறாய்த் தடைகள் வந்தே
உளஞ்சாக உடல்தேய உயிரோ மாள,
உமைக் காட்டா தெனை மாய்க்கும்? அத்தான், இன்றே
உளந்துணிந்தே விட்டேன்; செம் பரிதி மாய்ந்த
ஒருபொழுதில் ஓடிவருகின்றேன்" என்றாள்! 3

கடைக்கண்ணில் நீர்வடிய உதட்டின் செம்மை
கருக, உளஞ் சோரவுடல் வாட, "அத்தான்,
படை திரண்டு வந்தாலும், தந்தை என்னைப்
பழிவாங்க முனைந்தாலும், வீட்டில் பூட்டித்
தடைசெய்து வைத்தாலும், தணியாக் காதல்
தணிக்க வரு கின்றேன் நான்" என்று சொல்லி,
விடைபெற்ற மின்னலிடை வருவாள் என்று
விடியும்வரை, காத்திருந்தே உள்ளம் நொந்தேன்! 4

"தாயருகில் படுத்துக்கண் காணித் தாலும்
தடைசெய்யத், தந்தை, கத வருகே சென்று,
பாய்போட்டுப் படுத்தாலும், உள்ளக் காதல்
பாய்ந்துவரின் நானெதற்கேன் அஞ்சல் வேண்டும்?
காய்கதிரோன் அவிந்தவுடன் குளிர்ந்த தென்றற்
காற்றடிக்குந் தாழைமடு மணலின் மேட்டில்
போயிருங்கள் அத்தான்! இப்பொழுதே நான்
பூங்காதல் மொழிபயில வருவேன்" என்றாள்! 5

பொன்மேனிச் செம்பரிதி மேற்கு வானில்
போய்த் தொலைந்தான்; பூரித்துச் சென்றேன்; இன்பத்
தென்றற்பெண் வந்திருந்தாள்; நிலவு வந்தாள்;
தெள்ளியநீர்த் தேக்கத்தில் முல்லைப் பெண்ணாள்
என்றன் வர வறிந்துடலம் நாணி நின்றாள்;
என்னபயன்? இரவெல்லாம் காத்தேன்; உள்ளம்
வென்றவளைக் காணவில்லை! துடித்தேன்; நெஞ்சின்
விழிப்பாவை காணாதென் உள்ளம் நொந்தேன்! 6

**-1948**

## 4 இதுதான் காதல் கூத்தோ?

மருந்தாலும் தீராத மனநோய் உன்றன்
மலர் முகத்தின் குளிர் விழியால் மாயும்; வானப்
பருந்தாலும் இயலாத கூர்ந்த பார்வை!
பணிவு மொழி! கனிவிரக்கம் இவற்றோ டன்பு
விருந்தாலும் நீ என்னை மகிழ்விக் கின்றாய்!
வேறுபலர்க் குன்னைவிட அழகா இல்லை?
இருந்தாலும் நான் உன்னை விரும்பு கின்றேன்!
இதுதான் நற்காதல் எனும் இனிய கூத்தோ?

தண்ணீரில் தோய்த்தாலும் தணியா வெம்மைத்
தழல் பாய்ச்சும் நெஞ்சரங்கில் உன்னைப் பற்றி
எண்ணம் வரின் பனிமலையின் குளிர்மை தோயும்!
யான் காணும் பாவையர்பால் உனக்கிருக்கும்
கண்ணமைப்பா இல்லை? முக நிலவா இல்லை?
கார் குழலில் ஒளியிலையா? இருந்தா லும்நீ
பெண்ணமைப்பில் வான் உச்சி! அழகே! உன்றன்
பித்தந்தான் காதல் எனும் மகிழ்வுக் கூத்தோ?

மூடாத விழிக்குள்ளே ஒளியாய் நின்றாய்!
மூச்சுக்குள் இயங்கு கின்றாய்! உள்ளத் தேறி
ஆடாத வகையாடி அதிர்வு செய்வாய்!
ஆயிரம்பேர் நின்றாலும் அணங்கே உன்னைத்
தேடாத முன் வந்து தோற்றஞ் செய்வாய்!
தோயாத நிழல்போலத் தொடர்வாய்! உன்னைப்
பாடாத நாளுண்டோ? பாவாய்! உன்றன்
பற்றுத்தான் காதல் எனும் ஆடாக் கூத்தோ?

எங்கேயோ நான் பிறந்தேன்! நீ பிறந்தாய்!
இமிழ் கடலின் ஒளிமுத்தம் பொற்கம் பிக்குள்
தங்குவது போல் ஒன்றிப் போனோம்! ஆயின்
தனியா நீ பேருலகில்? உனக்கு முன்னம்
மங்கையரை நான்பார்த்த திலையா? உன்போல்
மற்றவரேன் ஈர்க்கவில்லை? உனக் கிருக்கும்
திங்கள் முகம் என் உளத்தில் தோய்ந்த தேன்? அத்
தோற்றந்தான் காதல் எனும் அழியாக் கூத்தோ?

-1950

## 5 என் துயர் தீர்ப்பாயடி!

நெடுநாள் மறந்தவன் இன்று வந்தென்னைத்
தொடுகையில் மறத்தே னடி ! - இன்பப்
படுகையில் வீழ்ந்தே னடி!

தேடியலுத்தவன் போல் வந்து நின்றான்
ஓடியொளிந்தே னடி! - முகம்
வாடிக் குலைந்தா னடி!

பூசிய அகிலொடு வந்து நின்றான் என்றன்
ஆசை மிகுந்த தடி! - கடிந்து
பேச மறந்தே னடி!

பின்வந்து கண்பொத்த நாணிநின்றேன்; அவன்
அன்பாய் அணைத்தா னடி! - நல்
இன்பத்தைத் தந்தா னடி!

காடு கமழ்ந்ததே என்றான்; என்னுளம்
ஏடு வரைந்த தடி! - பெற்ற
வீடு மறந்தே னடி!

முல்லை சிரித்ததே என்றான்; என்னுள்ளம்
தொல்லை மறந்த தடி! - இன்ப
எல்லை கடந்தே னடி!

தாமரை பூத்ததென் றானிரு கன்னங்கள்
ஆமென நாணிற் றடி! - வாய்
போமென ஊடிற் றடி!

நெற்றி வியர்த்ததே என்றான்; என்முகம்
ஒற்றி மகிழ்ந் தானடி! - நின்ற
பெற்றி குலைந்தே னடி!

சென்ற திசைகளி லுன்முகம் கண்டேன்
என்று மகிழ்ந்தா னடி! - அன்பை
வென்று கிடந்தே னடி!

வந்தவன் செல்வேனான் என்றா னென்னுளம்
வெந்து மடிந்த தடி! - தோழி
எந்துயர் தீர்ப்பா யடி!

-1950

## 6 என்னடி சொன்னாரவர்?

என்னடி சொன்னார் அவர்,தோழி
என்னடி சொன்னார் அவர்?

தன்னடி பெயராமல் இருப்பவர்க்கே இந்த,
தையலைப் பற்றி நீ சொல்லிடச் சொல்லிட (என்னடி)

முன்னொரு நாளவர் புன்னை மரத்தடி
மொழிந்ததும், நாட்கள் கழிந்ததும், கூறியிவ்
வண்ணம் அவரிலா துடலுயிர் சோர்ந்ததும்,
அன்றே மறந்தவர்க் கின்று நீ சொன்னதும், (என்னடி)

ஊமையன் கண்ட கனவது போலவே
உள்ளத் தமைந்தவர் காதல் வளர்த்தபின்,
ஆமை விரைவதும் காணா திருப்பவர்க்(கு)
ஆயிழை மேனி குலைந்ததைச் சொன்னதும், (என்னடி)

வந்தவன் ஒருவற்கென் அன்னை சொல் அளித்ததும்,
வங்கத்து வணிகனுக் கென்தந்தை இசைந்ததும்,
சிந்தனை யற்றவர்க் கியம்பி, இச் சிட்டங்கு
சிறகடித்தே வர இருப்பதைச் சொன்னதும், (என்னடி)

ஒளிநீங்கும் வானத்தை இருள்வந்து தழுவ,
ஊர் மக்கள் துயில்போன ஒருநொடியில் இந்தக்
கிளிவந்து தங்கும், அக் கொன்றை மரத்தடியில்
காத்திருக்க நான்சொன்ன
கதையினைச் சொன்னதும் (என்னடி)

-1951

## 7 விளைந்த பாடல்!

என்னை எழுதென்றே என்னுளத்தி லோருணர்வு
பின்னலிடுங் காலை பெருந்தூவல் தாளுமெடுத்(து)
ஆழ்ந்த நினைவோ டமர்ந்திருக்க, என்மனைவி
வாழ்ந்த கதைபாடி வாழ்நிலையைப் பாட
எதிர்வந்து பலவா றியம்பிப் புலம்பிச்
சதிராடி நின்றென் செவிவருந்தச் சொன்னாள்:

"அரிசியில்லை என்றேனே; ஆர்கேட்டார்? வாய்க்கோர்
'சுவை'யுள்ள பண்டமென ஒன்றுண்டா? மேலுக்கோர்
சட்டைத் துணியில்லை; நேர்வீட்டுக் காரியிடம்
கட்டையொன்று கேட்டுக்
'கணக்குவைத்துக் கொள்',என்றேன்!
'வாங்கியுள்ள கட்டை வருதற்குள் வல்லுயிரைத்
தாங்கியுள்ள கட்டையுடல் தான்வேகும்' என்றாள்!
குடிக்கூலிக் காரன் கொடுஞ்சினத்தோ டென்னை
நடைக்கூலி கேட்டான். 'நாலுழக்குப் பால்தந்த
பின்என்றன் மாடுமிங்குப் போட்டதிரு கன்'றென்றே
சொன்னான், தெருவதிரப் பால்காரச் சொக்கன்.
எருவாட்டிக் காரியுந்தான் இன்றுவந்தாள்; 'அம்மா
வெந்தபணம் தேடாமல் வீடுவந்து சேரு' மென்றாள்.
முந்தாநாள் வாய்கிழிந்த மோர்க்காரி இன்றுவந்தே,
'இந்தாம்மா, கத்திக் கடைவாய் கிழிந்ததினி
இல்லையென்று கூறுகின்ற வாய்கிழிப்பேன்' என்றபடி,
கூரை கிழிவதுபோல் கூத்தாடிப் பின்சென்றாள்,
ஆரைப் பணிந்துபோ என்றுரைப்பேன்; நாளொன்றா?
காலை எழுச்சி கடன்காரன் பாடுகின்றான்;
மாலை விழுந்தாலோ மாபாடல் பேசுகின்றீர்!
அப்பப்பா! நானென்ன ஆளா? அடிபோன
கொப்பா? குரங்கா? குமரிப்பெண் தானே!

பொறுப்பேனா? மற்றவரைப் போல்தானே நானும்;
இருக்காதா ஆசை? இருந்துநான் பெற்றதென்ன?
உங்களுக்கு நான்மனைவி என்னும்பேர் ஒன்றல்லால்
பொங்கலுக்குப் பொங்கலன் றாகிலுமோர் புத்தாடை
கண்டேனோ? இல்லையே! காரம் இனிப்பெனவே
உண்டேனா? இல்லையே! ஊரார் உணராரா?

பூக்காரி வந்தாலோ ‘போபோபோ’ என்கின்றீர்!
பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாழுமனம் பட்டேனா?
தாய்கொடுத்த சேலை! திருமணத்தில்!! வந்துபோய்
ஆயிற்றோ ரைந்தாண்(டு); அதிலுமறு நூறுபொத்தல்!
நானென்ன கேட்க? நகைநட்டா? பட்டுடையா?
ஊணுண்ண மாட்டாமல் ஓரிரண்டு நாளா?

உயிருடலைத் தின்றூசல் ஆடுகின்றோம்: நீங்கள்
அயர்வின்றி எப்பொழுதும்
அன்பொழுகும் சொல்கூட்டிக்
காதலென்றும் வீரமென்றும் தீட்டுகின்றீர் செம்பாடல்!

ஊதற் குளிர்காற்றால் ஒட்டும் உடம்புக்குப்
பாட்டென்ன? இன்றே புறப்படுங்கள் என்னோடே!
தேட்டமுடன் வாழ்ந்துநாம் தேர்ந்தபணி செய்தே
பிழைப்ப’ மெனத் தூவலுந் தாளும் பிடுங்கிப்
பழையதுணி தன்னைப் பிடித்துக் கிழிப்பதுபோல்
தாளைக் கிழித்துத் தரையையென் தூவலினால்
ஆழ உழுதாள்; அதிலதனைப் போட்டு
விதைத்தாள்போல் மூடியளாய் வெற்றி முழக்கோடே
‘தைைத்தா’ வென் றாடிநின்றாள்; ‘தாளிலுள்ள பாடல்
முளைத்தாலும் நன்கு முளைக்கட்டும்; பின்பு
கிளைத்தாலும் நீண்டு கிளைக்கட்டும்’ என்றென்னைக்
கூட்டிச்சென் றாள் - என்றன் கூடுமட்டுந் தான்செல்ல
நாட்டிச்சென் றேனிதனை நான்!

-1951

## 8 முத்த வித்து!

அத்தைக் கொரே மகள் உண்டு -அவள்
ஆன எழிற்கு உருவாக இருந்தாள்!
முத்தைச் சொன்னால் அவள் பல்லாய் - அதில்
மூத்த கள் ஊறுதல் எங்ஙனும் உண்டோ?
கத்துங் குயிலிசை தன்னில் - இளங்
காதல் மயக்கந்தான் மூளுதல் உண்டோ?
பித்துப் பிடித்தவன் போல - இளம்
பேட்டினை அன்றொரு நாளில் வளைத்தேன். 1

"கொத்தும் என் உள்ளத்தைப் பாராய் - அது
கூறும் மருந்தினை நீவந்து தாராய்!
செத்துக் கொண்டேவரு கின்றேன் - உடல்
தென்பு குறைந்ததென் அண்டையில் நில்" லெனப்
புத்தம் புதுவுரை சொன்னேன் - அவள்
"போவீர்; மருத்துவர் தம்மிடம் சொல்வீர்;
தொத்திக் கொள்ளும் கொடுநோயோ! - பெருந்
தீப்பிணியோ அத்தான்" என்றாள்; வியந்தேன்! 2

"இல்லையடி, கிளிப் பெண்ணே! - இது
யாராலும் தீர்க்காத நோக்காடாம்" என்றேன்.
"தொல்லையத்தான் மிகத் தொல்லை - பெருஞ்
சாக்காடு தான்; சுடு காடுதான்" என்றாள்!
"முல்லைப் பெண்ணே! உன்றன் பார்வை - எழில்
மூண்டென் உடல்வந்து தீண்டிய நோயை
சொல்லில் விளக்குவ துண்டோ? - அடிச்
சொல்க" வென்றேன்; புரி யாதவள் நின்றாள்! 3

"தந்தை இவரெனச் சொன்னாள் - என்
தாய்; இந்த நோயினைச் சொல்ல மறந்தாள்.
முந்தை மொழியறி வித்தார்; - இதை
மொழியாமல் தந்தைஏன் மூடி மறைத்தார்?
வந்தும் அறிந்திடக் காணேன்! - உமை
வாட்டிய நோயினுக் கென்பெயர்?" என்றாள்;
சொந்தம் பயின்றதென் உள்ளம்! - வாய்
சொன்னது 'காதல்' எனுங்கனிச் சொல்லை! 4

"காதலென் றாலென்ன?" வென்றாள்; "- உன்
கன்னத்தை நீட்டு; நான் காட்டுவேன்" என்றேன்,
தோதறி யாதவள் வந்து - கனிச்
சுவைதருங் கன்னத்தைக் காட்டிநின் றாளே!
மாதுளை முத்துச் சிவப்பில் - என்
மாயிதழ் தோய்த்திட தோளை அணைத்தேன்!
"யாதுசெய் தாய்?" எனக் கூறி - என்
அத்தை வந்தாள்; உளம் செத்துநின் றேனே! 5

நாலைந்து நாட்கள்சென் றோட - ஒரு
நாளில் அவள்வீட்டு வாயிலிற் சென்றேன்!
நூலிடை வாடிட ஓடி - ஒரு
நொடிதங்கி, மீண்டும் வெளிவந்து நின்று,
பாலாடை போலொரு தாளை - தன்
பக்கலில் வீசினாள்; ஓடி எடுத்தேன்;
சேல்விழி கூறாத சொல்லை - அவள்
சின்ன விரல்களோ தீட்டின கண்டீர்! 6

"கன்னத்தில் ஊன்றிய வித்து - பெருங்
காதல் மரமாகி நிற்கின்ற தத்தான்!
மின்னலைப்போல் அது மின்ன - என்
மேனி குலுங்கிக் குலையுதே அத்தான்!
கன்னல் கசக்குதென் கண்கள் - எக்
காட்சியும் காண மறுத்தன அத்தான்!
இன்னுந் தயங்குவ தேனோ - வந்து
என்னை மணப்பீர்; அணைப்பீர்! - உம் ஏழை!" 7

-1952

## 9 ஒப்புமோ?

கோவை இதழ்க்குன்றன் அலகொப்புமோ? - அவள்
கொண்டைக் கொப்போ கிளியே? - எனைத்
தாவித் தொத்தும் இரு கைகளுக்கே - உன்றன்
தண்டின்கால் இரண் டொப்புமோ?
ஆவல் சுருட்டும் அன் னாள்மொழிக்கே - உன்றன்
அழகுவாய் மொழி ஒப்புமோ? - பெருங்
காவல் புரிந்தென்னைக் காப்பது போல் - உன்றன்
கணவனைக் காப்பையோ, நீ?

நீல விழிக்குன்றன் விழியொப்புமோ? - அவள்
நெளிகுழற் கொப்புமோ வால்? - உறுங்
கோலத் துகில்பெறும் மேனிக்கிணை - உன்றன்
ஓலைச் சிறகொப்பு மோ?
ஆல விழுதிலுன் உடலாடுங் காட்சி - என்
ஆயிழை நெளிவிற் கொப்போ? - என்றன்
பாலவள் கொஞ்சுதல் போல நீயும் - காதற்
பண்ணுவையோ கிளியே?

-1952

## 10 ஊர் அறியும் முன் !

வேடிக்கை என்னடி தோழி - உன்றன்
வாடிக்கை விட்டிதைக் கேளடி நாழி!

(வேடிக்கை)

பாடிக் கை யாழ்ஒன்று தூக்கி - உளப்
பாங்கினில் யான்காணாப் பேரன்பு தேக்கி,
நாடிக் கை தொட்டெனை நின்றான் - தனை
நம்பென்றான்; நம்பினேன்; நடந்தது பின்றான்!

(வேடிக்கை)

கோடிக்கை யாலென்னைச் சுட்டி - என்றன்
குறைகூறி ஊரினர் யாவரும் திட்டி,
கூடிக் கை கொட்டிடு முன்னம் - மணம்
கூட்டுக, என்றவற் கியம்படி அன்னம்

(வேடிக்கை)

தேடிக்கை கூட்டி என் முன்னே - அத்
தீந்தமிழ்ப் பாணனை நிறுத்துக பொன்னே!
நீடிக்கைப் பொழுதினி வேண்டேன் - இதை
நினைவு கொள்; அன்றேல் உன்
தோழிநான் மாண்டேன்! (வேடிக்கை)

-1952

## 11 ஊடலுவகை!

வானத்து முகிலில் வாழ்கின்ற நீர்த்துளிக்கு
வழிநோக்குஞ் சிப்பியைக் கண்டிருந்தும்,
மீனத்து விழிமூடும் வகையென்னடி? - அது
மேயும் முகத்தின்ஒளி நகையெங்கடி?

தங்கக் கதிர்கையால் அணைக்கும் பரிதிக்குத்
தாமரைப் பெண்ணேங்கக் கண்டிருந்தும்,
செங்கை எனைவிலக்கும் வகையென்னடி? - உயிர்
சேரத் தழுவுமதன் திறமெங்கடி?

கொவ்வை யிதழ்மாந்தும் ஆசைப் பெருவண்டைக்
கூடும் மென்மலரைக் கண்டிக்கும்,
கவ்வும் அமைதிக்கு விரிவென்னடி - என்னைக்
காணும் விழிகவிந்த வகையென்னடி?

பாலை நிகர்த்தஒளி நிலவு வரும்வழியைப்
பார்க்கும் அல்லியினைக் கண்டிருந்தும்,
சேலைதழுவும் இடைக் கொடியெங்கடி? - பெருந்
தொல்லை விளைக்குமதன் நொடி யெங்கடி?

காவின் மலர்கொம்பிற் கிள்ளைக் குடும்பங்கள்
காதல் செய்யும்வகையைக் கண்டிருந்தும்,
பூவின் இதழ்குவிந்த வகையென்னடி? - அதன்
புறத்து விளையு மொளி நகையெங்கடி?

-1952

## 12 உள்ள அழகு!

மாங்குயில் இசைகேட் டென்செவி மகிழும்;
மங்கை உன் பேச்செனக் கேனோ?
தூங்கொளி குளிர்நில வென்னுளம் மலர்த்தும்;
தோகை உன் முகமெனக் கேனோ?

பசுந்தமிழ்ப் பாடலில் என்வாய் இனிக்கும்;
பாவை உன் இதழ்எனக் கேனோ?
விசும்பிடைக் கருமுகில் எழில்நிறங் காட்டும்;
வீழ்க்கருங் குழல் எனக்கேனோ?

தாமரை முகைமலர்ந் தெனக்குவப் பூட்டும்;
தழல் எனும் இருவிழி ஏனோ?
பூமண மேவிய தென்றல்வந் தணைக்கும்;
பூவை உன் உடல் எனக் கேனோ?

பெருங்கிளை தழுவிய கொடி மகிழ் வூட்டும்;
பேதை நின் இடை எனக் கேனோ?
மருங்கொடிந் தொளிர் வான் வில்உவப் பூட்டும்;
மடந்தை உன் உருவெனக் கேனோ?

தோன்றும் உன் அழகெலாம் வேண்டுதற் குன்னைத்
துணையெனக் கொள்ளுதற் கில்லை;
ஊன்றிடும் மகிழ்விற் குள்ளத்தின் அழகே,
உன்னுடன் யான்பெறல் வேண்டும்!

-1952

## 13 இறுதி நாள்!

(மகப் பேற்றுக்காகச் சென்றனள் அவன் மனைவி!
ஆண்டு அவள் இறந்தாள் மகவொடு! ஈண்டு இவன் துன்பம் இது.)

வந்து வந்து வாழ்ந்துயிர் மாய்ந்திடும்,
வானம் போர்த்த யிம் மண்மிசை தான், அவள்
சிந்தை குளிர்ந்திடும் அழகொடும், சீரொடும்,
சிறப்பெனக் கூறிடும், குணத்தொடும் பிறந்தனள்!
தந்தையும் தாயும் உளங்களித் திருக்கவே
தளர்நடை பயின்றுயர் கல்வியும் கற்றவள்,
உந்தும் மகிழ்வொடும் நாணத்தி னோடும்
ஒருநாள் வந்தென் னிருகைப் பற்றினள்! 1

பூத்த முறுவலிற் பொதிந்த கருத்தொடும்,
புகழ்தரு முயர்வெனுந் தாயின் அன்பொடும்,
காத்த ஒருத்தியைக், கருவிழி யொத்திடும்
கன்னியை, என்னுளங் கவர்ந்த கள்ளியைக்
கூர்த்த விழியொடு, காக்கையில், கூற்றெனுங்
கொடுந்துயர் கொண்டதை யாரிடங் கூறுவேன்!
ஆர்த்த இன்பம்போ யடங்கிடக் கண்களும்
அருவி யானதென் றாரிடம் புலம்புவேன்! 2

அன்றைய நாளிர வருகினில் நெருங்கியென்
அணைப்பினி லவளுடல் அடக்கி மகிழ்ந்தவள்,
**‘என்றையு முங்கள் உயிரிப்பினில் உளத்தினில்**
**இருக்க உதவுங்கள் அத்தான்’** என்றனள்!
பின்றை ஒவ்வொரு நாளும் அப் பேட்டினைப்
பின்னிப் பிணைந்து நற் காதல் வளர்த்ததை
இன்றை மறந்தனள்! ஏகினள்! எனைவிட்டு,
இறந்தனள்! ஐயகோ! எவரிடம் இயம்புவேன்? 3

இன்ப நாட்களுக் கிடையினில், ஏந்திழை
என்னரு கொருநாள் நெருங்கி நாணியே,
அன்புரு ஒன்(று) அடி வயிற்றில் தங்கிய
அருமைச் செய்தியைச் சொல்லி மகிழ்ந்தவள்.

முன்பு முழக்கிய அன்பிலும் மேலதாய்
மூட்டி யுவந்தவள்,மொய்குழல் தாழ்ந்திட
தன்புது மலர்முகம் தோளில் சார்த்தியென்
தாடையை நீவி நகர்ந்தவள், இன்றிலை! 4

ஒளிநில வுமிழ்ந்திடும் மாடத் தொருநாள்
உவகைக் கதைகள் பற்பல பேசி, அக்
கிளியொடு கழித்த இறுதி நாளதும்
கனவென் றாகிய தையகோ! வானின்,
வெளியொடு கலந்தனள்! கலந்தனள் காற்றொடு!
வீசிச் சுருளும் அலையென மாய்ந்தனள்!
ஒளியிலை! இல்லையென் உயிர்க்கோ ருறுதுணை!
உலகு மாய்ந்தது! சூழ்ந்தது துன்பமே! 5

**-1952**

## 14 பாரதிதாசன் காதலி!

கொழித்த செந்தமிழ்க் கோமகளின்
குறள்மணக் கும்வாய்ப் பேச்சினுக்கும்,
செழித்த சிலம்புசிந் தாமணிக்கும்,
செறிவளை, குண்டல, மேகலைக்கும்,
கழித்தான் பொழுதை அவனிடத்திற்
காதலைச் சொன்னேன்; கன்னியெனைப்
பழித்தான், இழித்தான்; தோழியவன்
பாரதி தாசனெ னும்பெயரோன்.

ஊற்றுப் பெருக்கெனப் பாவியற்றி
உலகோர்க் கீந்தான்; துன்புறுவார்க்
காற்றுப் பெருக்கென உதவியவன்;
அவன்தோள் விரும்பி "மணந்தென்னை
ஏற்றுக் கொள்வீ" ரென்றேனா,
இளையாள் என்றன் உளம் நோகத்
தூற்றிப் பழித்தான்; தோழியவன்
தோன்றல் பாரதி தாசனென்பான்

செந்தமிழ்க் கன்னியெ னுமொருத்தி
சேல்விழிக் கும்அவள் பால்மொழிக்கும்
தந்தவன் உளத்தை என்பார் சொல்
தவிர்த்தே தோழி அவனிடத்தில்,
சிந்தும் புன்னகை மொழிகூறிச்
'சேயிழை யென்னைக் கொள்கெ'ன்றேன்
நொந்தழி வுறுமா றெனை யிழித்தான்;
நோய்செய் தானெென் உயிர் கொய்தான்!

(வேறு)

அலை குதிக்கும் கடற்கரையில் அமைந்த திருநகரம்!
அகல்விசும்பின் மேற்புரண்டு விரிந்திருக்குந் தென்னங்
குலைகுதிக்கும் சோலைமலி தென்புதுவை நகரில்,
குளங்குதிக்கும் மீன்போலும் வாய்குதித்த தமிழில்
கலைகுதிக்கும் பாவரசன் பாரதிதா சன்மேல்
காதலெனக் கூறியவன் இசைவுதரக் கேட்டேன்;
மலைகொதித்து வெடித்ததுபோல் **"மன்னுதமிழ்க்கன்னி
மணந்தவன்யான்; பிறர்விரும்பேன்;
போபோபோ"** வென்றான்.

என்றவனின் கால்விழுந்து கண்ணீராற் கழுவி
“எத்திறத்தாள் தமிழ்க்கன்னி? என்னைவிட மேலோ?
நின்றெனக்குக் கூறுங்கள்” என்றேனா தோழி,
நீடுயர்ந்த தோளுயர்த்தி, விழியுருட்டி நோக்கிக்
“குன்றனைத்த புகழுடையாள், கோடிச்சிறப் புடையாள்;
கூறுபத்துப் பாட்டுப்பதி னெண்கணக்கு நூற்கள்,
பொன்றாத எண் தொகையின்
இன்பமவள்; அறத்தாள்;
போதுமோடி அன்னவளின் புக”ழென்றான் தோழி!

புகழ்ந்தவனின் உளம் பொங்கப்
புதுப்பாடல் மழையாய்ப்
பொழிந்தவனைக் கேட்டறிந்தேன்;
பூரித்துப் போனேன்,
திகழ்ந்தஅழ கொளியும்அவன் கூர்த்தறிவுத் திறனும்,
திரள்தோளும் மறநெஞ்சும் தமிழர் களை அற்றை
இகழ்ந்தவட வரசர்களை இழுத்துவந்த சேரன்
ஏந்தலைப்போல் இருந்ததடி! என்னென்று சொல்வேன்!
புகழ்ந்தவனை வணங்கியென்றன்
துயர் நெஞ்சை மீட்டுப்
‘பொன்றாத தமிழோடுன் புகழ்வாழ்’கென் றேனே.

-1952

## 15 'ஈ'க் காதல்!

"மாட்டுத் தொழுவத்திலே,காண
மாட்டாமல் இங்கோடி வந்தேனடி! - குப்பை
மேட்டினில் வந்தமர்ந்தே - உன்
மேனி குலுங்கி,நீ ஏனழுதாய்" - எனக்
கேட்டபடி, ஆண் ஈ - தன்
காதற் கிழத்தியின் அண்டை அமர்ந்தது!
"சேட்டுக் கடை இனிப்பைத் - தின்ன நீ
கூட்டிச் செல்ல வில்லை!....." என்றது பெண்; ஆணோ, 1

"போயிதற்காக நீயேன் - கண்ணீர்ப்
பொழிகின்றாய்? புறப்படிப் போதே செல் வோ"மென,
வாயிலிருந்து'சொற்கள் - வெளி
வருமுன்னர்க் கண்ணீரைத் துடைத்ததப் பெண்ஈயும்;
தூயவுளக் காதல் கொண்டார்
தொலைவென எண்ணிட மாட்டாரிப் பாரையும்!
ஆயநிலை கொண்டதால் அவ்
ஆண் 'ஈ'யும், பெண் 'ஈ'யும் அங்குப் பறந்தன! 2

சிட்டுச் சிறகடித்து - அந்தச்
சின்னக் குமரியாம் 'ஈ' தன்னோ டாண்,'ஈ'யும்
தட்டுக் கடையடைந்து - பல
காரங்களும் சீனிப் பண்டங்களும் - கண்டு
கட்டித் தழுவினவே,உள்ளக்
காதலினால் இன்ப மோதலினால் - நிலை
தட்டுத் தடுமாறி - உள்ளே
சென்றன; பண்டங்கள் தின்று முடித்தன! 3

உள்ள நிறைவோடே - தின்று
ஓய்ந்தன; பின்னர் பறந்தன தம்இடம்!
பள்ளங்கள் தாண்டிப், பெரும்பாதை
பக்கம் வர, குப்பை மேடொன்றைக் கண்டதும்,
'நில்லுங்கள்' என்றது பெண்! - ஆண்
நின்றது; பின்னே இரண்டும் தழுவின!
நல்லின்ப வேளையிலே - ஒரு
நங்கை வந்து குப்பைக் கொட்டிட மாண்டன,
உள்ள நிறை வோடே! 4

-1952

## 16 காணேன் தோழி!

காணேன் தோழி! காணேன் தோழி!
வானம் வெளுத்த நிலையினிற் சென்றான்
வானம் பழுத் தேயிருட் டிய தின்னும் (காணேன்)

கட்டு மரத்தினை யவிழ்த்தான்; கடலுள்
விட்டவன் வலையினை வாரித் தழுவி
நட்ட நடுக் கடல் சென்றவன் என்னைத்
தொட்டணைத் திடுதற் கின்னும் வரக் (காணேன்)

நேற்றிப் பொழுதில் வந்தான்; இன்பம்
ஊற்றிய ளித்தான்; ஆற்றா தென்னைத்
தேற்றிச் சென்றவன் வந்தென் உடலை
ஏற்றெனக் கின்பம் அருளுதற் கின்னும் (காணேன்)

அல்லி தவிப்பதை ஆற்றுதற் கென்று
வெள்ளி நிலவது வந்தது தோழி!
மெல்லியள் என்னை தேற்றுதற் கேற்ற
வல்லவன் கடல்விட் டின்னும் திரும்பக் (காணேன்)

மங்கிய இருளில் வலையினை ஏந்திப்
பொங்கிய கடலுட் புகுந்தான் தோழி!
திங்களும் வந்தது! தனக்கென நிற்கும்
மங்கை யொருத்தி நினைவிலா தவனைக் (காணேன்)

"வீங்கிய தோள்கள் துடுப்பால் நீரை
வாங்கும்; உள்ளம் உன் நினை வாலே
ஏங்கும்," என்றே நாளுஞ் சொல்பவன்;
தாங்கா தென்னுயிர்த் தாங்குதற் கின்னும் (காணேன்)

"வீசும் வலையினைக் கைகள்; நெஞ்சம்
பேசும் உன்னிடம் அடிக்கடி" என்றே
நேசங் கொண்டவன் போலப் பேசியே
மோசஞ் செய்தவன் கூட்டில் வந்தடையக் (காணேன்)

பெருந் தோள் தழுவிக் கிடப்பேன்; அவனென்
சிறுந் தோள் தடவிக் கிடப்பான்; இரவு
பறந் தோ டிப்போம்! விடிந்ததும் என்னை
மறந் தோ டிப்போய்க் கடலுட் புகுந்தவன் (காணேன்)

பெருங் காற்றடிக்கும்; பேரலை எழும்பும்;
கரும்பேர் வானம் மின்னும் இடிக்கும்;
வருகை பார்த்திருப் பேன்பல நாட்கள்;
வருவான் தோழி! இன்றோ சென்றவன் இன்னும் (காணேன்)

கடலுட் பிறந்து கடல்விளை யாடி
நடவைப் பருவத் தின்மர மேறி
உடலைப் பழக்கி, ஒண்டொடி என்னை
மடலெனத் தழுவிய அடலோ றிளைஞனைக் (காணேன்)

கூடிச் சென்றவர் குடிலினை நோக்கிப்
பாடித் திரும்பிய வாறுளர்! அவனைத்
தேடித் துடித்திடும் தீய... என்ப
"ஏடித் தேம்புவதேன்!" என்றே தேற்றிக் (காணேன்)

**-1952 (?)**

## 17 முன்னும் பின்னும்!

பெருநீர் வடித்தழுத பேதையினைத் தேற்ற
வருவீர் எனக்கூட்டி வந்தேன் - பெருகுநீர்
விட்டழுதாள் மீண்டும் வருகைக்குப் பின்னென்னை
விட்டுச் செல்வார்தோழி என்று!

**-1952 (?)**

## 18 குழந்தை வேண்டும்!

முழுமை நிலவின் ஒளியி லமர்ந்து
முழக்க முழக்க இனிக்கும் தமிழில்
வழுவில் அன்பை வார்த்துக் குழைத்து
வடித்துக் கூறும் கணவர் பேச்சில்
பழுதில் இரவுப் பொழுது பறக்கும்!
பகலிற் பொழுதெவ் வாறு கழியும்?
அழுதிட ஒரு குழந்தை - வேண்டும்
அழுதிட ஒரு குழந்தை!

தணலும் செம்மை பரிதிச் சூட்டைத்
தணிக்கும் நிலவின் ஒளியைப் போல,
உணவைச் சமைக்க, உறுத்தும் விழியின்
உள்ளும், புறமும், குளிர்மை காண,
மணலைக் கூட்டி மகிழும் மகவின்
மறைக்கும் முடியை ஒடி ஒதுக்கி,
அணைத்திட ஒரு குழந்தை - வேண்டும்
அணைத்திட ஒரு குழந்தை!

ஊற்றி வைத்த பாலைக் குடித்தும்,
ஒருசுவை பெறாமல், மாலை
ஏற்றி வைத்த விளக்கை இறக்கி,
ஏறிப் படுக்கும் கணவர் மருங்கில்,
மாற்றி மாற்றிப் பெற்ற முத்தங்கள்
மாய்ந்தா போகும்? பகலில் நினைத்து
நாட்டிட ஒரு குழந்தை - வேண்டும்
நாட்டிட ஒரு குழந்தை!

அணிகள் பூட்டி அழகு கூட்டி
அரைத்த சந்தனம் குழைத்துப் பூசிப்,
பணிவின் விளக்கைப், பசுமைத் தாய்மைப்
பண்பின் ஒளியைப் பயிலப் பயில,
தணிவு காட்டி மழலை பேசித்
தனிமைக் காட்டில் இனிமை சேர்க்க
மணியென ஒரு குழந்தை - வேண்டும்
மணியென ஒரு குழந்தை!

-1952

## 19 பாவலன் காதலி!

உன்னை, இவ் வுலகத்தின் அழகுள்ள பொருள்களில்
ஒன்றாக நான் உணர்ந்தேன்!
உருவற்ற தென்றல்,உன் மூச்சினுக் கிணையென்றே
உண்மையாய் நான் அறிந்தேன்!
நின்னை, நின் அழகினை, நெஞ்சத்தின் அன்பினை,
நிலையென்று நான் நினைத்தேன்!
நிலைபெயர்ந் துலவிவரும், வெண் பளிங்குச் சிலையென்ற
நினைவினில் மகிழ்ந்து நின்றேன்!
என்னை, என் நினைவினை, என்றென்றும் குளிர்விக்கும்,
எழிலென்று நின்னை எண்ணி,
எட்டாத நினக்காக ஏங்கித் தவித்தவா
றிருந்துபல பாடல் கற்றேன்;
பின்னை, நீ நெருங்கினாய்; பேரழகு மறைந்தது! உன்
பித்தத்தை நானுணர்ந்தேன்;
பேதையே! நின்னுடலை நான் வேண்டேன்! விலகிநில்!
பிணையுமுன் அழகு காண்பேன்!

ஒளிவிடுங் கண்ணாடிக் கருவிழியின் உட்புறத்தில்
ஊறுகின்ற சொற்களெல்லாம்,
உணரநான் அருகுவர, விழிமூடிக் கொள்கின்றாய்!
உன் நோக்கம் நான்விரும்பேன்;
நெளிவிழும் நெற்றியும், நினைவூட்டும் விழிகளும்,
நின்னிரு மென்கன்னமும்,
நீயறிய மாட்டாத எண்ணத்தை எனக்கூட்டும்;
நெருங்கிவிடில் மாய்ந்து போகும்!
கிளியல கொத்த நின் சீற்றிதழ்த் துடிப்பினைக்
காணவே விரும்பு கின்றேன்!
கிளத்தாத மொழிகூறி மையல்மே லேற்றாதே;
கனவுகளை வாழ வைப்பாய்!
களிமிகும் உணவுக்கு வித்திடுக! காதலியே,
கருத்தினுக் கெரு வுன் எழிலே!
கலையாத ஓவியமே! அழகே! நான் நின்னழகைக்
கைக்கொள்ள விரும்பவில்லை!

விழிகளில் மொய்த்திடும் அழகுக்கு முத்தமிடில்,
வெறி மூளும்! அழகு சாகும்!
வெவ்வேறு பேரழகும், ஒன்றாகி மதுவுண்ட
வெறியனாய் மயங்கி நிற்கும்,
வழிகளில் உன்னைநான் வாவென் றழைக்க வில்லை!
வனப்பே! நின் அணைப்பு வேண்டேன்!
வளர்கொடிக்கு நிகரான இடையே! நான் நின்னிடையில்
வாழ்கின்ற அழகை விரும்பி,
கழிபெருகும் வேட்கையால், கற்பனையில் வாழ்கின்றேன்!
கனவினுக் கணையிடாதே!
கானத்துக் குளிர்உருவே, அழகுக்கு மையலெனும்,
கருந்திரையைக் கட்டி டாதே!
அழிவாகும், உடலுணர்வு! பேரொளியே! ஒருங்கமைந்த
அழகுசேர் பிழம்பே! என்னை,
அணையாது துடிக்க வை! அணுகாது கதறவை!
அலையலையாய்ப் பாடல் காண்பாய்!

முத்தமிட்டு, முத்தமிட்டு, முயக்கத்தில் ஆழ்த்தாதே!
முகங்காட்டி எனையாட்டிவை!
மொய்க்குமுன் விழிபருக,எட்டிநில்! என்னுளத்தில்,
மூள்கின்ற பாடல் காண்பாய்!
கத்தவிட்டுக் கத்தவிட்டு, வேடிக்கை பார்; அந்தக்
கதறலைப் பாடலாக்கிக்,
காதலியே! உன்னையென் கற்பனையில் சேர்க்கின்றேன்!
கனிச்சாறே! ஒளியுருவே நீ!
இத்தரையில் நில்லாமல் என்னோடு பறந்துவா!
எங்கெங்குஞ் சுற்றி வருவோம்;
இறவாத புகழுக்கே, என்னை நீ கொண்டுசேர்!
என்னருகில் நிற்க விரும்பு!
பித்தரை, மூடரைப் போலென்னை நினைந்து நீ
பிணைக்க வெனை அணைந்திடாதே!
பின்னே நீ நகர்ந்துபோ! பிடியினுக் கெட்டாதே!
பீறிவரும் பாடல்களைப் பார்!

-1952

## 20 அழகு எது?

நீந்தும் கடலலை போல - நின்றன்
நெற்றிப் பிறையிலும் தோளிலும் தூங்கும்,
கூந்தல் அழகென்று கூறேன் - செம்மைக்
கோவை இதழ்களில் மொய்த்திடுங் கூத்தை
ஏந்தும் அழகென்று கூறேன் - அடி!
என்னை நடத்திடும் நின்னுளத் தன்பில்
காந்தும் பணிவையும், சொல்லின் - இன்பக்
கனிவையும் அழகென்று கூறி வியந்தேன்!

எண்ணில் ஓராயிரம் கூத்தை - நின்றன்
இன்சொல்லைப் போல்எனக் கென்று முணர்த்தும்
கண்ணை அழகென்று கூறேன் - ஒளிக்
கன்னத்தை எழிலென்று கருதவும் மாட்டேன்,
விண்ணை அணைத்திடும் மின்னல் - வந்து
வீழ்ந்த நிலையினை இடையென்றுங் கூறேன்,
பண்ணைப் பழித்திடும் சொல்லால் - அன்பைப்
பருகெனத் தந்ததை அழகென்று கண்டேன்!

வில்லைப் பழிக்கின்ற புருவம் - என்று
வியந்தது மில்லை; உன் மலரிதழ் கூட்டும்
சொல்லைப் புகழ்ந்தவன் அல்லன்! - வெள்ளைச்
சுண்ண நிறத்தினில் முல்லையம் பற்கள்,
இல்லை; எனை ஈர்த்த தில்லை! - அன்னைக்
கெதிரான அன்போடு என்னை யழைத்து
வெல்லத் தமிழ்மொழி பேசி - நெஞ்சில்
விளக்கொளி ஏற்றிய மாண்பை வியந்தேன்!

-1954

## 21 நானும் அவளும்!

அவள் விழிகள் வந்தென்னைப்
பார்த்தபடி ஏங்கும்;
அப்பார்வை என்னுயிரை
உடலினின்று வாங்கும்,
சிவந்த இதழ்தன்னை எழில்
ஒருபுறத்தே சாய்க்கும்;
சித்திரத்தின் சாயல் வந்தே
என்னுடலை மாய்க்கும்.
கவின்முழுதும் அவளினிரு
கன்னங்களில் பூக்கும்;
கதுப்பின் எழில் நொடிக்கு நொடி
என்னுளத்தைத் தாக்கும்.
செவிப் புறத்தில் சுருண்டகுழல்
காற்றில், அசைந் தாடும்;
செய்வதறி யாதெனுளம்
கண்டுகண்டு வாடும்!

சாய்த்தபடி பார்த்தவிழி
என்னென்னவோ உரைக்கும்;
சாகாத எண்ணம் வந்தென்
உடலைநாளுங் குறைக்கும்,
தோய்த்த எழில் வந்தெனது நடையைக்
கொஞ்சம் நிறுத்தும்;
தோகையுடல் என்னுளத்தில்
நாளும் வந்தே உறுத்தும்.
வாய்த்தபொழு தத்துணையும்
பார்ப்பதாலே ஒழியும்;
வாய்கள் பேச முந்துதற்குள்
எண்ணிலா நாள் கழியும்,
வேய்த்தோளைத் தழுவுதற்கென் கைகள்
நாளுந் துடிக்கும்;
வெண்ணிலவைக் கண்டதுமென்
உள்ளம்நிற்கா தடிக்கும்!

அன்றொருநாட் செல்லுகையில்
கதவருகில் நின்றாள்;
அம்புவிழி தம்மைக்கொண்டே
என்னுயிரைக் கொன்றாள்,
குன்றுமலர் மல்லிகையின் குழலைக்
கண்டு நொந்தேன்;
குமிழ்ச்சிரிப்பை விளைக்குமிதழ்,
சுவைக்குந்தொறும் செந்தேன்.
நின்றபடி சிரித்தபடி
சின்னஇடையை நொடித்தாள்;
நொடித்த எழில்தன்னை விட்டே
என்னுயிரைக் குடித்தாள்,
பொன்றுலங்கும் மேனிதன்னைக்
கீழாய்க் கொஞ்சம் வளைத்தாள்;
போர்த்திருக்கும் எண்ணங்களை
உளத்தினின்று கலைத்தாள்.

என்னைப் பார்த்த வாறவளின்
கழுத்தைச் சிறிது நெறித்தாள்;
எட்டிநின்ற எனது நெஞ்சை
ஓடிவந்து முறித்தாள்,
மின்னல் வந்து தாக்கல் போல,
கண்கள் வந்து தாக்கும்;
மேலுமவள் எண்ணம் வந்து
விண்ணுக் கெனைத் தூக்கும்;
பின்னலினைத் தொட்டு விட்டேன்;
பேதை எனைப் பார்த்தாள்;
பார்வையாலென் உயிரைத் தூக்கிப்
பேரின்பத்தில் சேர்த்தாள்,
தின்னுமட்டும் இன்பத்தினை ஊட்டி
ஊட்டிக் களித்தாள்;
திசையறியா தின்பவெள்ளத் தவளும்
வந்து குளித்தாள்!

நானும் அவளும் மலரும், மணமும்!
நிலவும் நீல வானும்!
நல்ல ஆவைக் கறந்து வைத்த
பாலும் கொம்புத் தேனும்!
மானும், மயிலும்; குளமும் புனலும்;
யாழும் பேசும் இசையும்;
மாலைப் பரிதி வீழும் செம்மை
நிறமும், மேலைத் திசையும்!
ஊனும் உயிரும்; ஒழுகு கன்னற்
சாறும் வெல்லச் சுவையும்;
உதவு மழையும், முதுமை விளைவிற்
குவியும் நெல்லின் குவையும்
ஞானத் தமிழும், திருவும்; கண்ணும்
ஒளியும் போல முடிவில்,
இன்பங் காண முயற்சி செய்வோம்
இருவர் பிடித்த பிடியில்!

-1954

## 22 நிலவு சொல்லாதா?

கன்னியை எண்ணாரோ? - காதல்
கனியை உண்ணாரோ?
காத்துக் கிடக்கும் யாழை மீட்டி
இசைக்கப் பண்ணாரோ? - இன்பம்
பிசைந்து தின்னாரோ?

என்னை வெறுத்தாரோ? - இல்லை
எண்ண மறுத்தாரோ?
ஏங்கிக் கிடக்கும் கிளியைத் தூக்கி
இணை நிறுத்தாரோ? - முகத்தை
எதிர் நிறுத்தாரோ?

மறந்து போவாரோ? - இங்குப்
பறந்து மேவாரோ?
மங்கை யிருக்க ஒருத்தியைப் போய்
மணந்து நோவாரோ? - என்
மடியில் தாவாரோ?

இரவு சொல்லாதா? - அன்றை
இரவு சொல்லாதா?
இளைக்க இளைக்க இன்பம் விளைத்த
உறவு வெல்லாதா? - காதல்
உறவு வெல்லாதா?

நிலவு கொல்லாதா? - எரிக்கும்
நிலவு கொல்லாதா?
நித்திலப் படுக்கை விரித்துக் கொடுத்த
நிலவு கொல்லாதா? - எனை
நெருக்கத் தள்ளாதா?

தேரில் வருவாரோ? - முத்தம்
நேரில் பெறுவாரோ?
தேடித்தேடி அலையும் விழிக்குத்
துன்பந் தருவாரோ? - இல்லை
இன்பந் தருவாரோ?

**-1954**

## 23 பிரிவுத் துன்பம்!

அன்புள்ள என்னத்தான்! பிரிந்து சென்றீர்!
ஆழ்ந்துள்ள பெருங்கடலின் துன்பந் தன்னில்,
முன்பறியாப் பெருங்காட்டின் நடுவில், வானை
முட்டுகின்ற மலைமீதில், தனிமைச் சேற்றில்,
என்பதனைத் துளைக்கின்ற வாடைக் காற்றில்,
இனுஞ் சொன்னால், சாவினது மடியில், வாழும்
மன்பதைக்கு வெகுதொலைவில் விட்டுச் சென்றீர்!
மறந்துவிட்டீர்! மறக்கவில்லை என்றன் நெஞ்சம்! 1

பொருள்தேடச் செல்கின்றீர்! ஆனால் அன்பின்
பொருளுணரா திருக்கின்றீர்! துன்பம் என்ற
இருள்வந்து போர்த்துவிட்ட தத்தான்! நீங்கள்
எழுதிவிட்டீர், "நெஞ்சுறுதி கொள்வாய்" என்றே!
அருள்வேண்டிப் பின்வந்து விட்ட தத்தான்,
அந்நொடியே என்நெஞ்சும்; நெஞ்சிங் கில்லை!
வருகைக்குக் காத்திருக்கும் விழிகட் கென்னை
வாட்டுகின்ற தன்மையுண்டு! தேற்றல் இல்லை! 2

நீர்க்குடத்தைத் தூக்குகையில் உங்கள் எண்ணம்!
நினையாமல் இருப்பதற்கு முயற்சி செய்வேன்!
பார்க்குமிடம் எங்கணுமே அமர்ந்தி ருப்பீர்;
பழையகதை, உங்கள்குரல் நெஞ்சைச் சுற்ற,
ஊர்க்கிணற்றில், பெண்களெல்லாம் என்னைக் கண்டே
உதடவிழ, நகையுதிர்க்க நிலைத்து நிற்பேன்!
ஆர்க்கிடையில் உங்கள்முகம் இல்லை; உங்கள்
அழகுமுகக் கண்களிலே நான்தான் இல்லை! 3

உயிரெல்லாம் அங்கென்றன் உடல்தான் இங்கே!
உணவில்லை; உறக்கமில்லை அத்தான்! வாழும்
பயிருண்டோ நீரின்றி! என்றன் உள்ளம்
படும்பாடு நீர்பட்டால் வருவீ ரன்றோ!
அயரும்வரை உடல்வருந்தி வேலை செய்தும்,
அரைநொடியும் கண்மூடி அயர்வ தில்லை!
பெயருக்கேன் வருந்துவதாய்க் கடிதம் தீட்டிப்
பேரரச மரத்துக்கல் லாகி விட்டீர்! 4

நான்சிறிது மறந்தாலும், பாலுக் கென்னை
நாடிவரும் குழந்தைதன் எழிலில் உங்கள்,
மானுடலின் நிறங்கண்டும், உருவைக் கண்டும்
மாளாமல் நீர் சொரியும் கண்க ளோடே
ஏன் வாழ வேண்டும்நான், அத்தான்? என்னை
ஏன் மாள வைக்கின்றீர்? முகிலில் ஏறி
வான்வழியே வந்திறங்கிப் பேதை யென்னை
வாரியணைத் திடுதற்கு வாரீர் இன்றே.

**-1954**

## 24 வளைத்தாய்; வளைத்தேன்!

வில்வளைத்தாய்; பின்னுன்
விழிவளைத்தாய்! அன்பென்னும்
சொல்வளைத்தாய்; இன்பத்
தொகைவளைத்தாய்!, யானுமென்
கைவளைத்தேன்; மின்னல்
இடைவளைத்தேன்; கைக்குளுன்றன்
மெய்வளைத்தேன்; தேன்சுவைத்தேன் மேல்!

**-1954**

## 25 காதல் மறத்தி!

கோட்டு மலரெனக் கொஞ்சுகின்றீர் - எனைக்
கோல மயிலெனக் கூறுகின்றீர்,உளம்
வாட்டு கின்றாயென ஏங்குகின்றீர் - உங்கள்
வாழ்விற் கிணையெனப் பேசுகின்றீர்!
காட்டுப் புறாவெனத் தீட்டுகின்றீர் - எழுங்
காதல் மொழியினைக் கூட்டுகின்றீர் - தமிழ்
நாட்டு விடுதலைக் கான செய்வீர் - பின்னை
நாட்டங் கொள்வீ ரத்தான் காதலின்மேல்!

சொல்லப் பழக்கிய பைங்கிளி நான் - உமைச்
சேரும் விருப்பினை மாற்றலுண்டோ? எழில்
வெல்லப் பயின்ற நம் காதலினை - இந்த
வேல்விழி மாய்ப்பது மில்லையத்தான்!
கொல்லப் படும்தமிழ்த் தாயினையே - பெருங்
குன்றெனுந் தோள்தந்து காதல்செய்வீர்! - உமைச்
சொல்லப் படும்புகழ்ச் சொற்களுக்கே - தனிச்
சொந்தம் என்பாள் உளம் பொங்கட்டுமே!

மாகுன்றத் தோளினைப் பின்னிய நான் - செயல்
மாறுபடல் என்றும் நேர்வதில்லை! - எழிற்
பாகுன்றும் சொற்களைக் கேட்டவள்தான் - இந்தப்
பைங்கிளி! உங்கட்குக் காத்தி ருப்பேன்!
போகின்ற செந்தமிழ்ப் போர்க் களத்தில் - விழுப்
புண்படச் சாவீரேல் தானும் வந்தே,உடன்
சாகின்ற தன்மையாள் நானும் அத்தான்! - அன்புச்
செந்நீரால் செந்தமிழ்த் தாயைக் காப்போம்.

-1954

## 26 அத்தானின் குறும்பு!

கொத்தான மலரினைக்
குழலினில் வைத்தான்! - பின்
குனிந்தென்னை முத்தமிட்டான்! - என்
அத்தானின் குறும்பிது தோழி!
ஆனாலுமவன் அன்பின் செயல்தானடி!

பித்தாக எனையாக்கி
விட்டான்என் பின்னலினைப்
பிடித்திழுத் தாட்டிவிட்டே - நான்
கத்தாம லிருக்க அவன்
கையாலென் வாய்மூடிக்
கன்னத்தைக் கிள்ளி வைத்தான்! - என்
அத்தானின் குறும்பிது தோழி!
ஆனாலுமவன் அன்பின் செயல்தானடி!

பித்துப் பிடித்தேனடி! - அவன் மார்பில்
புரண்டு மகிழ்ந்தேனடி!
கொத்துக் கிளிபோலே - என்னிதழைக்
கவ்விச் சுவைத்தானடி!
கையால் முகமேந்தினான்! - என்னுளத்தைக்
கண்ணால் அவன் காந்தினான்!
மெய்யெலாம் தீண்டிவிட்டான்!
அன்புளத்தின்
மேன்மைதனைக் காட்டிவிட்டான்! - என்
அத்தானின் குறும்பிது தோழி!
ஆனாலுமவன் அன்பின் செயல்தானடி!

பின்னல் இழுப்பதுமாய் - மேல்துகிலைப்
பற்றி இழப்பதுமாய்
இன்னல் கொடுத்தானடி - உள்ளஞ்சொல்
ஏவல் புரிந்தானடி! - என்
அத்தானின் குறும்பிது தோழி;
ஆனாலுமவன் அன்பின் செயல்தானடி!

கண்களைப் பொத்திடுவான் - இலைதன்னைக்
காதில் நுழைத்திடுவான்!
தண்கடல் வெள்ளலைபோல் - என்னுடலைத்
தாவி யணைத்திடுவான்!
குறும்பினை என்ன சொல்வேன்? - தோழியவன்
கூத்தினை என்ன சொல்வேன்?
கரும்பின் தமிழ்ச் சுவைமேல்
புலவர் கொள்
காதலைக் கொண்டேனடி!

-1954

## 27 நாணமென்ன?

நானிருக்க என தாசைக்கு துணை நீயிருக்க
நமைச் சுற்றிலும் சோலை யிருக்க
நட்ட நடுவினில் நீயிருக்க - இன்னும்
நாணமென்ன உனக்கானதென்ன - இளம்
நல்லிடையினை வந்து ஈந்திடடி
தேனிருக்கும் மலர் வாயிருக்கும் மனம் உள்ளிருக்கும்
தின்றிடத் தீராப் பசியிருக்கும் - இரு
குன்றெனத் தோள்களி ரண்டிருக்கும் - இனித்
தேவையென்ன உனக் கானதென்ன - இசைத்
தென்றலென வந் திணைந்திடடி!

வானிருக்க நமைச் சுற்றிலும் வல்லிருள் போர்த்திருக்க
வட்டநில வெழில் தானிருக்க - காதல்
வாட்டிடும் எண்ணம் நமக்கிருக்க - இன்னும்
வெட்கமென்ன உனக் கானதென்ன - என்றன்
பக்கலில் வந்தெனைத் தொத்திடடி
கானிருக்கும் மலர் வாறியிறைக்கும் மணமிருக்கும் - குளிர்
காற்றடிக்கும் படி ஊற்றிருக்கும் - அதை
மாற்றிடக் காதற் கனப்பிருக்கும் - நிற்கத்
தயக்கமேன் உனக் கான தென்ன - இளம்
ஆரணங்கே யிதழ் மாந்திடடி!

-1954 (?)

## 28 அழற் காதல்!

குயில்போலும் குரலினாள்;
குழலினாள்; குருகு மிக்க,
மயில்போலும் இயலினாள்;
இடையினாள்; மலர்வா யன்னம்,
பயில்கோளும் நடையினாள்;
பணிவினாள்; என்பீர்; ஆனால்
வெயில்போலும் அன்பினால்
வெய்தினாள் புழுவைப் போன்றே!

மறைபோலுங் கண்ணினாள்;
வாயினாள்; மதியாற் பொங்கும்,
திரைபோலும் உடலினாள்;
நெளிவினாள்; தீம் பா டற்கே,
உரைபோலும் சுவையினாள்;
நிறையினாள்; என்பீர்; ஆனால்
கரையேதுங் காண்கிலாள்;
நும்மினாள்; கடலன் பிற்கே!

மலர்போலும் விரையினாள்;
மென்மையாள்; மற்றார் அங்கே,
இலர்போலும் நினைப்பினாள்;
உயிர்ப்பினாள்; ஊரார் பேசும்,
அலர்போலும் பசலையால்
மருவினாள்; என்பீர் ஆனால்,
மலர்போலும் வாடினாள்;
நும்மினாள்; தழற்காதற்கே!

-1955

## 29 அவளும் பெண்!

மானுக்கு நிறமும் மயிலினுக் கியலும்
மழையினுக் கவிழ் கருங் குழலும்,
தேனுக்கு மொழியும், திங்கட்கு முகமும்,
திரிகுழல் புரண்டிடும் நெற்றிக்
கூனுக்குப் பிறையும், குரலுக்குக் குயிலும்,
கோவையின் நிறத்தினுக் கிதழும்
மீனுக்கு விழியும், ஒப்புவ தொன்றில்லா
மேனியவ் வேழையின் மேனி !

மேலுக்குத் துணியும், மின்னுபொன் மணியும்
மிகுதியாய்ப் பேசிடுந் துணிவும்,
காலுக்குச் செருப்பும், கைக்கொரு வளையும்
கடு வெயில் மழைக்கொரு குடையும்,
பாலுக்கு நினைவும், படுத்திடப் பாயும்,
பசியினுக் கொருவாய் உணவும்
ஆலுக்கு விழுதாய்த் துணையு மொன்றில்லா
அலை வாழ்(வு) அன்னவள் வாழ்வே !

பூத்திற மன்னவள் மேனியில் இல்லை;
புண்வடு போர்த்திய தெங்கும் !
நாத்திற மன்னவள் மொழியினி வில்லை !
நலிவவள் மொழி, செயலெல்லாம் !
*'கோத்திர'* மில்லை குலமெதுமில்லை !
கூன்பிறப் பாளர்கள் கூறும்
*'சாத்திர'*ப் படிக்கு மிகத்தாழ்ந் துள்ள
சாதி,யவ் வேழையின் சாதி!

என்னினும் அவளும் இயங்கிடு முயிரே !
எவருக்கும் போலும்உண் டுணர்வே !
பொன்னினும் தூய மேனியார்ப் போலும்
பூரித்து வளர்ந்ததே பருவம் !
மன்னிய திளமை ! மானமும் பெற்றாள்;
மற்றவர் போலவள் பெண்ணே!
கன்னியள் அவளும் உலகத்தின் ஒருதாய்
கயவர்கள் முன்அவள் மண்ணே !

-1955

## 30 தற்காலக் கண்ணகி!

மாமலர் தடவிய தென்றல் வந்தே என்றன்
மார்பினைத் தடவுதல் போல் - நறுந்
தூமலர் மேனி யுடலினைக் கொண்டவள்
தோய்ந்தனள் மார்பின் மிசை ! - செந்
நாமலர்ந் தவளிரு விழிமலர்ந் துள்ளமும்
நன்கு மலர்ந்தவ ளாய்; - "ஒரு
பாமலர் தந்தென்னை மகிழ்விக்க" என்றனள்
பாடலுக் காட ஒப்பி!

"நீர்வழிந்திரு விழி சிவந்திருக்க - குழல்
நீணிலம் புரளக் கையில் - நல்
ஓர்தனிச் சிலம்பொடு அனல்தெறிக்கும் உயிர்
போங்கிட அவை புகுந்தோய், - நீ
ஆர் என" பாண்டியன் கேட்டதைப் பாடிட;
அரவமென்றே வுயிர்த்தே - தன்
வார்குழல் தாழ்த்தி யெழுந்தனள் மனைவி! - யோர்
வழக்குரைப் பாளாகினள் !

ஏதிது கண்ணகி போலும் நடித்திட
எழுந்தன ளோவென வே, - எண்ணி
யாதுரைப் பானெனக் காட்டி நடிப்பதை
யானங்கு பார்த்திருந் தேன்! -அவள்
"மோதுகடல் அலை இசைமுழக்கும் - கவின்
மாநகர்த் தென்புதுவை - இம்
மாதெவள் ஊர்! சங்கு நாதன்என் பார்க்கொரு
மகளாகப் பிறந்தேன்" என்றாள்.

கண்ணகி போலும் நடிப்பவள் ஆகிக்
கதையினைக் கூற வந்த - இப்
பெண்ணினைக் கண்டதும் நகைப்பினை அடக்கியே
பேசட்டும் என்றிருந் தேன்! - அவள்
"கண்ணிக ராக வளர்த்தனர் பெற்றவர்
காட்டுக்குள் தள்ளி விட்டார்" - இனி
எண்ணி முடிந்திடவில்லை ஐயோ மாமி
இழைக்கும் கொடுஞ் செயலை

"காய்ச்சிய நீருக்குச் சூடில்லை என்பாள்; பின்
காய்ச்சினால் மிகுதி என்பாள்! - என்
தாய்ச்சரி யாக வளர்க்க வில்லை என்பாள்!
தாய்க்கென்ன என்று கேட்டால் - நீ
வாய்க்குச் சரியாகப் பேசுகின்றாய் என்பாள்;
வாது செய்வாள்! - தன்னையே
தாய்க்குச் சரியாகப் பேணவில்லை உம்மைப்
பெற்றவள் என்ற மூதாள்!

அங்கவள் விக்கி அழுதிட நான்வியந்
தரு குசென் றேயவளைத் தேற்றி
சங்குநாதன் பெற்ற பைங்கொடியே! என்ன
தவறு செய்தேன் ! உன்னையே - உளம்
பொங்கும் நிலையில் மணந்தது குற்றமோ!
புகலுக! என்று சொன்னேன் - அவள்
திங்களெனும் குளிர் முகமலர்ந்தே" அத்தான்
தற்கால அழகீ தென்றாள்!

-1955 (?)

## 31 அரசு ஊழியர் மனைவி!

ஒளிதவழும் முகம்வாடி இருப்பதும் - உன்றன்
ஒரத்து விழிகருகிக் குலைந்ததும்,
குளிர்தவழும் குழல்காய்ந்து பரந்ததும் - அதன்
கொண்டையில் முல்லைமலர் மறைந்ததும்,
நெளிதவழும் இடைசோர்ந்து போனதும் - அதில்
நின்றபழந் துணிஅழுக் கானதும்,
களிதவழும் இதழ்செம்மை மறந்ததும் - மாதக்
கடைசியிதாம் எனவுணர்த்தி நிற்குமே !

தொட்டியின் வெந்நீர்சூ டற்றதும் - சீக்காய்த்
தூள்வைக்கும் கிண்ணம் கவிழ்ந்ததும்,
வட்டிலில் சோற்றளவு குறைந்ததும் - குழம்பில்
வார்க்கின்ற கறிகாய் மறைந்ததும்,
கட்டிசேர் தயிர்மோராய் நீர்த்ததும் - உன்
காதுக் கடுக்கன் கழன்றதும்
அட்டியொன் றில்லையடி நற்பெண்ணே - மாதம்
ஆகிவிட்ட தென்பதனைக் காட்டுமே !

-1955

## 32 அன்புருவே வாழ்க! அறநெஞ்சே நீ வாழ்க!

நெஞ்சமெனும் நீள்விசும்பில் நேர்ந்ததொரு மின்கீற்றாய்,
துஞ்சுமொரு நல்லிருளில் தோற்றியதோர் இன்கனவாய்,
கொந்தளிக்கும் அன்புக் குளிர்க்கடலில் நீந்துமெனை
வந்தணைக்கும் நற்றுணையாய் வாய்த்ததோர் அன்புருவே!

உங்கள் தமிழுணர்வும், உண்மை விளைநெஞ்சும்
திங்கட் குளிர்மொழியும், தெள்ளிய நல் லன்புமெனைத்
தீண்டி யுளமுருக்கித் தேங்கியுள்ள பாவுணர்வைக்
கீண்டிச் சிலிர்த்ததையும், கீழ் மேலாய்ச் செய்ததையும்

எண்ணப் பெருநெருப்பில் எண்ணெயிட்டே ஊதியதும்
விண்ணத் தனைஉயரும் வீழாத கற்பனைக்குப்
பக்கச் சிறகமைத்துப் பார்காண விட்டதையும்,
தொக்கக் கருத்தாற்றித் தோணியமைத் தேற்றியதும்,

அன் பூறும் பாலாற்றில் ஆயிரந்தேன் கூடுடைந்தே
இன் பூறுச் செய்ததையும், ஏற்றம் விளைத்ததையும்,
வல் விலங்குக் கூட்டத்தே வாழுமொரு மான்போல
பல்வகையாத் துன்புற்று நெஞ்சம் பதைக்கையிலே

அன்போ டெனையணைந்தே ஆறாத் துயர்களைந்து
முன்புயான் காணாத மொய்க்கும் அருள் சொரிந்து
நாவிளையும் பாட்டையெல்லாம் நாடறியச் செய்வதற்கு
ஆவிதர செந்தமிழை ஆளுகைக்கே உட்படுத்த,

வாக்குக் கொடுத்ததையும், வாழ்விக்க வந்ததையும்
ஏக்கத் துணர்வில் எழுந்துயர்ந்த எண்ணங்களும்,
அன்னைக்கும் அன்னையாய் அத்தனுக்கும் அத்தனாய்,
என்னைச் சூழ்ந் தாட்கொண்ட எல்லவர்க்கும் மேலராய்

உண்மை உணர்ந்தே, உணர்வுணர்ந்தே உண்மையன்பின்
வெள்ளம் உணர்ந்து, விளக்கமெலாந் தாமுணர்ந்து,
நாட்டை யுணர்ந்தென்றன் நாட்டத்தைத் தானுணர்ந்து
கேட்டை யழிக்கக் கிளர்க்கின்ற சொல்லுணர்ந்து

நின்றதையும், உங்கள் நினைவெல்லாம் என்னுளத்தை
வென்றதையும் என் சொல்வேன்? எவ்வாறு விண்டுரைப்பேன்!
பொங்குகின்ற நல்லுணர்வில் பூத்த ஒரு மலரே!
அங்கிங் கெணாது டலம் அத்தனையும் ஆட்கொள்ளும்

வாய்மைக் குலக் கொழுந்தே! வாழ்ந்துவிட்டேன்! வாழ்ந்துவிட்டேன்!
சேய்மைத் தனியுருவே! சிக்குண்ட நல்லன்பே!
அன்புருவே வாழ்க! அறநெஞ்சே நீ வாழ்க!
இன்புறுவோம் என்றும் இணைந்து!

**-1955 (?)**

## 33 இறந்தாள் நினைவு!

என்னைப்பே ரன்போடு தூக்கி நிறுத்தி என்
இதழ்தனில் முத்தந் தந்த
ஈரிதழ் ஒரு மலர்வாய் நேற்றிருந் ததுகாணின்
றில்லை யிதை யாங்கன் சொல்வேன்?

அன்னைக்கு நிகரான அன்போடும் பரிவோடும்
அணைத்த யிரு மலர்க்கை யில்லை?
அலையலையாய்க் கூந்தற் குளிர்த் தலையின் றில்லை?அதன்
அடி தொடு மலர் அடியின் றில்லை?

மின்னைச்சிற் றிடைகாட்ட மேனிப் பொன் னொளி காட்டும்
மாமயிலின் நடையின் றில்லை?
மானுக்கு நிகர் விழியுந் தேனுக்கு நிகர் மொழியும்
மாமதியை யொத்த முகமும்

தின்னக் கொடுக்கின்ற துவர் வாயின் மலரிதழும்
தோன்றுமோ? களி யூன்றுமோ?
தோகையிரு விழிமூடி என்கவிதை மாந்துமொரு
திருநாளை காணு வேனோ?

**-1955 (?)**

## 34 தனிமை கொடிது!

கனியின் சுவையும் கடிமலர்சூழ்க்
காவும், அரைக்கும் சந்தனத்துப்
பனியின் குளிரும், யாழ்கூட்டும்
பண்ணும், ஆப்பாற் பயந்தெடுத்த
இனிமை உணர்வும், ஈன்றவரின்
இன்சொல் யாவும் மிகக்கைக்கும்
தனிமை கொடிதென் றறியாமல்
துறந்தார்க் கீந்தேன் ஒப்புதலே!

கடுக்கும் காம்பென் றெடுத்திதழைக்
கொட்டிப் பரப்பி விரித்தமலர்
படுக்கை வருத்தும், பைந்தமிழ்த்தீம்
பாடல் வெறுக்கும், பைங்கிளிகள்
தொடுக்கும் இன்சொல், தூமேனி
துளியுறுத் தாப்பூந் துகிலும்துயர்
கொடுக்கும் தனிமை கொடிதெனவே
கொள்ளா தீந்தேன் ஒப்புதலே!

தண்ணும் புனல்சேர் மலர்ப்பொய்கை,
தணல்நீக் கிடுமாஞ் சோலைநிழல்,
கண்ணும் குளிர வந்தணைக்கும்
கடிமலர்ப் படுத்த வின்தென்றல்,
துண்ணும் குழலும், தேன்மாவும்
துறக்கச் செய்தே என்னுயிரை
உண்ணுந் தனிமை மிகக்கொடிதென்
றுணரா தீந்தேன் ஒப்புதலே!

மல்லும் ஒளிசேர் பரிதிதரு
மகிழும் இருகாற் பொழுதுகளும்,
புல்லும் உயிர்க்குப் பொலிவூட்டும்
பால்நில வொளியும் வந்தென்னைக்
கொல்லும் கொல்லும் தனிமைமிகக்
கொடிதென் றறியா தெனைவிட்டுச்
செல்லும் அவர்க்கென் இதழ்தந்து
செப்பினன் தோழி ஒப்புதலே!

-1956

## 35 மணநாள்!

அன்புள்ள அத்தான்! அன்றைய மடலில்
இன்பத் திருமணம் என்றைக் கென்றே
எழுதி யிருந்தீர்! எந்தமிழ் நாட்டில்
புழுதி மிகுந்த புன்மொழி இந்தி
வந்து நுழையவும்,வடவரும் பிறரும்
செந்தமிழ் நாட்டார் சீர்கே டுறவே
வேண்டிய வெல்லாம் விரைவாய்ச் செய்தே
ஈண்டிய வளனை எடுத்துப் போகவும்,
முற்படும் பொழுதில், முயற்சியும் இன்றிக்
கற்படு சிலையெனக் குந்தி யிருந்தால்
பத்தாண் டின்பின் பழம்பா யும்நம்
சொத்தென் றாமோ? சொல்லுதற் கில்லை!
தமிழர் நாட்டைத் தமிழர்க் காக்கிட
இமையா வீரர் இன்றே தேவை!
உலக உருண்டையின் ஒவ்வொரு முடுக்கிலும்
நிலவும் விடுதலை இங்கும் நிலவிட,
நாம்முய லாமல் ‘நமக்கென்ன’ வென்றால்
தீமைத் தீயெத் திசையிலும் பற்றும்!
அன்னை நாட்டின் அழகு விடுதலை
முன்னை வேண்டுக! மூச்சிருந் தாலிப்
பெண்ணை வந்து பிறகு தீண்டுக!
மண்ணில் மணநாள் விடுதலை நாளே?

-1956

## 36 காதலிக்கு!

பீடுறு மயிலே! பிரிந்தனன் எனநீ
பிணிபடத் துடித்தெனை எங்கும்
தேடுவ தறிந்தேன்! தேம்புவ தறிந்தேன்!
தேய்வுறும் நிலவா யுடலம்
வாடுவ தறிந்தேன்! வாள்விழி! இனிநீ
வாடுவ தொழித்திடு; தமிழ்வாழ்
நாடணி செய்யும் நற்படை தன்னில்
நான்புகுந் திறப்பினும் இறப்பேன்!

தீங்கிலாவுளத்தோய்! துறந்தனன் எனநீ
துஞ்சலும் உணவதும் துறந்தே
ஏங்குவ தறிந்தேன்; இளைப்பதை யறிந்தேன்!
எழிலுடல் குலைவது மறிந்தேன்!
பூங்கொடி வருந்தேல்! பொன்னா டுய்யப்
போர்ப்படை சேர்ந்தனன்! இனிநான்
“மாங்குயில் கூவுஞ் சோலையில்” வாழ்ந்தே
மாளுவ தாகினும் மாள்வேன்!

கரும்பெனும் மொழியால், கருவிழி அசைப்பால்
கார்குழல் நெளிவால் இன்பம்
தரும்பெண் பாவாய்! நான்பிரிந் துன்னைத்
தனிவிட் டேனென எனையே,
வரும்படி கூறிக் கண்ணீர் வார்ப்பதை
வார்குழல் அறிவேன்! எனினும்
இரும்படி என்தோள்! என்தமிழ் நாட்டுக்
கிறப்பினும் இறப்பேன் ஈந்தே!

நீதரும் இன்பம் நிலையெனின் அன்பே
விலையிலை தமிழ்நாட் டின்பம்!
மீதுறும் துயரால் வருந்துவ தொருத்தி;
மீட்பால் மகிழ்வது நாடு!
தீதுறும் மணித்தமிழ் நாட்டினை மீட்கத்
துனிபடை சேர்ந்தனன்; வருந்தேல்!
மாதர சென்தோள் மாளினும் மாளும்!
மறுபடை கூட்டுக நீயே!

-1956

## 37 அன்றில் பேடு!

கத்தரிப் பிஞ்சுகள் சீறிவரும் புயல்
காற்றில் அலைவது போல் - இணை
முத்தரி மாலை யறுந்து விழுந்தபின்
மூலைக்கொன் றோடுதல் போல்,
சித்திர மாயெழில் மூண்ட குழந்தைகள்,
சீர்குலைந் தேங்கிட வோ - நீர்
செத்தழிந் தீர்!உயிர் மேவும் அத்தான்! இனிச்
செய்வ தறிகி லேனே!

ஓங்கும் பசிக்குக் குருதியினை நான்
ஊட்டி வளர்ப்பே னென்றோ - உயிர்
வாங்கிடுங் காலனுக் கென்னுயிர் தந்தவை
வாழுதல் செய்வேன் என்றோ
ஏங்கும் முகங்களுக் கென்முகம் காட்டியே
இன்னுரை செய்வேன் என்றோ - நீர்
தூங்கும் அமைதியைத் தேடிச் சென்றேயெனைத்
'தேம்புக' என்று விட்டீர்!

தாவுங் கொடியொரு கொம்பின்றி வாழுதல்
தாளா திருக்கையிலே - அதில்
மேவுங் கனிகளைக் காப்பதெங்ஙன் அத்தான்!
மீளாத் துயருங் கொண்டேன்!
கூவும் குயிலினுக் கெங்கிருந் தோமறு
கூவல் கிடைப்பதைப் போல் - உயிர்
தூவும் மகிழ்வினுக் கானவின்பம் இந்தத்
தொல்லுல கெங்குமில்லை!

மாய்ந்ததை எண்ணி மறுகையிலே - உயிர்
மாய்க்க மனங் கொள்ளுவேன்; - எழில்
வாய்ந்த குழந்தைகள் முன்வந்து நிற்கையில்
வாழ மனங் கொள்ளுவேன்!
காய்ந்த உளம், புனல் தோய்வ தெனச்சுழல்
காலத்தால் மாளுகின்றேன்! - எழில்
வேய்ந்த அத்தான்! உயிர் பாய்ந்த அத்தான்! இனி
வேகத்தால் பின்தொடர் வேன்!

-1956

## 38

## வாங்க அத்தான்!

அத்தான்! என் உள்ளத்தில் பொங்கும் ஆசை
அத்தனையும் உள்ளடக்கிக் கூறுகின்றேன்;
தித்திக்கும் ஒருசெய்தி! நீங்கள் தந்த
தெவிட்டாத இன்பத்தின் விளைவே! ஆமாம்
முத்துக்கும் ஒளியில்லை என்னு மாறு
மொய்விழிகள்; சிறியநுதல்! இன்ப வெள்ளம்!
ஒத்திருக்கும் உங்கள்உரு; ஆமாம் அத்தான்!
உணர்ந்தீரா யாரென்றே? நம்மின் செல்வம்! 1

போங்க'த்தான்! உங்கட்குப் புரிய வில்லை!
பிறந்துவிட்டான் உங்கள்மகன்! அவனைக் காண
வாங்க'த்தான்; வார்த்தெடுத்த - தங்கப் பாவை!
வைத்தகண் வாங்காமல் எனைப்பார்ப் பீரே!
நீங்கத்தான் விடுவீரா? அதுபோல் என்னை
நீலவிழி எடுக்காமல் நோக்கு கின்றான்!
ஏங்க'த்தான், அசையாமல் இருக்கின்றீர்கள்?
எடுத்தடியை வையுங்கள்! இருப்பீர் இங்கே! 2

பூத்திருக்கும் அழகுமலர் தன்மேல் மொய்க்கும்,
புதுவிழிகள்! எனக்காக, அத்தான் நீங்கள்,
காத்திருக்கும் வகைபோலக் கோவை வாயைக்
காட்டியவா றெப்போதும் துடித்து நிற்பான்!
ஆர்த்திருக்கும் இருகையும், காலும், வாயும்!
அப்படியே உங்களைத்தான் ஒத்தி ருக்கும்!
பார்த்திருக்கும் போதெல்லாம் உங்கள் எண்ணம்,
பறந்துவிடும்! ஆனாலும் அண்டும் மீண்டும்! 3

இன்னொன்று கேளுங்கள் அத்தான்! என்னை
இடையிடையே மறந்தபடி அமைதி பூண்டே
இன்னொன்றைத் தேடுகின்றான்! நேற்றே என்தாய்
இதைச்சொன்னாள்! உங்களைத்தான் தேடு வானாம்!
'தின்'னென்று கன்னத்தைக் கனிவாய் தன்னைத்
தருவானாம் உங்கட்கே! சொன்னான் என்பால்!
பின்னென்ன, வாருங்கள் அத்தான்; உங்கள்
பையனையே கொஞ்சுங்கள்; வேண்டாம் என்னை! 4

எனக்குத்தான் உரிமை என்பேன்; நேற்று வந்த
இன்னொருவன் தனக்குரிமை என்பான்; ஆனால்
சினக்கத்தான் துணிவேனோ? பால்ம ணக்கும்
சிறுவாயை அழகுபெறக் கூட்டி, என்றும்
இனிக்கின்ற தமிழ்மொழியால் “அப்பா” வென்றே
இயம்புகையில், அத்தான், நான் மகிழ்ந்து போவேன்;
தனிக்குன்றச் செந்தோளைக் காட்டு தற்குத்
தடம்பார்த்துக் கிடக்கின்றேன்! இங்ஙன் - கிள்ளை! 5

**-1957**

## 39 ஒட்டு மாங்கன்று!

முல்லை! இவ் வீட்டிற்கு வந்தின் றோடு
முத்திங்க ளானாலும், உனக்கி ருக்கும்
தொல்லையினை அறியேன்;உன் கணவர் உன்னைத்
தீண்டாத மென்மலராய் வைப்பார் என்றும்,
எல்லையிலாத் துன்பம்நீ அடைவாய் என்றும்
எள்ளளவும் எண்ணவில்லை! நேற்று மாலை
கொல்லைக்கு நான்வர, நீ மறைந்து நின்றே
கொடுத்ததுவும் கடிதமென்றே அறியவில்லை! 1

காலையில்நான் அலுவலகம் செல்லும் போது
கதவிடுக்கில் விழிசெலுத்தி முறுவல் - பூப்ப தூஉம்
மாலையில்நீ குழல்முடித்துப் பின்னல் தொங்க
மல்லிகைப்பூச் சரத்தையிட்டே உவப்ப தூஉம்
சேலையினை வகைவகையாய் வேளைக் கொன்றாய்ச்
சிற்றிடையில் ஏற்றியேற்றி உவப்ப தூஉம்
ஓலையினைப் படித்துணர்ந்தேன்! ‘உன்றன் செய்கை
ஒவ்வொன்றும் எனக்கேதான்’ என்னும் உண்மை! 2

"மேவலுறும் மலரென்னைத் தீண்ட வில்லை!
மீட்டுகின்ற புலவனில்லா வீணை யானேன்;
ஆவலுறும் நெஞ்சினுக்கே அமுது வார்க்கும்
அருந்திறனை முதல்மனைவி வாங்கிக் கொண்டாள்!
நோவலுறா தென்னையொரு கனியாய்ப் பூவாய்
நினைத்தெவரும் தீண்டாமல் இருக்க வேண்டிக்
காவலுறு கின்றார்என் கணவர்" என்றே
கடிதத்திற் குறித்திருந்தாய்; கண்ணீர் விட்டேன்! 3

"தள்ளாத பருவமில்லை அவர்க்கும்; என்றும்
தணியாத ஆவலுக்கு வேலி போட்டுக்
கொள்ளாத நிலையெனக்கும்! என்ன செய்வேன்?
குணக்குன்றே அவரென்பேன்! ஆனால் என்ன?
கிள்ளாத மென்மலராய் உள்ளேன்! உள்ளம்
கிளத்த மொழியில்லை! வழியு மில்லை!
உள்ளாத நாளில்லை! உயிரை மாய்க்க
உறுதிபூண் டேன்" என்றாய்; முல்லை! வேண்டாம்! 4

உன்போல வே நானும்! கடந்த ஆண்டில்
ஒருத்தியினைக் கைப்பிடித்தேன்! ஒருதிங் கட்குள்
முன்போல எனைத்தனியே ஆக்கி விட்டே
மூடிக்கொண் டாள்விழியை, நோய்வாய்ப் பட்டே!
அன்போ, அன் றேல் அதனின் இன்ப ஊற்றோ
அறியவில்லை இன்றுவரை! ஆனால், முல்லை
உன்பாலொன் றுரைக்கின்றேன்; நீயும் நானும்
ஒட்டுமாங் கன்றினைப்போல் வாழ்ந்தா லென்ன? 5

எனைப்பிணைந் திருந்தகொடி இறந்த துன்னை,
ஏற்றிருக்கும் கொம்போசெல் லரித்த கொம்பு!
உனைப்பிணைய வைத்ததிக் கொடுமை மக்கள்!
உனக்கதுவே முடிவென்றும் பொய்ம்மை பேசும்;
வினைப்பயனே நீபெறுவ தென்றும் கூறும்!
வேறாக நீதியினை எனக்குச் சொல்லும்,
கனைப்புகளுக் கஞ்சாதே! "ஒப்பி விட்டேன்;
கவலையிலை" என்றெனக்குக் கடிதம் தீட்டு! 6

-1957

## 40 அன்று போல் இல்லை...!

*ஓடி ஒளிந்துன் ஒளிமூழ்கி ஒண்டமிழிற்*
*பாடிக் கதைசொல்லிப் பாங்கியரோ - டாடினமே,*
*அன்றுபோ லில்லை அணிநிலவே; நீளிரவில்*
*நின்றிறைக் கின்றாய் நெருப்பு* 1

*வண்ணச்சிற் றாடையொடு வாயிற் குதித்திறங்கி*
*மண்ணிற்சிற் றில்ல மருங்கமர்ந்தே - உண்ணுவமே*
*அன்றுபோ லில்லை அணிநிலவே; மூண்டெரிதீக்*
*குன்றுபோ லானாயோ கூறு.* 2

*தேங்கிக் கிடக்கும் இரவின் குளிரொளியில்*
*தூங்கிக் கிடந்தோமே தண்ணிலவே - ஆங்கதுபோல்*
*இன்றில்லை; என்னை எரிக்கொழுந்தாய் வாட்டுகின்றாய்*
*நன்றிதுவோ என்செய்தேன் நான்.* 3

*எம்மின் இளையார் இனியகுரல் தாமிசைக்கக்*
*கும்மி யடித்துவந்த கோதையினுக் கன்று*
*விருப்பாகி நின்றாயே வெண்ணிலவே! இன்றேன்*
*நெருப்பாகி நிற்கின்றாய் நீ!* 4

*முத்தை இறைத்த முழுநீலக் கம்பளத்தில்*
*தத்தி நடைபயிலும் தண்ணிலவே! பாலொளியைப்*
*பாய்ச்சுகின்றா யில்லை பருநெருப்பை வாடையிலே*
*காய்ச்சுகின்றாய் இன்று கனன்று!* 5

**-1958**

## 41 தோழியின் அன்பு!

இருகண்கள் வீழருவி எரிபோலுஞ் சிவப்ப,
இருங்குழலோ புயல்பாய்ந்த முகில்போலுஞ் சிதைய,
முருகவிந்த தாமரைபோல் இதழ்நுனியும் கறுப்ப,
முத்திழந்த சங்காகி மணிக்கழுத்தும் தாழ,
அருகலைந்த வகைபோலும், ஆடுகொடி போலும்,
ஆசையெனும் பெருவளிக்குச் சிற்றிடையும் ஒசிய,
பருகுபுனற் கலையுமொரு பாவையிள மான்போல்,
பசிமடிந்தாள் இவளொருத்தி
'பார் பார்'என் றுரைத்தாள்.

தாயிழந்த சேயாகித் தனித்தழுகும் இளையோள்!
தருமுணவை முப்பொழுதும் தள்ளுகின்ற கையோள்!
வாயிழந்த புழுவெயிற்கு வாடுகின்ற வகைபோல்,
வனப்பிழந்து, காதலெனும் கடுவெயிற்குச் சுருண்டே
பாயிழந்த வெறுந்தரையில் படுத்துருளும் மெய்யோள்!
பனிநிலவும் காய்ச்சுதெனும்
பான்மையுளங் கொண்டோள்!
காயிழந்த மரம்போலக் களையிழந்த மயில்போல்
கண்ணுறங்கா ளிவளொருத்தி
'காண் காண்'என் றுரைத்தாள்!

உரைத்தவளின் அன்புமொழி உள்ளம்போ யுருக்க,
உண்மையெனுங் குன்றேறி நின்றனவாய் என்னை,
நுரைத்த புளிங் கள்ளருந்தி நிற்பானைப் போல
நோக்கினான்! நோக்கியென் னுறுதியினை அன்பால்,
கரைத்தவனைப் போல்நெருங்கக் கழன்றதடி நாணம்!
கணப்பொழுதில் அருகிருந்த தோழிமறை வானாள்!
அரைத்திடுநற் சந்தனம்போல் குளிர்ந்ததடி உள்ளம்!
அணுஅணுவாய் வளர்ந்துமலை யானதவன் அன்பே!

-1959

## 42 என்னுளத்தில் நீந்துகின்றாய்!

வானத்து நீள்நெஞ்சில் வந்த குளிர்நிலவே!
மீனத் திருச்சுடரில் மின்னுகின்ற பேரொளியே!
ஆவி துடிக்குதடி! அன்புமுகம் எண்ணுதடி!
கூவி அழைக்குதடி! கொவ்வையிதழ் வேட்குதடி!

தொட்டுத் துடிக்கின்ற தோள்களெல்லாம் பூரிக்கக்
கட்டி யணைத்துக் கனியிதழின் தேனுண்டு
மொட்டுச் சிரிக்கும் முல்லை போல் பல்லழுந்தக்
கட்டவிழ்த்துப் போகும் இளங்காளை போல் இன்பத்தே
மூழ்கிக் குளித்து முழுமயக்க நல்லமைதி
சூழுமென எண்ணிச்செந் தமிழே வந்ததில்லை.

அன்புத் திருவிளக்கை அழகுக் கயல்விழியும்,
பண்புத் தமிழ்நெறியைப் பாய்ச்சும் பணிமொழியும்
காணாத பெண்மையைக் காட்டுகின்ற நின்நடையும்
பேணாத வாறென்னைப் பேணத் துடிக்கும்
மலர்க்கையும் அழகுத் திருவிரலும், தாமே
உளத்தில் ஒளிகாட்டி உன்னை விரும்புதற்கே
ஈர்த்து வளைத்ததடி! என்னுயிரைத் தின்றதடி!
ஆர்த்தபே ரறிவும் அடிசாய்ந்து வீழ்ந்ததடி!
உன்னை நினைக்கையிலே மேனியெல்லாம் மின்னுதடி!
என்னை அறியாமல் என்னுள்ளந் தாவுதடி!
கண்ணில் ஒளிமங்கிக் காட்சி மறையுதடி!
உண்ணுகின்ற சோற்றில் ஒருகவளம் ஏற்காமல்
நாக்குப் புரட்டுதடி! நல்லுடலும் சோர்ந்ததடி!
நோக்குப் பிசகுதடி! நூறுமுறை நோக்குதடி!
கண்ணிமையை மூடிக் கனவிலுனைக் காண்கின்றேன்.
எண்ணி முடிக்குமுன்னம் எங்கோ மறைகின்றாய்!
எட்டிப் பிடிக்க இருகையை நீட்டுகின்றேன்!
கட்டை தென்படவே காணா தலைகின்றேன்!

வந்தேன்; எழிலுருவை வல்லிருளில் யான்கண்டேன்!
செந்தேன் இதழில் சிவப்பொழியத் தேனுண்டேன்!
நீண்ட கருங்குழலை நீவி மகிழ்ந்திருந்தேன்!
ஆண்ட கைமலரை அள்ளியள்ளி முத்தமிட்டேன்!

என்றாலும் பாவி இருகண்ணால் நின்னுருவில்
ஒன்றி எழில் காட்டும் ஒளியழகைக் காணவில்லை!
கண்ணிமையா நோக்கிக் கருத்துணர்த்தும் நின் விழிகள்
என்ன உணர்த்தவென்று யானறியக் கூடவில்லை!

நெற்றிப் பிறைத்துண்டும், நீல மலர்க்கையும்
ஒற்றி மகிழ்கையிலே உள்ளே கனற் காய்ச்சல்
வாட்டிக் கருக்க நீ, வாடித் தளர்ந்திருந்தாய்!
நீட்டிப் படுக்கவைத்து நின்னுடலை யான்தொட்டுக்
காய்ச்சி முறுக்கும் கனல்குளிர நல்மருந்தைப்
பாய்ச்சி ஒளிவாயின் பல்லழகைக் காணவில்லை!

முத்தே! அழகே! முழங்கும் கவின் சுடரின்
வித்தே! விளக்கே! வியப்பில்லை! கேட்டுக்கொள்:
உன்னையான் கண்ட ஒருநாளில் நானென்ன
எண்ணிக் குழைந்தேனோ இன்றளவும் செத்தேனோ?
நூலெடுக்குங் காலும் நெடும்பாடல் தீட்டுதற்குக்
கோலெடுக்குங் காலுமெந்தக் கோலமயில் ஆடிற்றோ,
அந்த மயிலை, அழகுத் திருக்குயிலைச்
சொந்தமாக் கிக்கொண்டேன்;
சுற்றி வளைத்துவிட்டேன்!

யான்பெற்ற பேற்றை எண்ணி மகிழ்கின்றேன்,
கூன்பெற்ற வல்குருடன் கூன்நிமிர்ந்து கண்பெற்றுக்
கூத்தாடு மாறாய்க் குளிர்நிலவே ஆடுகின்றேன்,
சாக்காடும் என்றன் உளத்தைக் குளிர்விக்கும்,
ஆவி யிழந்தாலும் அன்பே அருகிருந்தால்
மேவி மனமகிழ்வேன்! பாடி மிதந்திருப்பேன்!
என்னை மறவாதே! ஏந்திழையே யான் மறவேன்!
உன்னை மறந்தோ உயிர்வாழ்வேன்! அன்றன்று!
முன்னடைந்த காதல் முழுக்காதல் என்றெண்ணி
முன்னி உவந்திருந்தேன்; மொய்ம்மலரே! உன்றன்பால்
ஆவி சுழன்றதுபோல் அன்றிருக்கக் காணவில்லை,
மேவி ஒளிச்சுடராய் மின்னி வருந்தவில்லை,
காந்துகின்றாய் என்னைக் கவின்நிலவே! என்னுளத்தில்
நீந்துகின்றாய் நீந்துகின்றாய் நீ!

**-1959**

## 43 வருவாளோ?

ஓவிய நலன்கள் முற்றும்
மேவிய ஒருத்தி என்றன்
ஆவியைப் பறித்தெடுத்துச் சென்றாள் துயர்
தூவிய உள்ளத்தை அன்றே கொன்றாள் - அவள்
ஏவிய விழிக் கணையில்
தாவிய என் உள்ளம் பட்டுக்
கூவிய ஓலத்தை மடுப்பாளோ? இன்ப
வாவியில் மிதக்க விடுப்பாளோ? 1

கட்டிய முல்லை அரும்பாய்க்
கொட்டிய மலர்ச் சிரிப்பை
ஒட்டிய செங் கோவை இதழ்க் குள்ளே - அடைப்
பட்டிடக் கிடத்தி வைத்த கிள்ளை,கை
தொட்டிடும் பொழுதில் எல்லாம்
எட்டிய தோர்புள்ளி மானின்
குட்டியாய்ப் பொன் மேனி தருவாளோ? - தானும்
மட்டிலாத இன்பம் பெறுவாளோ? 2

குங்கும நுதற் பிறையும்
சங்கெழில் புனை கழுத்தும்
தங்கிய பொன் வண்டின் ஒளிமின்னும் - நுரை
நுங்கிய என் ஆவல், உயிர் தின்னும் - முழுத்
திங்களின் குளிர் முகத்தில்
மங்கிய காதற் குறிப்பும்
எங்கெங்கும் எனை எடுத்துச் செல்லும் - காதல்
பொங்கிடக் கோடிக் கதைகள் சொல்லும். 3

தேடிய என் கண்கள் பொங்க
ஓடிவந்(து)இளைத்த என்னை
நாடியிழுத் துள்ளம் அணைப் பாளோ? - உயிர்
கூடியுடல் முற்றும் நனைப்பாளோ? - நான்
பாடிய பாட் டொன்றுக் காடி
வாடிய இடை வருந்தி
ஊடிய விழி மயங்கு வாளோ? - உடன்
கூடிட எனை முயங்கு வாளோ? 4

-1960

## 44 மகனே இது கேள்!

மகனே இதுகேள்!
முகம்நிமிர்த்தி அன்னை மொழிந்தாள்; அவள்விழி,
அகம் உயிர் எல்லாம் அழுதுகொண் டிருந்தன!
தண்ணிய கைகளால் நெற்றியைத் தடவிப்
பெண்மையும் தாய்மையும் பிணைந்து பின்னிய
மென்மைக் குரலால் மேலும் என்னிடம்,
"அன்புப் பிள்ளையே! அன்னைநான்; வேறலள்;
உள்ளும் புறமும் உன்னை உணர்ந்தவள்
கள்ளமில் நெஞ்சும் கருத்தும் அறிந்தவள்
அவ்வா றே, நீ எனையும் அறிந்தவன்
எவ்வெத் துறையை யும் நீ படித் திருப்பவன்!
இந்த வகையினில் மட்டும், நீ என்னையும்
தந்தை மொழியையும் தட்டலா காது!
மற்றுநின் தந்தையோ தாமும் மனங்கொண்டு
உற்ற நிலைகளும் உலகமும் காலமும்
ஆர நினைந்தே, 'அவட்குநீ; உனக்கவள்
வேறு முடிவிலை' என்று விளம்பினார்.
பெண்ணை ஒருமுறை பார்த்துவா; பின்னர் உன்
எண்ணம் இதுவென எனக்குரை; தந்தைபால்
நானுன் முடிபை நறுக்கெனச் சொல்லி
மானென எவளைநீ மதித்து, 'மணமுடி'
என்பையோ அவளைநான் ஏற்று முடிக்கிறேன்,
'என்கண் ணன்றோ?; எழடா செல்வமே'
என்றென் நெஞ்சையும் உடலையும் எழுப்பி,
அன்பால் நிறுத்தினார்; அக்கால் தந்தையும்
என்பால் நெருங்கி, எதிர்வந்து நின்றே

"இதோ,பார் மணிமுடி! இனியநின் நண்பன்
ஏந்தல் தன்னையும் இட்டுப்போ; இருவரும்
நாளை முன்பகல் வண்டியை நாடினால்
பாளையூர் சென்று மாலையே திரும்பலாம்!
பெண்வீட் டாருனைப் பெரிதும் அறிந்துளார்.
கண்போல் உன்றனைக் கருத்தாய்ப் பேணுவர்,
பெண்ணைநீ பார்த்திடல்நன் றெனும் பெற்றியால்
உன்னை வேண்டினோம்; மறுத்திடல் உயர்விலை"

என்றெனைப் பல்வா றியம்பி இணங்குவித்து
அன்றை முழுவதும் அணியப் படுத்தினர்!
அன்று மாலைபோய் அன்பன் ஏந்தல்பால்
ஒன்றும் விடாமல் உரைத்தேன்; இசைந்தனர்,
மறுநாள் நான்செலும் மகிழ்ச்சியால்
திருநாள் போலத் திரிந்தனள் அன்னையே!

மானும் மயிலும் போலொரு பெண்ணை மனத்தெண்ணி,
யானும் ஏந்தலும் பாளையூர் நண்ணி நடைதாங்கிக்
காணுஞ் சோலையும் நெல்விளை கழனியும் பலதாண்டி
மீனும் நாரையும் மேய்தரு தெண்ணீர்க் குளங்கண்டோம்!
..............................................................................
..............................................................................

(முடிவுறாப் பாடல்)

**-1960 (?)**

## 45

## கலித்துறை!

யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலுனுன்டான்,
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புன்றாங் கைதையு மெல்லார் கபிரியனிறே. 1

இறுதி முறையா யொருமுறை யவளை யிவனோக்கி
உறுதி பயப்பதா மோருரை நன்றா யுரைப்பானேல். 2
..............................................................................
..............................................................................

(முடிவுறாப் பாடல்)

**-1960 (?)**

## 46 இன்பமேன் தோழி!

பொன்னேபோ லுடை யுடுத்திப் பொட்டிட்டு மலர்ச்சூடி
தன்னேரி லாதபெருந் தடங்கண் ணில் நகையூட்டி
இன்னாள் வரையில்லா இன்பமேன் தோழி யென்றேன்
பன்னாள் மறந்திருந்தோன் பறந்துவந்தானென்று சொன்னாள்!

குளங் கொண்ட தாமரையின் கொடிதுவளக் கண்மலரோக்
குளம் போலுங் கண்ணீராற் றோய்ந்திருந்தே யின்று மட்டும்
விளங்கும் மகிழ்ச்சிக்கு விரிவென்னத் தோழியென்றேன்!
உளங் கண்டோன் என்னிடத்திற் கோடிவந்தா னென்று சொன்னாள்!

முழுநிலவைக் கருமைநிற முகில்மூடி யிருந்தாற் போ
லழகுமுக வொளி காணா தடர்ந்த குழல் மூடியின்றும்
பழகுதமிழ்ப் பாவலரின் முகம் போ லென் தோழி யென்றேன்
கழகஞ் சொல் கல்விகற்றேக்கடி துவந்தா னென்று சொன்னாள்!

-1960 (?)

## 47 வஞ்சித்தாழிசை

மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனே காண்.

பேடையை யிரும்போத்துத்
தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையாண் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.
..................(முடிவுறாப் பாடல்)........................

-1960 (?)

## 48 மருத்துவக் காதல்!

**(நகை யோவியம்)**

**தலைவி**

*உமக்கெனப் பூத்தவள் நானிருக் கின்றேன்;*
*ஊர்ப்பெண்ணைப் போய்த்தொட லாமா - அத்தான்!*
*உதையடி மிகப்பட லாமா? - நமை*
*ஊர்சிரித் திடவிட லாமா?- அட*
*உங்களுக்கும் மதிகெட்டுப் போமா? - கயி*
*றொருமுழங் கொண்டுதர லாமா?- வினை தாமா?*

**தலைவன்**

*முக்கனி பிசைந்த முழுச்சுவை போலும்*
*முத்தமிழில் தேன்பால் கலந்தாய் - வாய்*
*முத்தமொன்று நேற்றிரவில் தந்தாய் - இன்று*
*முழுதும் இனித்ததடி என்வாய்! - அதில்*
*மூழ்கி யிருக்கையில் நீ வந்தாய்! - அந்த*
*மூளியினைத் தொட்டதற்கா*
*நொந்தாய்,உடல் வெந்தாய்?*

**தலைவி**

*எட்டியே இருங்கள்; இழிசெயல் புரிந்தீர்!*
*எத்தனைநாள் இந்தவகை தொட்டீர் - பிற*
*கெத்தனைபேர் கைநழுவ விட்டீர்? - அதில்*
*எவ்வெவர்பால் நல்லவுதை பட்டீர் - ஊர்*
*இருக்கும் இருப்பில் நிலை கெட்டீர் - இனி*
*என்றனைக்கை நீட்டியுடல் தொட்டீர்,புகழ்கெட்டீர்.*

**அவன்**

*கதையினைக் கேளடி; கருத்தினில் கொள்ளடி!*
*காயம்பட்ட தென்றாள்; மருந் திட்டேன்! - அவள்*
*கையையதற் காகவெனத் தொட்டேன்! - இதைக்*
*கண்டடிக்கக் கோலெடுத்து விட்டான் - நிலை*
*கண்டவர்கள் உண்மைசொல, விட்டான் - அவன்*
*காலி; அவள் நீலி; நானும் பட்டேன்,பணிவிட்டேன்!*

அவள்

மருத்துவம் பயின்ற மன்னரே; கேளும்!
மதிகெட்டேன்; பார்த்தவிழி கெட்டேன் - உங்கள்
மாசகன்ற நெஞ்சைக்கீறி விட்டேன் - அங்கு
மங்கை யென்றன் சாயல்கண்டு விட்டேன் - உயிர்
மகிழ மகிழ அன்பை நட்டேன்! - இனி
மாளும் வரைக்கும் ஐயம் விட்டேன் - என
மலர்க்கையால் உங்கள்தலை
தொட்டேன் ஆட்பட்டேன்.

அவன்

பவழக் கனிவாய் இதழைக் காட்டடி;
பசித்திட வேண்டுமென்றன் அன்பை - உயிர்
பனித்திடப் பனித்திடத் தின்பை - எண்ணிப்
பார்த்ததற் கிணையெனப் பின்வை - நான்
பசித்தவன்; நிலாமுகம் முன்வை! - ஒரு
பார்வையில் ஈர்ந்திடுங் கண்,வை காதற் பண்,வை!

**-1962**

## 49 மறப்பரோ?

காட்டு வழிகடந் தென்னைக் கண்டதும்
கைகள் நீட்டி அணைத்ததும்
வாட்டு வாடையில் இருளில் அமர்ந்தவர்
வன்சொல் பற்பல உரைத்ததும்
கோட்டு மலரினைக் குழலில் வைத்ததும்
கூம்பு மலரிதழ் சுவைத்ததும்
நீட்டு கையடித் துண்மை செய்ததும்
நினைப்ப ரேயெனில் மறப்பரோ?

உச்சி முகர்ந்ததும் ஊன்று விரல்களில்
ஒப்பனைக் குழல் அளைத்ததும்
எச்சி லுண்கனி சுவைத்ததும் அணைத்
திருகை பொன்வளை யிட்டதும்
கச்ச விழ்த்து முடித்ததும், அவர்
கைக ளால்விழி போர்த்ததும்
நச்சி இளமையின் நலஞ்சு வைத்ததும்
நனவென் றாலெனை மறப்பரோ?

மண்டு குளிரினில் மணலின் பரப்பிலென்
மடியில் அவர்தலை புரண்டதும்
பண்டு பாவலர் மொழிந்த அகத்திணைப்
பாடல் கட்குரை கண்டதும்
தண்டு மலரடி நோமெனச் சொலித்
தடுத்தும் கால்களைப் பிடித்ததும்
உண்டு மகிழ்ந்ததும் ஊட்டி உவந்ததும்
உணர்வ ரேயெனில் மறப்பரோ?

விரிந்த மாமர வேர்த டுத்தெனை
வீழ்த்ததும் உளந் துணுக்குற
பரிந்தெ டுத்தெனை இறுக அணைத்ததும்
பாழ்த்த வேரை அகழ்த்ததும்
பிரிந்தி டில்உயிர் பிழைத்த லிலையெனப்
பேசி இல்வரை வந்ததும்
புரிந்த நாடகக் குறும்புக் காட்சிகள்
பொய்க்கு மோ,எனை மறப்பரோ?

-1966

## 50 காத்திருந்தேன் உங்களுக்கே!

அவள்:

*காத்திருந்தேன் உங்களுக்கே!*
*கண்விழித்தேன் இராப்பகலாய்!*
*பூத்திருக்கும் முல்லைமலர் இங்கே; - எழில்*
*பொங்குகின்ற நெஞ்சநினைவெங்கே?* 1

அவன்:

*தலைநிமிர்த்த நேரமில்லை;*
*தனிநலத்தில் நாட்டமில்லை;*
*விலையுரைக்கப் படுந்தமிழை எண்ணி - நெஞ்சம்*
*வேகுதடி; வேகுதடி; கன்னி!* 2

அவள்:

*காதலென்ன கல், இரும்பா;*
*காலமெல்லாம் பூத்திருக்க?*
*சாதல்வரு முன்னே,இள வேனில் - ஒளி*
*சாம்பிவிட்ட பின்னே,முது வேனில்!* 3

அவன்:

*பூமணமும் மோப்பதில்லை;*
*புத்திளமை ஈர்ப்பதில்லை;*
*நாமணக்கும் தமிழ்த்துயரை எண்ணி - உடல்*
*நாளமெல்லாம் கனன்றதடி கன்னி!* 4

அவள்:

*முத்தமிழை நோகவில்லை;*
*முகங்கடுத்துங் கேட்கவில்லை;*
*முத்தமழை பொழிந்திடலா காதா?,அன்பு*
*முகைவிரிதல் செந்தமிழ்க்குத் தீதா?* 5

அவன்:

*அக்த்துறைக்குப் பஞ்சமில்லை;*
*அன்புவளம் கொஞ்சமில்லை;*
*மிகுத்த துயர் தமிழ்மொழிக்கே இன்று! - துயர்*
*மீட்டிடவே நாம்முனைதல் நன்று!* 6

அவள்:

*மீட்டிடத்தான் வேண்டுமெனில்*
*மின்னிழையைத் துறப்பதென்ன?*
*கூட்டிலடை பட்டகிளி யோ, நான்? - என்*
*கொள்கை, உயிர் யாவுந்தமி ழேதான்!*

*7*

அவன்:

*அப்படித்தான் செப்படியோ!*
*ஆண்டதமிழ்ப் பொற்படிவே!*
*எப்படிக்கும் முதற்படியே தமிழ்தான் - அடி*
*இப்படிவா; இனியுன்இதழ் அமிழ்தாம்!*

**-1969**

## 51 வீடு மாற்றம்!

**முதல்நாள்!**

அதிர்ந்தது வண்டி! அன்னையும் நானும்
எதிர்ந்த வீட்டை எட்டிப் பார்த்தோம்!
ஒற்றை மாட்டு வண்டியங் கொன்று
சற்றுமுன் தள்ளிச் சந்தின் ஓரத்தில்
வந்து நின்றது!
வண்டியுள் ளிருந்து
ஐந்தாறு பெட்டிகள், அண்டா, குண்டா,
பாய், தலை யணைகள், படுக்கை, மூட்டைகள்
ஏயும் சிறுசிறு பொருள்கள் இவற்றுடன்
புதுப்பெண் ஒருத்தி பொசுக் கெனக் குதித்தாள்!

கதுப்புக் கன்னம்! கண்ணாடி மாளிகை!
வட்ட நிலாமுகம்! வயிர விழிகள்!
கொட்டும் மழைமுகில் எனக்கருங் கூந்தல்!
மணம்வாரி இறைக்கும் மல்லிகைக் காடு!
குணந்தோய் பவழக் குலையெனும் இதழ்கள்!
பட்டுச் சேலை; பளபளக்கும் சட்டை;
அட்டிகைக் கழுத்து; வளையல் அடுக்கு;
காதுக் கம்மல்; கல்மூக் குத்தி;
தோதாய்ச் சுமந்த தோகை மயிலவள்!
மிதிவண்டி ஒன்று வந்து நின்றது!
குதித்தான் ஒருவன்; கொண்டன் போலும்!
பூட்டிய வீட்டைத் திறந்ததும் பொருள்களை
வீட்டின் உள்ளே விரைந்து வைத்தனர்!
வண்டிக் காரனும் வந்தவ னோடு
முண்டியும் தூக்கியும் முடுக்காய் உதவினான்!
எல்லாப் பொருள்களும் ஏகிய பின்றை
நில்லாமல் நகர்ந்தது, நெடுமணி வண்டி!

பக்கத்து வீட்டுப் பலகணி யெல்லாம்
எக்கி எக்கிப் பார்த்த தலைகளும்
மாடமே லிருந்து மறைந்து நோக்கக்
கூடிய விழிகளும் வாடிக் குலைந்திட

வந்த புதுப்பெண் வலக்கால் தூக்கிச்
செந்தா மரையடி சிலம்பிடச் சென்று
புதுக்குடி புகுந்தாள்; புகுந்தவள்,
சடக்கெனக் கதவைச் சார்த்திக்கொண் டாளே!

**இரண்டாம் நாள்!**

என்னை! 'எதிர்வீட்டில் எவருளர்' என்றென்
அன்னை, பார்த்திட, அனுப்பி வைத்தார்!
நான்சிறு பையன்! நடையை அடைந்தேன்!
தானாய்க் கதவின் தாழ்திறந்து கொண்டது!
நிலாமுகம் வெளியே நீட்டிப் பார்த்தது!
உலாவின விழிகள்! உடனே செவ்விதழ்
விரிந்தது; முத்துகள் வெள்ளொளி 'சிதறின'
சரிந்த குழல்எனைச் சாய்த்துக் கேட்டது,
"யார்தம்பி, நீ?" என! "எதிர்வீடு! சும்மா
பார்க்க வந்தேன்" எனவிடை பகர்ந்தேன்!
"அப்படி யா? வா?" அழைப்பு வந்ததும்,
"எப்படி? என்ன?" என்றெலாம் கேட்டு,
விளக்கம் தெரிந்தபின் வீடு வந்தேன்!
அளக்க லாகா இன்பமும் அடைந்தேன்!
அன்னை யிடத்தில் அனைத்தும் சொன்னேன்!
என்னை வீட்டில் இருக்கச் சொல்லி
அன்னை சென்றார் அமிழ்தம் வீட்டிற்கு!
என்னிடம் அவள், சொன்ன இன்பெயர் அதுதான்!
அமிழ்தின் கணவர் பள்ளியா சிரியர்!
அமிழ்தம் புதுப்பெண்! திருமணம் ஆகி
மூன்று மாதமே முடிய வில்லையாம்!
தோன்றும் 'தனிமை' மிகவும் தொல்லையாம்!
எனவே அவளும் என்றன் அன்னையும்
முணுமுணு வென்றே முழுநாள் பேசுவர்!
பேச்சில் ஒருவரைப் பிடித்தால்
மூச்செலாம் பேச்சாய் முழங்குவார் அன்னையே!

**3,4,5–ஆம் நாள்கள்!**

அமிழ்தமும் அன்னையும் அடிக்கடி இணைந்து
கமழக் கமழப் பேசிக் களித்தனர்!

அன்னையே அமிழ்திடம் செல்வார்; அன்றெனின்
என்னை அனுப்பி அமிழ்தை இழுப்பார்!
அவரும் அவளும் அரட்டை அடிக்கையில்
எவரும் இடையில் நுழைதல் இயலாது.
அமிழ்தம் வந்தால் அனைத்து வீடும்
கமழும் மல்லிகை! கால்சிலம் பொலிதான்!
சிற்சில நேரம் அமிழ்தம் சிரிக்கையில்
பற்களின் அழகைப் பார்த்து வியப்பேன்!
சிரித்துச் சிரித்துப் பேசும் பொழுதெலாம்
சரிந்து சரிந்து வீழும் வளையல்கள்
புதிய புடவையின் முரமுரப் போசை
பதிந்து நின்றதென் பசுமைஉள் ளத்தில்!
அன்னையும் அமிழ்தமும் அடிக்கும் அரட்டையில்
என்னென்ன செய்தியோ இழைந்து தொடரும்!
தாயைப் பற்றியும் தந்தையைப் பற்றியும்
வாயே வலியாமல் பேச்சுகள் வளரும்!
கணவனைப் பற்றிய கதையும் அடிபடும்!
மணநாள் விருந்தின் மணமும் வீசும்!
கொண்டவன் ஊரும், குடும்பச் செய்தியும்
கண்ட காட்சியும் கமுக்க நிலைகளும்,
சென்றதும் இருப்பதும் செறியச் செறிய
ஒன்று விடாமல் ஓயாமல் உலாவரும்!
காலையில் கணவர் பள்ளி சென்று
மாலையில் வரும்வரை அரட்டையின் மணந்தான்!
அன்னையும் சலியாது அமிழ்தின்
கன்னல் பேச்சில் கழித்தாள் பொழுதையே!

**6 முதல் 10–ஆம் நாள் வரை!**

குடும்பப் பேச்சுகள் குறையத் தொடங்கி
அடுத்த வீட்டையும் அண்டை வீட்டையும்
அறிமுகப் படுத்தி அன்னை தொடங்கினார்!
குறிமுகங் கண்டு கூட்டியும் குறைத்தும்
அயலயல் வீட்டுச் செய்திகள் அனைத்தும்
கயல்விழி நோக்கக் கனியக் கனிய
அமிழ்தம் செவிக்கே அன்னை ஏற்றினார்!
தமிழின் வளமையும் தண்மையும் மென்மையும்
அனைத்துச் சுவைகளும் அன்னையின் பேச்சில்

தனித்தனி யாகத் தாம்வெளிப் பட்டன!
மூன்றாம் வீட்டில் இருந்தவோர் முரடன்,
நான்காம் வீட்டின் நாடக நடிகை,
தம்மைப் பற்றியும் தாயார் உரைத்தார்!
எம்மனைச் செய்தியில் ஏற்றம் காட்டினார்!
அமிழ்தம் இவற்றை ஆர்வமாய்க் கேட்டாள்!
குமிழ்ச்சிரிப் பிடையிடைக் குமிழியிட் டோடும்!
குலுங்கக் குலுங்கச் சிரிப்பதும் உண்டு!
இலங்கிய பேச்சால் இன்பம் மிதக்கும்!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையில்
எவ்வொரு சிணுக்கும் எழாமல் பேசினர்!
இவ்வாறாகத் தெருவினில் இருந்த
ஒவ்வொரு குடும்பமும் தெறித்ததவ் வுரையில்!
பத்து நாட்களும் பறந்தன,
முத்து நகையிலும் பேச்சிலும் முழுகியே!

**11 முதல் 19–ஆம் நாள் வரை:**

வந்துகொண் டிருந்த அமிழ்தின் வரவு
வெந்த சோற்றின் விரைவடங் கல்போல்
நாளுக் கிரண்டொரு நடையென நலிந்தே,
ஆளுக்குப் பலமுறை அழைப்பு விடுத்தால்,
எப்பொழு தோ,வந்து 'ஏன்' எனக் கேட்கும்
மப்பு நிறைந்து மங்கிப் போனது!
தாயார் வருந்தினார் உள்ளமும் தளர்ந்தார்!
நோயால் துன்புறு வாளோ என்றே
இவரே அவளிடம் ஏகத் தொடங்கினார்!
அவளப் பொழுதெலாம் 'அது' 'இது'வென்று
வேலை யொன்றில் வேண்டு மென்றே
காலம ராமல் கையம ராமல்
ஈடுபட் டிருப்பதாய் இருப்புக் காட்டினாள்!
வாடிய முகத்துடன் அன்னையும் வருவார்!
"என்ன வந்ததாம், இவளுக்" கென்றும்
"சொன்ன வற்றிலோ சோர்வுறும் படியோ
வருந்தும் படியோ வந்திலை" யென்றும்,
அருந்தும் போதும் அயர்வுறும் போதும்
எண்ணினர் அன்னை! ஏங்கி
நண்ணி யிருந்தனர் அவள்வரும் நாளையே!

## 20–ஆம் நாள்

அந்தநாள் வந்ததே! அமிழ்தமும் வந்தாள்!
வந்ததும் அன்னையார் வருந்தி, வராத
இடைநிலைக் கிரண்டோர் இயலாமை கூறிக்
கடைப்பொருள் நிலையும் காட்சி சென்றதும்,
பெற்றவர் மடலும், பிறிதொரு நாளில்
உற்றவ னோடவள் கொண்ட ஊடலும்
ஒன்றுவிட் டொன்றாய் உவகையும் வருத்தமும்
நின்றபல் செய்திகள் நிகழ்த்தி முடித்தே,
அன்னையின் மருங்கில் அணுக்க நெருங்கி,
என்னையும் ஒருகண் ஏறப் பார்த்தே,
“அம்மா, கேட்டிரா, அவன்தான் முரடன்...
சும்மா அடிக்கடி சுட்டு விடுதல்போல்
என்றெனைப் பார்க்கிறான்; இருமிக் கனைக்கிறான்;
நின்று வாயிலில் நீளத் தும்முவான்!
இச்செயல் பற்றி எடுத்துக் கூறி
எச்சரித் திடவே, என்கண வரிடம்
கூறவும் எண்ணினேன்; கூறியபின்,அவர்
வேறாய் நினைத்து, வினையாய் முடிந்தால்
தொல்லைப் படிப்படி தொடருமென் றெண்ணிச்
சொல்லா தொழிந்தேன்; சொல்லுவீர் அம்மா!
என்செய் வதுநான்?” எனமிக மெதுவாய்ப்
புன்செயல் தன்னைப் புறத்தே விளித்தாள்!

அன்னையார் அவளை அடக்கி, “அம் முரடனின்
முன்னை, நீ நின்றது முதற்பிழை” என்றாள்!
“நான்ஏன் நிற்கிறேன், இந்தநாய் முன்னம்?
ஆவின் சாணம் அள்ளித் தெளிக்கவே
காலையில் வருவேன்; காய்கறிக் கடைக்கு
மாலையில் செல்லுவேன்; மற்ற, ஏன் வருகிறேன்?
கால்செருப் புறாத கயவோன் இவனால்
காலையும் மாலையுங் கடைக் கதவினை
அடைத்துப் போட்டே அடுப்படி யினையே
துடைத்துக் கொண்டுதான் இருக்கவும் வேண்டுமோ?
என்னம்மா சொல்கிறீர், நீங்களும்?” என்றே
மின்னலும் இடியுமாய் மேலுறக் கேட்டாள்!

"உன்றனைச் சொல்லவில் லையடி! உலகில்
நன்றுந் தீதுமாய் நடந்திடும்; நாம்தாம்
கண்டு விலகியும், காது கொடாமலும்
உண்டு, இலை எனுமா றொதுங்கி இருந்திடல்
வேண்டும் என்றேன்; வீணரின் மனத்தைத்
தூண்டும் நிலையின்றித் தொலைவினில் நாமே
சென்று விட்டால் சிறுமைக் கிடமிலை".
என்று விளக்கினாள் அன்னை! 'நன்'றென
அமைந்து சென்றாள் அமிழ்தம்!
குமைந்தார் "உலகம் கொடி"தென் றன்னையே!

**30–ஆம் நாள்!**

"ஆட்டுக் குட்டி அரிசியைத் தின்ன,
வீட்டுக் கதவைத் திறந்து விட்டே
எங்கே போயினள் என்று போய் நீ, பார்!
அங்கெங் காகிலும் அக்கம்பக் கத்தில்
அரட்டை அடிப்பாள் அமிழ்தம்" என்றெனை
விரட்டினார் அன்னை! விரைந்து சென்றே
அண்டை வீட்டிலும் அயலயல் வீட்டிலும்
உண்டா இல்லையா எனவே ஒருமுறைக்
கிருமுறை தேடி, எங்கணும் இன்றி
முரடனின் வீட்டு முன்றிலில் உள்ள
திண்ணையில் அமர்ந்தேன்! தீயவன் அவனும்
திண்ணைமுன் இருந்த திண்டினில் இருந்தான்!
முன் அறைக் கதவு மூடி இருந்தது!
"என்ன செய்தி?"யென் றெனையவன் கேட்டான்!
"அமிழ்து,அக் காவைக் காணோம்; அரிசியை
முறத்தினில் இட்டு, முன்றினில் வைத்து,வாய்ப்
புறத்துக் கதவைப் பூட்டாமல் எங்கோ
சென்றிருக் கின்றாள்! அனைவரும் தேடினோம்"
என்றுநான் சொன்னேன்; இதற்குஅம் முரடன்,
"ஓ, ஓ! அந்தப் பெண்ணா? அதோ,இச்
சாலைப் புறத்தினில் சந்தொன் றுளது,பார்,
அவ்வழிச் சென்றதை அரைமணி முன்னர்
இவ்விடத் திருந்துநான் பார்த்தேன்; சென்று,பார்!"
என்று சொன்னான்! ஏனோ நானும்
'நன்'றெனச் சொல்லி நகர்ந்திடா திருந்தேன்!

ஐந்து நிமையம் அமைதியாய் நகர்ந்தது!
இந்தப் பொழுதில் உள்ளறை இருந்தே
"வீட்டிற்குப் போகவா...?" என்றவ் வீணனைக்
கேட்டதங் கொருகுரல்! கிறங்கிற் றென்தலை!
அமிழ்துதான் பேசினாள்! 'அங்குநான் இலை'யென
அமிழ்தம் எண்ணினாள் போலும்! ஆங்குடன்
அன்னை யிடம்போய், "அமிழ்தம் அக்காள்
என்ன தேடியும், எங்கும் இலை" யெனச்
சொன்னேன்; அன்னையும் சொன்னார்;
"இன்னமும் அறியாப் பெண்ணவள்" என்றே!

**35–ஆம் நாள்!**

கணவன் அமிழ்தை கடுமையாய் அடித்ததும்
கிணற்றில் அவள்விழப் போனதும், கீழ்வீட்டுக்
காரி வந்து காய்வாங்கும் போதில்
நேரில் சொன்னதாய் நிகழ்த்தினார் அன்னை!
பாதையில் பற்பலர் கூடிக்
காதொடு காதாய்க் கசமுச வென்றார்!

**40–ஆம் நாள்!**

குதிரை வண்டி குலுங்குஞ் சலங்கையோ
டெதிர்வீட்டு முன்றிலில் எடுப்பாய் நின்றது!
வீட்டுப் பொருளெலாம் வண்டிக்கு விரைந்தன!
வாட்ட முகத்துடன் கணவனும் வந்து
வண்டியின் முன்புறம் வாகிலா தமர்ந்தான்!
முண்டிக் கொண்டு முளைத்த தலையெலாம்
பலகணி யெங்கும் பதிந்து நின்றன!
விலகிய திரைப்புறம் விழிகள் நீந்தின!
அன்னையும் நானும் அறைக்கத வோரம்
மின்னல் வீச்சுக்கு மிகக்காத் திருந்தோம்!
நடுவீ தியிலே நழுவிய நிலாவெனத்
திடுமென அமிழ்தம் தெரிந்தாள்; மறைந்தாள்!
குதிரைக் குளம்பொலி சதங்கையின் குலுங்கல்
அதிர்வினில் சிற்சிலர் நகையொலி அடங்கின!
சூழ்கின்ற பொய்யின் சுவடித்த
வாழ்வை எண்ணி வருந்தினேன் நானே!

-1976

## 52 ஒரு காதல் கதை!

அவள் விரும்பி மணந்துகொண்டாள், அவனை! என்றும்
அளவில்லா அன்புணர்வைச் சொரிவான் என்றே
அவள் விரும்பிக் கனவு கண்டாள்; நம்பிப் போனாள்!
அனைவர்க்கும் பெருமையுடன் உரைத்தும் வந்தாள்!
'இவள் பெருமைக் களவில்லை; உண்மை!' என்றே
எல்லோரும் நினைத்திருந்தார்! ஆனால் இன்று
துவள்கின்ற நிழல்போல வாழ்க்கை செய்வாள்!
துரும்பானாள் உடலில்;உளம் இரும்பா னாளே!

கற்றவர்தாம் எனவுரைத்தாள்; பெருமைப் பட்டாள்!
கடுகளவும் பொய்யில்லா நெஞ்சம் வாய்க்கப்
பெற்றவர் தாம் என வியந்தாள்! மகிழ்ச்சி கொண்டாள்!
பிழையற்ற நல்லுணர்வால் தன்மேல் காதல்
உற்றவர்தாம் எனநினைந்தாள்! 'இருக்கும்' என்றே
உறவினர் நினைத்திருந்தார்; ஆனால் இன்று
பற்றவிழ்ந்த துறவியைப்போல் பேசு கின்றாள்!
பாழ்ங் கண்ணீர் நிற்கவில்லை; வடிக்கின் றாளே!

மதிக்கின்றார் என்னையவர்; மலர்போல் பொன்போல்
மாட்சிபெறப் போற்றுகின்றார்; நாளும் அன்பைப்
பதிக்கின்றார்! ஏழ்மைநிலை எனினும் உள்ளப்
பான்மையினால் வாழ்கின்றோம் என்றாள் அன்று!
கொதிக்கின்ற துள்ளமெல்லாம்! அன்பால் மூன்று
குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்! அவளைக் காலில்
மிதிக்கின்ற காட்சியினை அயலார் சொன்னார்!
மேற்கொண்டு செயலறியா துழல்கின் றாளே!

'இலக்கியங்கள் யாக்கின்றார்; தமிழ்சொல் கின்றார்;
எத்தனையோ மாணவர்க்குப் பயிற்று கின்றார்;
கலக்கமுறல் வேண்டாம்;எம் வறுமை போகும்;
காசுபணம் வரத்தொடங்கும்; அக்கால் என்னைத்
துலக்குமுறச் செய்திடுவார்' எனமற் றார்க்குத்
துணிவுரைத்தாள்; கனிவுரைத்தாள்; தொடர்ந்து வாழ்ந்தாள்!
நலக்குறைவே என்றாலும் மருந்தால் தீரும்;
நல்லவுளம் தாழ்ந்ததென்றால் அவளென் செய்வாள்?

காதலித்த ஒரு தவறோ? காலம் செய்த
கடுமைமிகு கோலமதோ? கணவன் நெஞ்சம்
பேதலித்த நிலையிதுவோ? என்ன செய்வாள்?
பெருந்துயரைச் சுமக்கின்றாள்! பெற்றோர் கண்டால்
நோதலுற்ற புண்ணெஞ்சம் பொன்னாய் மாற்றி
நொய்ந்துவரும் புன்னகையைப் பெய்தல் செய்வாள்!
ஓதலுற்ற அறிவு,கல்வி தொண்(டு) அன் பெல்லாம்
ஒடுங்கிவிட்ட பொய்வாழ்வு வாழ்கின் றாளே!

தமிழ்கற்ற பெரும்பிழையோ? தனித்து வாழ்ந்த
தவறவர்க்கு வந்ததுவோ? தாய்மை நெஞ்சின்
அமிழ்தூற்றை, பெண்மையன்பை விளங்கிக் கொள்ளா
அறியாமை சூழ்ந்ததுவோ? அன்பால் பெற்ற
குமிழ்நகையின் குழந்தைகளும் வெறுப்ப துண்டோ?
கூடியுள்ளார் காரறிவோ? கொடுமை நெஞ்சோ?
இமிழ்கடல்சூழ் தமிழ்நிலத்தின் இலக்கி யங்கள்
இயம்பாத அக, இழிவில் இயங்க லாமோ?

இல்லறத்தைக் கீழ்மைசெய்து வாழந்தார் உண்டோ?
ஏற்றவள்மேல் அழல்வீசித் தணிப்பார் உண்டோ?
வல்லதிறம் பெண்மையிடம் நிறுப்பார் உண்டோ?
வாய்மையுளம் கீழ்மையுற்றால் பேய்மை யன்றோ?
கொல்லவரும் ஆண்மையினால் பெண்மை உய்மோ?
குத்துகளும் அடிகளுந்தாம் வாழ்க்கை யாமோ?
சொல்லுதிர்க்கும் அனற்பேச்சால் உண்மை அன்பைச்
சுட்டெரிப்பார் மனந்திருந்தி வாழு வாரோ?

-1979

## 53 வீரனின் காதல்!

'அன்று பார்த்த விழிகளுக் குள்ளேயே
அடைபட் டிருந்(து), என் உயிர், உளம் ஆள்கிறீர்!
என்று பார்ப்ப(து) இனி', என, எனக்கு, நீ
எழுதியே யிருக்கின் றாய்,இளம் மங்கையே!
நின்று பார்த்த பெண்களுக் குள்ளேயே
நீதான் முழுதெனைக் கவர்ந்தவள் என்னினும்
வென்று முடித்துத் 'தமிழ்நிலம்' மீட்டபின்
வெற்றி முத்தத்தை வாங்கிட வருவனே!

'பார்த்துச் சென்றிபின் நெஞ்சமும் உயிரும்
பறந்து, உம் பின்னேயே வந்ததைப் பார்த்தீரா?
வேர்த்துக் கிடக்கிறேன்; என்று வரு வீர்', என
வினாவி இருக்கிறாய், என்னுயிர்த் தங்கமே!
ஈர்த்துக் கொண்டனை நீயும் என் உளத்தையும்!
இங்கு நான் மட்டுமே இருக்கின் றேன்,அடி!
ஆர்த்துக் கொண்டுளேன்! மொழி,இனம், நாட்டினை
அடைந்தபின் வருகிறேன்; அதுவரை பொறுத்திரு!

'செத்துக் கொண்டுளேன்; பிணமாகிப் போகு முன்
சிரித்த, உம் முகத்தினைக் காணவே துடிக்கிறேன்;
ஒத்துக் கொண்டு,நீர் உடனே வருகுவீர்!
உயிரைக் காத்திடு வீர்',என எழுதினாய்!
முத்தமிழ், இனம், நா(டு) உரிமை மூன்றையும்
முழுவதும் மீட்டிடப் போராடி வருகிறேன்!
மொத்தப் பணியும் முடிந்தால் மீளுவேன்;
முடிய விலையெனில் நீ,எனைத் தொடர்ந்து வா!

-1994

# இயற்கை

## 54 இயற்கையும் தமிழும்!

சோலையில் ஊதுங் குயிலிசையில் - தமிழ்ச்
சொற்களுண்டு தம்பி கேட்கிலையோ? - அதி
காலையில் பாடி யெழுப்பு கின்ற - கருங்
காகத்திடைத் தமிழ் ஓசையுண்டு.

கறவைப் 'பசு' விங்கே கத்துது பார்! - அதில்
கன்னித் தமிழ்ச் சொல் லொலிக்குது பார்! - நல்ல
கறவை யினங்கள் மரக்கிளையில் - குந்திப்
பாடுஞ் சொல் தமிழுக்குச் சொந்தந் தம்பி!

குழலுக்கு மிஞ்சிய குரலைக் கொண்டு - பச்சைக்
குழவி யொலித்திடுஞ் சொல்லென்ன சொல்?
குழலுடைப் பெண்டிர் 'கணவரே' என்று - தாம்
கொண்டாரைக் கூப்பிடும் சொல்லென்ன சொல்?

அன்புக்கு 'நார்' என்ற சொல்லெதைக் காட்டும்;
அன்புள்ளோர் தம்மைப் பிணைப்ப தல்லால்,
'கண்'ணென்ற பெயர்ச்சொல்லை நீட்டிப் பார் - தம்பி,
"காண்" என்ற வினைச்சொல் தெரிந்திலையோ?

முழமுடைக் கைகட்கு 'முழங்கைகள்' என்றும் - ஓர்
முழமுடைக் கால்கட்கு 'முழங்கால்கள்' என்றும்
எழுந்தன தமிழில், வேறெங்கே உண்டு? - இது
எங்கள் தமிழ்மொழி தம்பி, படி!

தொடுப்பதால் மாலைக்குத் 'தொடை' என்றுபேர்,
தொங்கினால் மாலையைத் 'தொங்கல்' என்பார்,
உடுப்பதால் ஆடைக்கு 'உடை'யென்று பேர்,
உண்பதால் சோற்றுக்கு 'உண' வென்று பேர்.

புல்லினைப் பறித்தற்குப் 'பிடுங்கல்' என்றும், மென்மைப்
பூவினை எடுத்தற்குக் 'கொய்தல்' என்றும்
சொல்லிலே செயல் கண்ட தமிழனைப் போல் - வேறு
சொற்களைக் கொண்டது எந்த மொழி?

‘சங்கம்’ வளர்த்த தமிழ் மொழி போல் - நின்று
சாகாமல் வாழ்வதும் எந்த மொழி?
பொங்கிட்ட ஆழிக்குப் பொன்னான ஏடுகள்
போகப் பெருமை கொண்ட தெந்த மொழி?

கனிதமிழ் நாட்டினர் என்றுரைக்கு - ,மக்கள்
காது கொடாமல் இருப்ப தென்னோ - இந்த
நனிதமிழ் நாட்டுக்குத் தீங் கென்று கண்டும் - நாம்
நட்ட கற்கள் போல் இருப்ப தென்னோ?

(ஓரிரு வடசொற்கள் களையப்படவில்லை)

–1947இல் எழுதி, 1952இல் வெளிவந்தது.

## 55 அருவி!

கடல் நீரை மேகம் உண்டு,
கருவுற்று, மென்பூந் தென்ற(ல்)
உடன் சேர்ந்தே உள்ளத் தன்பை
உலகினுக் கெடுத்துக் காட்டுங்
கடனென மழையை ஈன,
களிப்பினால் புனற் குழந்தை,
இடமதை விட்டு, வேறோர்
இடஞ்செலும் அழகின் ஆறு! 1

ஓடியும், குதித்தும், நீண்டும்
ஒடிந்துடல் வளைந்தும் பள்ளத்
தாடியும், இரைந்தும் சென்ற
ஆறு, பின் பள்ளத் தாக்கை
நாடி, மேல் நின்று கீழே
‘நறுக்’கென வீழ்தல் காணின்
கோடியாய் இன்பம் பொங்கிக்
கூத்திடும் அழகு நெஞ்சில்! 2

அருவிநீர், அழகின் பிள்ளை!
அணைந்துநீர் வீழும் இன்பத்
துருவினைக் கண்டால் உள்ளம்
உவந்திடும்! காதஞ் செல்லும்
பெருகொலி இன்பத் தெல்லை!
பெரும்புகைக் கூட்டம் போல
மருவிடுந் தென்றல் செய்யும்,
மஞ்சுகண் டுள்ளம் பொங்கும்! 3

வான்விடுங் கண்ணீர் தம்பி!
வறுமையுள் வாடுங் கூட்டம்
ஏன்எனக் கேட்கும் ஓசை!
இருந்துகேள்! அன்பின் ஊற்று,
தான்எனக் கூறு கின்ற
தண்புன லருவி யிந்த,
மானில மக்கட் காற்றும்
மாண்பினை யுற்றுக் கேட்பாய்! 4

ஒருபுறத் திருந்து சாரல்
உட்புகும் பறவைகள், மற்
றொருபுறஞ் சென்று பாறை
உயரமர்ந் திறகு தம்மை,
விரித்துடல் மீத டிக்க,
வியப்புமே லோங்கும்; துன்பம்
எரித்துடல் இளைத்தார்க் கெல்லாம்
இன்பமக் காட்சி என்பேன்! 5

மணமுழ வோசை! தென்றல்
மருவிடும் அருவிப் பெண்ணை!
தணல் வீசும் பரிதி வந்து
வானவில் மாலை சூட்டும்!
மணல் போலுஞ் சிறிய தூறல்!
மணப்பந்தர்! பறவைக் கூட்டம்,
மணக்குழு! விழுந்தெ ழுந்த
மீனினம் விருந்த வர்க்கே! 6

ஆலினுள் விழுது காற்றுக்
காடுதல் போலக் கொட்டும்
பால்புனல் தொலைவி னின்று
பார்ப்பதற் காடும்! நீண்ட
வாலுள குரங்கு தாவி
ஓடிடும்; நீரில் ஒற்றைக்
காலினில் நின்று நாரை
குதித் தெழும் மீனைக் கவ்வும்! 7

வானின்று சரிந்து வீழும்
மின்னல்போ லருவி! அந்தத்
தூநிறத் தருவி போடும்
பேரொலி இடிபோற் கேட்கும்!
மானிறப் பாறை தன்மேல்
'மரகதப்' பூச்சு அதன்மேல்
பூநிறங் கண்டு கண்டு
பூரிக்கும் இயற்கை யுள்ளம்! 8

தாமரைப் பரிதி தங்கத்
தழல்நிற 'மகரந்'தத்தை,
நாமெல்லாம் நுகரத் தூவி
நடந்தது! மஞ்சள்! பூச்சு,
தேமலர்ச் சோலை மீதும்,
தெள்ளிய அருவி மீதும்,
மாமலை மீதும், பட்டு
மறைந்து, பின் இருளால் மாயும்! 9

இரவுக்கு வரவு கூறி
எழுந்தனள் நிலவு மங்கை!
வரவுக்கு நன்றி கூறி
வாழ்த்திடும் அருவி! ஈண்டவ்
வருவியோ நீண்ட வால்மீன்!
அழகிய காட்சி! கண்டு,
பருகினேன்! பன்னாள் சென்றும்
பூரிக்கும் எனது நெஞ்சம்!

-1950

## 56 கடல்!

நிலமெனும் பெண்ணுக் கிந்த
நீள்கடல் நீல ஆடை!
இலமெனும் ஏழை யர்க்கே
இமிழ்கடல் கழனி! அங்கு
நிலமில்லை! விளைவோ உண்டு!
நித்தமும் வேளை தோறும்
கலமிசை மிதப்பார் வாழ்வைக்
கடல்நன்கு நடத்தி வைக்கும்!

துன்புற்றார் துன்பத் தோடு
தொடர்ந்திடும் அலையின் ஓலம்!
இன்புற்றார் இன்பத் தோடும்,
இயங்கிடும் அலையின் கூத்தே!
அன்புற்றார், கலைவல் லார்கள்
அகமகிழ்ந் துவக்கும் காட்சி!
முன்புற்றார் உள்ளத் துள்ளே
மூட்டுமோர் இனிமைப் பாய்ச்சல்!

நடுக்கடல் அமைதி கற்ற
நல்லறி வாளர் போலாம்!
துடுக்குளார் நுனிப்புல் மேய்ந்தார்,
தன்மையைக் கரைநீர் காட்டும்!
ஒடுக்குளம் கொண்டார் கையின்
உடைமையோ யார்க்கும் என்றும்
கொடுக்கலுக் கியலா தென்னும்
உண்மையை உவர்நீர் காட்டும்!

கடல்பெரு நீல வானம்!
கப்பல்கள் பறவைக் கூட்டம்!
அடல்நிற மறவர் போலும்
அலைத்திறம்! அத்திறத்தால்
உடல்குளிர் வெய்தும் நல்ல
உளத்திற்கோ மேன்மேல் இன்பம்!
இடருற்ற வாழ்வில் நாளும்
இளைத்தார்க்குக் கடல்காண் இன்பம்!

-1950

## 57 பூவும் புழுதியும்!

பூங்குயில், வண்ணப் புதுமலர், தும்பி,
பொழில், மலை, கூன்பிறை பரிதி,
ஓங்குயர் குன்றத் தொழுகுவெள் ளருவி,
ஓயா தாடலைக் கடலென்
றீங்கிவை பற்றி எழுதவா பாடல்
என்றனன்; என்மனை யாட்டி,
தாங்கிய வறுமைத் தணல்நீக் குதற்கே
தமிழ்மழை பொழிகவென் றாளே!

தாதிவாய்த் தூதும், தத்தைவாய்த் தூதும்,
தண்சுனை எகினத்தின் தூதும்,
ஓதிவாய் வருந்தும் ஒண்டொடி நெஞ்சில்
ஓங்குயர் வளர்ந்தநற் காதல்,
மோதுசெம் பாடல் மொழியவா என்றேன்;
மொய்விழி நகைத்தெனை நோக்கிச்
சாதிவாய்ப் பட்டுயிர் உடல்காய் வார்க்குச்
சந்தனத் தமிழ்தரு கென்றாள்!

வீழ்தெரு நகரம், விண்டொடு மனைகள்,
வியப்பினை யூட்டுநற் செயல்கள்,
ஏழ்வகைப் பண்ணும் எழுப்புநற் பாடல்,
இமிதுயர் சேராச் செல்வர்,
வாழ்வகைப் பாடல் வடிக்கவா என்றேன்
வாய்மேல் விரல்வைத் தென்னை,
பாழ்குடில், பழம்பாய், வெம்பசி, இவற்றைப்
பாருங்கள் கண்திறந் தென்றாள்!

கோவைச் செவ் வாய்கள், கொல்வேற் கண்கள்
குறுநகை, பற்பரல் என்ன,
பாவைக் கிருப்பன யாவுந் தேன்தமிழில்
பாடவா என்றதற் கன்னாள்,
நாவை வளைத்தலில் நல்லுடல் வளைத்தல்
நற்செயல் ஆகுமச் செயலால்,
தேவைகள் கிடைக்கும், தொல்லுல குய்யும்,
தாழ்வுயர் அகலுமென் றாளே!

-1951

## 58 பரிதியின் காதல்!

வையத்தின் மக்கள் நெஞ்சின்
இருளினைப் போக்கி என்றும்
ஒளி செய்க! என்றே உன்னை
இயற்கைத் தாய் அனுப்ப, நீயோ

செய்வது என்ன, சொல்வாய்
செவ்வொளிப் பிழம்பே! காலை
கடலினுள் குளித்து பொன்போற்
கந்தக உடை யணிந்த

பொய்கையின் கரை யோரத்தே
இரவெலாம் வாடி, உள்ளம்
புலந்தா ளோர் நங்கை! அந்தப்
பூ முகத் துள்ள நீரைக்

கையால் நீ துடைத்து ஊடல்
தீர்ப்பதும், இதழை மாந்தி
முகத்தினை நீவி முத்தம்
ஈவதும் அறிவேன் நன்கு!

அக்கொடி யிடையா ளை நான்
அறிகுவேன்; தாமரைதான்
அவள் பெயர் தெரியும், உந்தன்
ஆவலும் அறிவேன், ஆனால்

கொடியனை யாளைநீயோ
அறிந்திலை போலும்! உந்தன்
அணைப்பிலே பகலும், திங்கள்
அணைப்பிலே இரவும் போக்கும்

மிக்கொடி யாளைப் பற்றி
மிகுதி யா யுணர்வேன்! நீ சென்று
ஒன்றிணைத் திடும் போதங்கே
குழலிசை கேட்டி ருப்பாய்!

இக்காலம் மட்டும் அந்த
இசையினை அவள் பாட்டென்று
இருந்திட்டாய்! தேனின் வண்டும்
இதழ்ச் சுவைத் திசைக்கும் பாட்டே!

பொன்னிற முகத்தைக் காட்டிப்
பூரித்து நகைப்பதும் நான்
புரியாம லில்லை! உச்சிப்
பொழுதினில் குளத்தை அண்டி

கண்ணாடி ஊற்று நீரைக்
காண்பேன்! அப்போது நீர்க்குள்
கதிரொளிக் கையை விட்டே
அவளிடைக் கொடியை நீவ

கண்களில் சிரிப்பை மாய்த்து
நாணத் தோ டென்னைக் கண்டு
நகைப்பதை யறிவேன்! வாளின்
கதிரே யங் கென்ன செய்வாய்?

காலையி லிருந்து காதல்
களிநடம் புரிவதும், உன்றன்
கைகளில் அவள்மு கத்தைத்
தோய்ப்பதும், நகைப்ப தும், பின்

மாலையில் பிரியும் போது
மனம் நொந்து சாவதும், நீ
மலர்முகம் தன்னை நீவி
தேற்றுதல் செய்வதும் நான்

சோலைக்குச் சென்றால் அந்தப்
பொன் கொடி என் பால் எல்லாம்
சொல்வதும், இரவில்
வெண்மதி அவள்பாற் காதல்

வேலைகள் செய்வதும் நான்
விளங்கிக் கொள்ளாம லில்லை!
விரிகதிர் பரிதியே! உன்
வினையினைக் காண்கின் றேனே!

-1952 (?)

## 59 காற்றே வாழ்த்துகின்றேன்!

காற்றே! யான் நின்னுடலைக் காணுகிலேன்; ஆனாலும்
கவினுடலைத் தோய்க்கின் றாய் நீ!
ஊற்றே! நல் லின்பத்தின் உறைவிடமே! நீ எங்கே
உறைகின்றாய்! உறங்கு கின்றாய்?
போற்றார் யார் உன்னை? நற்
பொதுவுடைமை யொருபொருளே!
புறவுடலின் உள்ளுயிரே! உன்
ஆற்றலுக் கிணையுண்டோ? உலகு புரக் கின்றாய் உன்
அறத்தினுக் கிணையில்லை காண்!

மென்மையினுக் கொருபொருளாய்த்
தென்றலெனும் பெயர்பெற்று
மேலேறி வலுத்து நின்று,
வன்மையினுக் கொருபொருளாய், வளியாகிப் புயலாகி
வளருமுன் திறம் வியந்தேன்!
நன்மையினுக் காகுநீ நச்சாகி மக்கள் தமை
நலிவேற்றுக் குலைவு மேற்றே,
இன்மையினுக் குட்படுத்தி, இடும்பேற்க மகிழ்கின்றாய்;
இது முறைமை யாகாது காண்!

சேர்ந்துள்ள பணத்தேக்கம் சிதைத்துப்பல் லுயிர்கட்கும்
சேர்க்குநற் றிருத்தம் போல,
ஆர்ந்துள்ள முகிற்கூட்டம் அலைத்துப்பல் லிடங்கட்கும்
அளிப்பாய் நீ! வாழ்த்து கின்றேன்.
கூர்ந்துண்மை உணர்வார்க்குக்
காற்றே, நீ யுணர்த்துகின்ற
கருத்தினுக் களவு முண்டோ?
தேர்ந்தநூல் அறிவார்ப் போல்
உடல்கரந்து பயன்காட்டும்,
திறங்கண்டு வாழ்த்து கின்றேன்?

-1954

## 60 கனவு கலைந்தது!

இதுவரை நுகரா தின்மலர்க் காடு!
மதுக்கென இசைக்கும் மைநிற வண்டினம்!
புதுப்புனல் ஊற்றப் பொய்கையோர் மருங்கில்
பொதுமன் றொன்றோர் புறத்திருந் ததன்மேல்
அமர்ந்திருந் தேனென் அருகிலோர் மலர்க்கொடி
சுமந்த பூக்களாற் அருட்கை தாழ்த்தி
அடிக்கும் தென்றலுக் கப்படி யிப்படித்
துடிக்கும் போலென் உளத்தைத் தொட்டது!

கிள்ளும் பசியில் கிளர்ந்த கனவிது!
உள்ளும் புறமும் ஒருநொடிப் பொழுதில்
வெள்ளக் குளிர்மையும் வரிமலர் மணமும்
அள்ளிய மகிழ்வில் அசைவிற் றிருக்கும்
என்னிடம் வருதற் கெடுத்தடி வைப்பதார்?
அன்னம் போலடி வைத்தெனை அணுகுதல்
பேரிடி யாகப் பட்டதென் காதில்!
யாரவர்? கனவிற் குஇடர்தரு வார்யார்?
நுனிப்புல் போலெலாம் காலையிற் படிந்த
பனித்துளி சிதையா தடிவைத் தென்பால்
யாரது? வருவது? யாழ்நரம் பசைக்கும்
தென்றல் எழுப்புந் தெள்ளிய ஓசையும்
குன்றசைந் ததுபோற் காதிற் பட்டது!
நனைவெனும் உடுக்கை நெகிழ்ந்ததும் என்னைக்
கனவெனும் காற்று கையால் அணைத்தது!

சுற்றிலும் பச்சை சூழ்ந்துள புல்வெளி!
எற்றிசை நோக்கினும் எழில்வான் வெளியே!
வெள்ளிய முகில்மேல் வீரன் போலவே
அமர்ந்திருக் கின்றதை அறிகின் றேன்நான்!
யாரோ என்னைக் கடப்பதை உணர்கிறேன்!
யாரவர்? இன்கன வழிப்பார் யாரவர்?
மேலும் கனவில் மிதந்ததென் னுள்ளம்!
பாலொளி நிலவில் பாடுகின் றேன்யான்?

இனிய நல்லிசை! எழுந்தது! அதற்குள்
முனகல் வோசை மூட்டிய தாரவர்?

அழுவதார் ஓ ஓ.... அதுவென் பிள்ளை!
ஏனழு கின்றாள்! என்ன இழவிது?
மீண்டும் கனவில் மிதந்த தென் னுள்ளம்!
தாண்டிப் போவது யாரோ? நானோ
அடிக்குங் காற்றில் விளக்கொளி ஆடி
நடுங்குதல் போலவே நடுங்கு கின்றேனே!
இத்தனை காட்சிகட் கிடையில் நானொரு
பித்தனைப் போலப் பிதற்றுகின் றேனாம்!
வீட்டின் விளக்காய் வாழ்வை வந்தெனக்
கூட்டுகின்றவென் உண்மை மனைவி
உணர்த்தினள்! நானென்ன உயிரற் றவனா?
பசித்தது வயிறெனப் பகர்ந்தீ போல்! எனைப்
புசிக்க வருகென, அழைத்ததும் போனதென் னுடலே!

-1955 (?)

## 61 கடலே!

களிப் புற்றாய் போல் கடலே கடலே
ஒளிப் புனல் அலைக்கை ஓயா தோச்சி
சுழித்துச் சுழித்துக் கூத்திடு கின்றாய்!
கொழித்துக் குலங்கும் கவின்மிகு கடலே
என்று தொடங்கினை இத்திருக் கூத்தினை
இன்றும் என்றும் இமைப்பொழு தாகிலும்
நின்றிசை முழக்கா திருந்தனை சொல்லோ?
உயிர்சூழ் இவ்வுல குவகை கொள்ளினும்
பயிர்விளை வின்றிப் பஞ்சத் துழலினும்
நின்னுடை இசையும் நின்னுடை நடமும்
முன்னை போலவே முழங்கிடு மாறே!
யாது கண்டனை! என்மகிழ் வுற்றனை?
தீதுரை உலகிற் றே ரா துழலும்
எம்போ லாயின் ஏழைகள் தாமும்
உம்போ லுவந்துயிர் மகிழ்வதற் கொருவழி
காட்டுவை கடலே! காட்டுவை கடலே!
நீர்த்துளி யுண்டு நித்திலம் விளைக்கும்
சீர்த்திறன் பெற்றனை எனுந்திருக் கூத்தோ?
அளவிறந் துயர்வகை ஆக்குதி என்னும்
உளமகிழ் நடமோ உயிர்தரு மிசையோ?
ஒப்பிலா துணவிலும் ஓர்துளி கூட்டி
செப்புலாச் சுவைதரும் உப்புடைத் திறமோ
எத்திறன் பற்றிநீ ஏற்றம் பெறுகுதி?
அத்திறன் யாதென் அறைகுதி கடலே!

-1955 (?)

## 62 காவிரித் தாய்!

*பூவிரித்தாய்; வண்ணப்*
*பொழில்விரித்தாய்; தென்னைத்தேன்*
*மாவிரித்தாய்; வாழைப் பலாவிரித்தாய் - நாவரிக்கப்*
*பாவிரித்தேன் பண்டைப் புகழ்பாடும் வண்டினஞ்சூழ்*
*காவிரித்தாய் காவிரித்தாய் என்று* 1

*நீர்பெருக்கிப் பச்சை நிலம்பெருக்கி அச்சாகும்*
*ஏர்பெருக்கி நெல்லோ டுயிர்பெருக்கி - ஊர் பெருக்கிப்*
*பார்பெருக்கிப் பண்டைப் புலவரெலாம் பாப்பெருக்கப்*
*பேர்பெருக்கிக் கொண்டாய் பெரிது* 2

*கெண்டை புரளக் கிளர்த்தெழுந்த நெற்பயிரைக்*
*கொண்டை மலர்மூடிக் கொண்டிருக்கும் - பெண்டிரெலாம்*
*வாரிச் சுருட்டுகையில் "வாழ்வீர் தமிழரெ"ன்று*
*நீரிற் சுருட்டுவையோர் பாட்டு* 3

*நீர்க்குவளை சேர்ந்துவரும் நெற்பயிரோ டின்னொலிசெய்*
*தார்குவளைப் பெண்டிர் அகமகிழ - கார் குழுமிப்*
*பாடல்செய் தேத்துமுன்றன் பக்கலுள்ள மஞ்ஞையினம்*
*ஆடல்செய் தேத்துமுன் அன்பு* 4

*கன்னல் அளித்தும் கனியளித்தும் வான்தோயும்*
*தென்னை அளித்துந் தேன்கதலி - தன்னோடே*
*உன்னை அளித்தும் உயிரளித்தும் வந்தாய் நீ*
*என்னை அளியோ விது.* 5

*கிளிகொஞ்சும்; வெள்ளைக் கிடைநாரை துஞ்சும்;*
*அளிகெஞ்சும்; அம்மலர்த்தேன் சிந்தும் - இளிச்சேர்கண்*
*மந்தி மரம்பாயும்; மன்னுதமிழ்த் தொல்பெருமை*
*குந்திக் குயில்கூவுங் கோடு.* 6

*மேடுகளை நீக்கி மிகத்தாழ் நிலன்நோக்கி*
*ஓடுவதேன்? உன்றன் உளச்சிறப்பைப் - பாடுவன்கேள்!*
*மேலக் குடியென்போர் மேவாரோ? மேவுவாரோ*
*ஓலைக் குடிலோர் உனக்கு?* 7

காப்பதுபோற் காட்டிப்பின் கங்கையோ பல்லுயிரை
மாய்ப்பதுபோ லல்லாமல் மக்களினம் - பூப்பதிலுன்
வெள்ளப் பெருக்கை விரிக்கின்றாய்; உன்பெருமை
உள்ளப் பெருக்கிற்கோர் ஊற்று. 8

ஊர்வளமை காட்டும் உயர் மதுரை; நாகரிகச்
சீர்வளமை காட்டும் செறிநூல்கள் - நேரில்லாப்
போர்வலிமை காட்டும் பொருதோள்கள்; இந்நாட்டின்
நீர்வளமை காட்டுவைநீ நின்று. 9

வான்வறக்கு மென்றாலும் வண்மையிலே மேன்மேலுந்
தான்சுரக்குந் தண்டமிழ்த்தாய்க்
காவிரியே - தேன்சுரக்கும்
செந்தமிழின் நன்னாட்டுச் சீரே; செழிக்கவைக்க
வந்தமர்ந்த வேலையே வாழ்த்து. 10

-1956

## 63 உள்ளக் கூத்து!

மெல்லியந் தென்றல்வந் தோட்டுகின்ற மென்முகிலின்
மேலேறிக் குந்தி, நீலம்
மேவுகிற வானத்து வெளியெல்லாம் சுற்றியும்
மேலைக் கடல் குளித்தும்,
துல்லியம் பூவிதழ்க் ளூட்புறத் தூறுகின்ற
தேனினைச் சுவைக்க வெண்ணித்
தும்பிக்குத் தம்பியாய் ஓலைச் சிறகாட்டித்
தொலைவெலாஞ் சென்று மகிழ்ந்தும்,
கொல்லியஞ் சாரலில் பலவின் கனியருந்திக்
குற்றால நிர ருந்தி,
குமரி மணலி லுளம் மகிழமகிழ உடல்
குப்புற வீழ்ந்து புரண்டும்,
அல்லியங் காதல னாமழகு முழுநிலவை
அண்டி, பல பாடல் பெற்றும்,
அன்றன்றை என்னுள்ளம் ஆட்டி நடத்துவிக்கும்
அருங் கூத்தை என்ன சொல்வேன்?

நீரை மடக்கியொரு பாயாய்ச் சுருட்டுகின்ற
நீலக் கடலின் அலையின்,
நடுவிற் புகுந்து சுழன் றாடி மகிழ்ந்துபல
நாட்டியங் காட்டி மகிழ்ந்தும்,
பாரை ஒளிக்கடலாய்ப் பண்ணி யுருவாக்கும்
பரிதியின் சூட்டிற் காய்ந்தும்,
பனிமைக் குளிர்கடலி னடியில் மூழ்கிமுத்துப்
பரலினைக் கண்டு மகிழ்ந்தும்,
ஏரை வளைத்துடலை எருதாக்கி உயிர்புரக்கும்,
ஏழையோ டுவந்து பேசி,
இன்னாத மக்களின் நெஞ்சிற் குடியேறி
இகழ்ச்சிபல கூறி இழித்தும்,
ஊரைத் தமதாக்கி உழைப்பைப் பிறர்க்காக்கும்
உலுத்தரை இடித்தி டித்தும்,
ஓயாம லென்னுளம் என்றென்றும் ஆட்டுவிக்கும்
உயர்கூத்தை என்ன சொல்வேன்?

தூங்குஞ் சிறுகுஞ்சைத் தாவிப் பறந்துவந்து
துளிவாயில் உணவை ஊட்டித்
தொலைவிற் காத்திருக்கும் சிட்டோ டுடலொட்டித்
துய்க்குநல் லின்பங் கண்டும்,
பூங்கோ துணவுண்டு, பூந்தமிழின் பாட்டிசைத்துப்
பழகுகருங் குயிலி னோடு,
பழகிப் பெருமையல் கொண்டபின், மயிலுக்குப்
பாடியதன் ஆடல் கண்டும்,
ஏங்கிக் கணவரைநின் றெதிர்நோக்கு மங்கையர்க்
கினியசொற் கூறித் தேற்ற,
எடுத்துக் கொடுத்திட்ட இன்கனிகள் பரிசேற்றே
என்வரவு காத்தி ருக்கும்,
தூங்கா மனையொட்டி உளமகிழ அருகமர்ந்து,
தொலைசென்ற பாடல் பாடித்,
தொல்லையும், ஏழ்மையும் மறக்கயெமை ஆட்டுவிக்கும்
தனிக்கூத்தை என்ன சொல்வேன்?

-1959

## 64 நிலவும் நானும் !

வெள்ளி நிலா வொளியில் - குளிர்
வேளையிலே மலர்ச் சோலையிலே - குளத்
தல்லி தரும் எழிலை - அள்ளி
அள்ளிப் பருகிய வாறிருந்தேன் - அந்த
வெள்ளி நிலா வொளியில்!

வானத்து மின்னு டுக்கள் - என்னை
‘வா’வென ‘வா’வெனக் கூவினவே - கெண்டை
மீனத்துச் சாயலெல்லாம் - அவை
மீதிருக்க நெஞ்சுத் தான்கொடுத்தேன் - அந்த
வெள்ளி நிலா வொளியில்!

கோல நிலவெழிலைக் - கண்டு
கொண்டன வென்னிரு கண்களுமே - இந்த
ஞாலமெலா மெனைப்போல் - காண
நான் உவப்பேன்; இன்பப் பா தொடுப்பேன் - அந்த
வெள்ளி நிலா வொளியில்!

திங்களை நான் மணந்தேன் - அவள்
தீண்டித் தழுவினாள் தண்ணொளியால் - காதல்
எங்களைப் பின்னிடவே - உடல்
இன்பங் கண்டேன்; அதன் எல்லை கண்டேன் - அந்த
வெள்ளி நிலா வொளியில்!

என்னை நிலா முகத்தாள் - அன்பு
எல்லையிலே முகந் தன்னைத் தொட்டே - பசும்
வெண்ணை நிகர்த்த இதழ் - தன்னை
வைத்தெடுத் தாளென் னுளம்பறித்தாள் - அந்த
வெள்ளி நிலா வொளியில்!

கன்னத்திலும் இரு கண்களிலும் - இரு
கைகளிலும் உடல் மீதினிலும் - குளிர்ப்
புன்னகையோடி தழை - வைத்துப்
பூரித்தனள்; எனை வாரித் தழுவினள்
வெள்ளி நிலா வொளியில்!

வாரியெனை யணைத்தே - முத்தம்
வைத்தனள் என்னிதழ் மீதினிலே - அன்பு
ஊறிச் சுரந்ததுவே - என்
உள்ளத்தினை அன்று கொள்ளை தந்தேன் - எழில்
வெள்ளி நிலா வொளியில்!

-1960 (?)

## 65 கலிவிருத்தம் !

1. வேய்தலை நீடிய வெள்ளி விளங்கலின்
ஆய்தல் னொண்சுட ராழியி னுன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னர்முன்
நீதலை சென்றுவரை நீர்கடை காப்போம்!

2. தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளித்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமும்
தாம்பகுத் துளசில துவள மாடமே!

........................................................................

........................................................................

(முடிவுறாப் பாடல்)

-1960 (?)

## 66 பொறுமை நிறை நிலமே!

வானப் பறவைகளே! - எழில்
வண்ண விளக்குகளே! - உயர்
மானம் பொதிந்த நல்
வாழ்க்கையினை எங்கள்
மாந்தர்க் குரைப்பீரோ?

காட்டு விலங்குகளே! - வன்மை
காழ்த்த மறவர்களே - இந்த
நாட்டினில் வாழ்கின்ற
மாந்தர்க்கும் ஓரிடம்
நல்கி உதவீரோ?

பட்டுடற் பூச்சிகளே - காற்றில்
பறக்கும் மலரிதழ்காள்! - மனங்
கெட்டுடல் நாறி,
அலைகின்ற மாந்தரின்
கேட்டை விலக்குவீரோ?

தாமரைப் பூக்குளமே! - ஒளி
தாவும் எழில் வளமே! - களி,
காமம், பொறாமை,
பகைகொள் முகங்களைக்
கமழச் செய்வாயோ?

தேனுண்ணும் வண்டினமே - சுவை
தேக்கும்பாட் டாளிகளே! - எங்கள்
ஊனும் உயிருமாய்
வாழும் சோம்பேறிகள்
உழைக்கச் சொல்வீரோ?

நீந்தும்நல் மீனினங்காள்! - கடல்
நீரின்நிலா, உடுக்காள்! - எங்கள்
மாந்தருள் வாழ்கின்ற
தீய மனங்களை
வந்து விழுங்கீரோ?

பல்லி, தேள், பாம்புகளே! - தீமை
பாய்ச்சும் உயிரினங்காள்! - உங்கள்
இல்லங்கள் தப்பி - எம்
இடைவந்து வாழ் வாரை
என்றைக்கு மீட்பீரோ?

பொறுமை நிறைநிலமே! - வான்
போர்த்த உருள் உலகே - நெஞ்சில்
வெறுமையும் சூதும்
வெறுப்பும் மிகுந்தாரை
வெடித்து விழுங்காயோ?

-1970

## 67 நீ, துகள்!

எண்ணருங் கோடி யாண்டாய்
இருக்கின்றாய் துகளே!நீ - முன்
விண்ணொடும் விண்ணாய்த் தோய்ந்து!
விசும்பெலாம் உலாவந் தாயோ?
நுண்ணரும் அணுவாய் விண்மீன்
கூட்டத்தில் நுழைந்து தாவித்
தண்ணருந் துளியாய் மாறித்
தரைவந்தே இறங்கி னாயோ?

தண்ணருந் துளியாய் நீதான்
தரைவந்த பின்னை, ஆங்கோர்
திண்ணருங் கல்லுட் பாய்ந்து
தேய்ந்துரு மாறி மாறி
விண்ணடுங் கிடியி னோடும்
வெள்ளத்தின் சுழற்சி யோடும்
மண்ணொடும் பெரும்போ ராட்டம்
மலைந்து,நுண் மணலா னாயோ?

இருண்டநின் கதைதான் என்ன?
எத்தனை ஊழிக் காலம்
உருண்டனை யோ? வன் பாறை
ஒன்றினோ டொன்றாய் மோதிப்
புரண்டனை யோ? நுண் தூளாய்ப்
போயினை யோ? மண் ணோடு
திரண்டொரு குன்றாய் மீண்டுந்
திணிந்துரு மாறி னாயோ!

மாறுவாய் பின்னும்! ஈண்டோர்
மலரினும் ஒளிர்வாய்; நீராய்
ஊறுவாய்; உடலுக் குள்ளும்
உலவுவாய்; தீயுட் பாய்ந்து
வீறுவாய்; காற்றி னூடாய்
விண்ணுக்கு மீண்டுந் தாவி
ஏறுவாய்; இறங்கு வாய்; நீ
இறப்பிலா திருக்கின் றாயே!

-1971

## 68 குழந்தை....!

கன்னங் கரிய முடி!
பசும்பொன் நெற்றி!
கருக்கொள் இளம் புருவம்!
கிளிஞ்சிற் காது!
சின்னஞ் சிறிய விழி!
சிமிழின் மூக்கு!
சிரிப்பைக் கிழிக்கும் இதழ்!
சிறு பொக்கை வாய்!

பொன்னின் பொலிந்த முகம்!
பளிங்குக் கன்னம்!
புறாவின் மணிக்கழுத்து!
குருத்துத் தோள்கள்!
மின்னல் தெறித்த ஒளி!
கரைத்த சாந்தில்
வெண்ணெய் பிசைந்த உடல்!
குளிர்ந்த மேனி!

செக்கச் சிவந்த நிறம்!
செம்பொன் கைகள்!
செவ்வொளி மொக்குவிரல்!
உமி உகிர்கள்!
தக்குத்தை தாளக்கால்!
தளிர்செம் பாதம்!
தாமரைப்பூங் குளிர்மை மணம்
உடலம் எங்கும்!

பொக்கை வாய்ப் பூமணத்தை
மோந்து மோந்து,
பூச்செண்டு மேனியின்மேல்
முகத்தால் நீந்திச்
சொக்கும் உளம்! சொக்கும் உயிர்!
சுழலும் எண்ணம்!
சொல்லழியும்; நினைவழியும்!
சொந்தம் மாயும்!

-1972

## 69 ஆடிய வன்புயல்!

வானங் கருத்தது; வையம் இருண்டது;
வாரி யெனுந்தட நீர்அலை கொண்டது!
தானென் செருக்குடன் தண்கடல் சீய்த்தொரு
தாண்டவச் சூறைவான் தாவி யெழுந்தது!
கானம் படுவன் களிற்றினம் யாவுமே
காழ்நடை ஆர்ப்பொடு காய்த்திவண் வந்ததாய்க்
கூனம் படுநெடுங் குன்றுங் குலுங்கிடக்
கொல்புயல் பேய்ப்படை கொண்டெதிர் ஆர்த்ததே! 1

ஆர்த்தது வான்புயல்! ஆர்த்தது நீள்கடல்!
ஆவெனும் ஓலத் தெழுந்தது பேரலை!
போர்த்தது நீர்த்திரை! பொங்கிச் சுழன்றது!
போய்வரு மீன்பிடி புன்மைப் படகுகள்
நீர்த்துமி தாண்டவத் துட்பொடி யாயின!
நீண்ட நெடுங்கரை நின்ற மரக்கலஞ்
சூர்த்த பெரும்புயற் சூறைச் சுழியிடைச்
சுக்குநூ றாகிச் சுருண்டன நீருளே! 2

கண்ணை யளாவிப் பறித்தொளி மின்னிடக்
காதை யளாவிக் கிழித்திடி மேல்விழ
விண்ணை யளாவித் திமிர்ந்தெழு வான்புயல்
வேகம் அளாவிச் சுழன்றெதிர் வீசிட
எண்ணை யளாவிய தென்னை,வா ழைக்குலம்
ஏந்துபூம் பிஞ்சுகா யோடெழு மாவினம்
மண்ணை யளாவிட மாமலை போலெழு
மந்திர ஆழிமுன் மக்களென் செய்வரோ? 3

பாய்புனல் காய்கணி பூமரம் பாவிட
பாற்கதிர் சாய்வயல் பாறுமண் மேடிட
வேய்குடில் நூறுநா றாயிரம் நூறிட
வீறிடும் செம்புனல் வீழ்கரை மீறிட
காய்வயி றோடுழல் ஏழையர் கையறக்
காலப் பெரும்புன லோடு கலந்து,கால்
வாய்வழி யோடி வயல்வெளி மாறிய
வன்பிணக் காட்டிடை ஆடிய வன்புயல்! 4
ஆடிய வன்புயற் கந்தமிழ் நாடுமிங்

*காந்திர முங்கள மாகி அதிர்ந்தன!*
*வாடிய மக்களுக் காறுதல் வாய்மொழி*
*வாழ்க்கை யுதவிகள் பற்பல வாய்க்கினும்*
*நாடிந ரம்புந டுக்கந் தவிர்க்குமோ?*
*நற்றுணை மாண்ட குழந்தையர் நங்கையர்*
*நீடிய வெந்துயர் நீங்கிடக் கூடுமோ?*
*நீண்ட நெடுங்கட லேவிடை சொல்கவே!*

**-1977**

# இறைமை

## 70 உலகத்தின் கடைசிக் கொள்கை !

மக்களினம் இவ்வுலகிற் பிறந்தகாலை
மானமற்று, மொழியற்றே, உள்ளம்அற்றுத்
திக்காலுக் கோரிருவ ராகவாழ்ந்தார்!
தெளிந்தவோ ரெண்ணமிலா மக்கள்! அன்போ
அக்காலை யிருந்ததில்லை! அறிவும் இல்லை!
ஆனாலும் ஆண்டுபல செல்லச் செல்ல
தக்காத நிலைநீங்கி மக்கள் கூட்டம்
தக்கவொரு நிலையடைந்த வகையைக் காண்போம்! 1

தண்ணீரின் பயன்கண்டார்; தீயைக் கண்டார்!
தன்னுணர்வு வந்ததங்கு! வாழு தற்கு
மண்ணினது பெரும்பயனைக் கண்டார்; வாழ்ந்த
மக்கட்குள் ஒருதலைவன் முளைத்தான்; நல்ல
எண்ணங்கள் வளர்ந்தனபின்! மொழியைக் கண்டார்!
ஏடுகளைத் தாம்வரைந்தார்! அறிவைக் கண்டார்!
பண்ணிவந்த தொழில் வகையால் மக்க ளுக்குள்
பல்பிரிவு பெருகிற்று! குமுகம் கண்டார்! 2

கூட்டங்கள் குழுவாக, குழுக்கள் சேர்ந்து
கோவென்றும் இறையென்றும் அரசன்என்றும்
கூட்டத்துள் ஒராளை யாக்கி வைத்தார்
கோவாழும் இல்தன்னைக் 'கோயில்' என்றார்.
நாட்டினது நலமேதன் நலமா யென்னும்
நல்லெண்ணம் குறைந்துவர, நாட்டு மக்கள்
வாட்டமுடன் வாழலுற்றார்; சில்லோர் சேர்ந்து
வகைசெய்ய முன்னின்று அறத்தைச் சொன்னார்! 3

அறஞ்சொல்லி வந்தவர்கள் குழுவில் சில்லோர்
அரசைக்கைப் பற்றிப்பல் இன்னல் செய்து,
திறஞ்சொல்லி மக்கட்குள் ளுயர்வு தாழ்வும்
தீராத சாதிகளும் ஆக்கி வைத்துப்
புறஞ்சொல்லிப் பொய்சொல்லி, மக்கள் வாழ்வில்
புரைதன்னை யுண்டாக்கி விட்டார்! வாழும்
அறஞ்சொல்லும் நூலிலெல்லாம் சமயச் சார்பை
ஆக்கிவைத்தார்; கடவுளையுண் டாக்கி வைத்தார். 4

அஞ்சுகின்ற பொருளையெல்லாம் கடவுள் என்றே
அறிவற்றோர் கூறியுமப் பொருளைக் கண்டும்
கெஞ்சிதம்மைக் காப்பாற்ற வேண்டும் மென்றும்
கேட்பதுபோல் ‘மந்திரங்கள்’ எழுதி வைத்தார்
நெஞ்சழுத்தம் தன்னைப் பேய் அறைந்த தென்று
நினைத்திட்டார்! மற்றுமுள எத்தர் தங்கள்
வஞ்சத்தால் மற்றவரை ஏய்ப்பால் சாய்க்கும்
வகை செய்தார்; தாம்வாழ வழிகொண் டாரே! 5

இக்காலை அறிவியிலின் விரைவால் மக்கள்
ஏற்றமுறு கின்றாரே! கல்லா ரெல்லாம்
அக்காலை யிருந்தவர்போ லில்லர்! கற்போர்
அதிகரித்துக் கொண்டுவரு கின்றா ரன்றோ?
தக்காத கொள்கையெல்லாம் மறைந்து போக,
தந்நலத்தால் வாழ்வோர்கள் குறைந்து போகப்
புக்காத புதுமையெலாம் வளர மக்கள்
போகாத இடமெல்லாம் போகா நிற்பர்! 6

உழைக்காம லுண்போர்கள் குறைந்தார்; வாழும்
உலுத்தர்களும் அலுத்துவிட்டார்; மதங்கள் கூறும்
மழைக்காக ஒருகடவுள், மக்கள் தம்மை
மாளவைக்க வொருகடவுள், அவரைக் காத்துப்
பிழைக்கவைக்க வொருகடவுள், பெண்டிற்கெல்லாம்
பிள்ளைதர வொருகடவுள், கல்விக்கொன்று
உழைக்காது செல்வந்தர வொன்றென் றெண்ணும்
உலகத்துக் கடவுளெலாம் விரைவில் மாளும்! 7

வெய்யில் மழை பாராமல் உழைக்கும் மக்கள்
வெயர்வை தனில் விளைகின்ற பொருளை யெல்லாம்
வெய்யில் மழை பாராது நிழலில் வாழ்வோர்
விழுங்குவது மாய்ந்துவிடும்! இன்னுஞ் சொன்னால்
மெய்யதனை வருத்தியதன் உழைப்பால் உண்ணும்
மெய்க் கொள்கை பரவிவிடும் நாட்டில்; மக்கள்
பொய்சொல்லிப் பிழைத்தற்கு முடியா வாறு
புத்துணர்வும் அடங்கிவிடும் எதிர்கா லத்தில்! 8

எல்லாரும் உழைப்பார்கள்! ஏற்றத் தாழ்வும்
இல்லாமற் போகும்! மதம் இருக்கா தென்பேன்!
கல்லாத நிலையொழியும்! கடவுள் மாயும்!
காணியெலா மோராட்சி நிலவும்! வாழும்
பொல்லார்கள் மாண்டொழிவர்! பொய்செத்துப் போகும்!
புரட்டெல்லா மிருக்காதே! உயர்வு தாழ்வை
எல்லாரும் சேர்ந்தொழிப்பார்! அறிவு மிக்கார்
எல்லாரும் சேர்ந்தாளக் காண்போம் பாரீர்! 9

-1952

## 71 உணர்வுக் கனல் !

ஆற்றாத பேருணர்வோ, ஆழ்ந்தறியா நற்றிறமே
அயரா வேட்கை,
ஊற்றாகப் பெருக்கெடுக்கு
மொருநிலையோ, கூர்நினைவோ
உணர்வின் வெப்பம்,
காற்றாகப் புகுந்துடலைக் காய்ச்சுகின்ற கொடுநிலையோ
கரைகாண் நெஞ்சோ,
கூற்றாக எனையறுத்துக் கூறுகூ றாய்ச் சிதைக்கக்
குலைகின் றேனே!

நீந்தாத நினைவென்னும் நெடுங்கடலோ? நெஞ்சுணர்வில்
நிலையாய் நின்று
மாந்தாத பெருமகிழ்வோ? மறக்காத பேரிடரோ?
மனத்தால் அன்பை
ஏந்தாத கொடுஞ்செயலோ? இறங்காத பெருந்துயரோ?
என்றன் நெஞ்சைக்
காந்தாத பொழுதிலதாய்க் கனலென்னும் வல்லுணர்வில்
காய்கின் றேனே.

-1954

## 72 ஆடுவித்தாய்!

என்னை இறையென் றியம்பிடச் செய்துளத்
தேறிநின்றே
உன்னைக் குடிவைத்துக் கொண்டுகூத் தாடுவை
உள்ளுயிரைத்
தின்னும் உணர்வை எனக்களித் தாய்மொழி
தேக்கிவைத்தே
பன்னும் இசைத்தமிழ்ப் பாடலி னாலுனைப்
பாடுதற்கே!

பாட்டினைப் பற்பல கோடி யிசைத்துப்
பராவினர்க்கும்
கூட்டினை வாட்டியுள் ஆவி யுனக்குக்
கொடுத்தவர்க்கும்
காட்டினை யல்லையுன் காட்சியைக் கண்டு
களித்ததில்லர்;
ஆட்டினை யேவுணர் வாலுயி ரையுளத்
தாட்டுவித்தே!

-1955

## 73 செம்பொருள் விளக்கம் !

அறம் எனச் சொல்லுவ தென்ன வென்றால் - நல்ல
அருள் எனப் படுவதின் வேர்! - பெரும்
மறம் எனச் சொல்லுவ தென்ன வென்றால் - பிறர்
மன்னிக்கப் படுவதின் பேர்!

திறம் எனக் கூறுவ தென்ன வென்றால் - நெறி
தேர்ந்து தெளிந்த செயல்! - நல்
உரம் எனப் புகலுவ தென்ன வென்றால் - மன
உறுதி குன்றாமற் சொலல்!

அன்பெனப் பேசுவ தென்ன வென்றால் - இரண்
டாக்கமும் ஒன்றெனும் சொல்! - நல்ல
தென் பெனச் செப்புவ தென்ன வென்றால் - பிறர்
தீமை நொறுக்கிடும், கல்!

பணி வெனப் பகருதல் என்ன வென்றால் - நல்ல
பண்பெனும் மாண்பின் தலை! - உளத்
துணி வெனத் திகழுத லென்ன வென்றால் - பெரும்
நன்மைக்குக் கூறும் விலை!

பெண்ணெனக் கழறுவ தென்ன வென்றால் - அறப்
பண்பெனப் படுதற் கிடம்! - பெருந்
திண் ணெனத் திகழுவ தென்ன வென்றால் - அது
துலங்குதற் கேற்ற விடம்!

ஆண் என அறைந்திடப் படுவதெல்லாம் - பெரும்
ஆக்கத்திற் கிட்ட பெயர் - அதன்
பூண் எனப் போற்றுதல் எஃதை என்றால் - அன்பு
பூணும் தாய்மைக் குலத்தை!

புகழ் எனப் போற்றுத லென்ன வென்றால் - அறம்
பெய்த நறுஞ் செயலை! - பெரும்
இகழ் எனத் தூற்றுவ தெஃதை என்றால் - தீது
இட்ட கொடுங் குலத்தை!

-1960 (?)

## 75 இறைப்பத்து!

ஊனுயிரை உந்துவதும் உள்ளத்தே பேசுவதும்
வான்வளிதீ நீர்நிலமாய் வாய்ந்ததுவும் - மேன்மேற்
புதிராய் அறிவாய்ப் பொருள்களுமாய் நிற்ப
தெதுவோ அதுவே இறை 1

எண்ணங் கொளுத்துவதும் எண்ணத் துலங்குவதும்
பண்ண முனைப்பதுவும் பல்லுயிருந் தோற்றப்
புதுவெறியா லாண்பெண்ணைப் புல்லுவித்தும் நிற்ப
தெதுவோ அதுவே இறை. 2

முண்டும் பசித்தீயை மூட்டுவதும் மொய்த்தவுணா
உண்டு செரிப்பித்தும் உள்ளிருந்து - பிண்டப்
பொதியுடலை ஒய்வுறவே பொன்றுவித்தும் நிற்ப
தெதுவோ அதுவே இறை. 3

பல்லுயிரை அன்பாற் படுப்பித்தும் பல்லுலகை
வல்லிழுப்பாற் கட்டி வயங்குவித்தும் - மெல்ல
முதிரும் உயிர்க்கு முடிவாயும் நிற்ப
தெதுவோ அதுவே இறை. 4

எண்ணற்ற பல்லுயிர்க்கும் ஏற்ற உருக்கொடுத்தும்
வண்ணஞ் சுவைபண்பு வாய்ப்பித்தும் - உண்ண
உதவுபொருள் பல்கோடி ஊன்றுவித்தும் நிற்ப
தெதுவோ அதுவே இறை 5

நெறிமுறைக்குத் தப்பாமல் நேர்ந்ததுவும் வல்லார்
அறிவியற்கும் ஆன்றறிவாய் ஆழந்ததுவும் - ஆழ்ந்தார்
இதுவோ அதுவோ எனவிழைவார்க் கென்றும்
எதுவோ அதுவே இறை. 6

ஒன்றினுள் ஒன்றாக உள்ளடங்கித் தோன்றுவதும்
துன்றும் அணுவாய்த் துலங்குவதும் - தொன்று
முதுபொருளாய் வீங்கி முகிழ்ப்பதுமாய் நிற்ப
தெதுவோ அதுவே இறை, 7

செங்குருதி வெண்பாலாய்ச் செய்வதுவும் வெண்பாலைச்
செங்குருதி யாய்ப்பின் றிரிப்பதுவும் - பூவுள்
மதுமணத்தைக் கூட்டி மயக்குவித்தும் நிற்ப
தெதுவோ அதுவே இறை. 8

அறியார்க் கறியாதாய் ஆழ்ந்தார்க் கறிவாய்ச்
செறிவாய்ப் பொருளெல்லாஞ் சேர்ந்தொளிர்ந்து - நின்றே
எதுபோழ்தோ வென்றார்க் கிதுபோழ்தே தோற்றும்
எதுவோ அதுவே இறை. 9

வித்தாய்க் கருவாய் வெளிர் குடம்பை யாய்த்தோன்றிப்
புத்தின் முளைமகவாய்க் குஞ்சாய்ப் - புறந்தந்து
வெஃகின் பெருவிளை வாயி யஃகுமொன்
றெஃதோ அதுவே இறை. 10

**-1962!**

## 75 உணர்வுப் பத்து!

*தாயுந் தாதையுஞ் சுற்றமும் மகிழத் தாம்பிறந்து*
*வாயுங் கையும் வயிறும் புடைக்க வலிந்துண்டு*
*நோயும் நொடியுந் தேடுவர் உய்யார்; நொடிந்திறப்பின்*
*நாயும் நரியும் அன்றிப் பிறரார் நண்ணுவரே?* 1

*உள்ளும் நெஞ்சும் உயிரும் இருக்க உலகினர்பால்*
*கொள்ளும் அன்புந் தொண்டும் இருக்கக் கூசாமல்*
*கள்ளுங் கலவியும் உயர்வென் றெண்ணிக் களிப்பாரைப்*
*புள்ளும் புழுவும் அன்றிப் பிறரார் போற்றுவரே?* 2

*ஒழுகும் முறைமை ஒழுகார் உயர்ந்தோர் உரைமதியார்*
*அழுகும் பொருட்கும் உடற்குந் தணியா தங்காந்து*
*முழுகும் தொழுகையும் செய்வார்; உள்ள முனைப்பிலரைக்*
*கழுகுங் காகமும் அன்றிப் பிறரார் களிப்பாரே?* 3

*கண்டது காட்சி கொண்டது கோலம் கவின்பழுத்த*
*பெண்டரு இன்பே பெரிதா மென்றே பிழைசெய்வார்;*
*தொண்டும் புரியா துளமும் பேணா திருப்பாரை*
*உண்டது பேசிப்புகழும்; பிறரார் உவப்பாரே!* 4

*தேறார்; உள்ளந் தெளியார்; வாழ்க்கைத் திறனறிந்து*
*மாறார்; அன்புஞ் செல்வமுந் தொண்டும் பிறர்க்களியார்;*
*ஏறார் வாழ்வில்; இத்தகை யோரைப் பித்தல்லால்*
*வேறார் போற்றிப் புகழ்வார்; நினைவார்; விழைவாரே!* 5

*ஈன்றிய வர்க்கும் இனத்தார்க் கும்நிலை இழிந்தார்க்குந்*
*தோன்றிய குடிக்கும் மொழிக்கும் நாட்டுத் தொண்டிற்குஞ்*
*சான்றவர் துயர்க்குந் துணையா யிருமின்; மனம் வைமின்;*
*ஊன்றிய வாழ்விற் கொருபயன் காண்மின் உலகீரே!* 6

*விண்ணிற் பாய்வீர்! வேறுபல காள்வீர்! வியனுறவே,*
*நுண்ணிய அறிவாற் பற்பல ஆய்வீர்! உளம்பேண*
*எண்ணிட மாட்டீர்! உயிர்முனைப் பிழந்தீர்! இகவாமல்*
*மண்ணிற் பிறந்த மக்களைப் பேண மறவீரே!* 7

நோக்குங் கண்ணுங் கேட்குஞ் செவியும் நுண்ணணுவாய்த்
தேக்கும் அறிவும் உள்ளத் திறனுந் தெளிந்துணராப்
போக்கும் நிலையும் உய்வும் தெய்வும் பொலிந்திருக்க
நாக்குங் குடலும் மட்டும் பேணி நலிவீரே! 8

நெஞ்சங் கரையார்; நினைவுந் தெளியார்; நிகழ்வறியார்;
அஞ்சும் அஞ்சும் அஞ்சு ளொடுங்கி அமைந்தவுடல்,
எஞ்சும் போதில் எஞ்சுவ விஞ்சுவ அறியாமல்
பஞ்சும் பொதியும் போலநினைவார், பயனிலரே! 9

ஏவும் நெஞ்சும் இணையும் பொறியும் எதிர்ப்புலனும்
வாவும் அறிவும், அவற்றின் முதிர்வால் வல்லுடலுள்
கூவுங் குரலும் கேளார், உணரார், புறந்திரிந்த
மாவும் புள்ளும் என்றே மதிக்கப் பெறுவாரே! 10

**-1962**

## 76 ஏன் படைத்தாய்!

இறைவநின் அருள்செவி கேட்குமா றிதனை
ஈண்டெடுத் தியம்புவேன்; இதனுள்
மறைவிலை; அறிகிலா மயலிலை; நின்பால்
மகனெனும் பேருரி மையினால்
குறைவறும் உன்றன் குளிர்செயும் அன்பால்
கூறுவேன்; அஞ்சுதல் தவிர்ந்தேன்;
பொறைசெய் பிழையெனின்; அன்றெனின் அறஞ்செய்;
புவிநலங் காத்தலுங் கடனே!

விண்ணினைப் படைத்தாய்; காற்றினைப் படைத்தாய்!
வெயிலினை இருளினைப் படைத்தாய்!
மண்ணினைப் படைத்தாய்; மழையினைப் படைத்தாய்!
மலை, கடல், ஆற்றினைப் படைத்தாய்!
எண்ணருங் கோடி உடுக்களைப் படைத்தாய்!
இடியினை மின்னலைப் படைத்தாய்;
பெண்ணினைப் படைத்தாய் ஆணினைப் படைத்தாய்;
பித்தரை என்செயப் படைத்தாய்?

பன்னூறாயிரம் உயிர்களைப் படைத்தாய்!
பசிக்கென உணவுகள் படைத்தாய்!
பொன்னினைப் படைத்தாய்; இரும்பினைப் படைத்தாய்!
புடவியுள் தொழிலினைப் படைத்தாய்
நின்னருள் விளங்கிட இனியரைப் படைத்தாய்
நினக்கெனப் புலவரைப் படைத்தாய்
இன்னருஞ் செயல்களைப் படைத்தபின் நீயே
ஏழ்மையை என்செயப் படைத்தாய்?

விலையறு மணிகளை நிறங்களைப் படைத்தாய்;
வேட்கையைப் பூட்கையைப் படைத்தாய்
குலைவறுஞ் செயல்களை ஒழுங்குறப் படைத்தாய்;
குறிகளும் பொறிகளும் படைத்தாய்!
அலைவுறு மின்பமிங் காயிரம் படைத்தாய்!!
அதன்வழி அமைதியைப் படைத்தாய்;
கலைஞரைப் படைத்தாய்! காவலர்ப் படைத்ததாய்!
கயவரை என்செயப் படைத்தாய்!

-1962

## 77 அறியாமை வாழ்வு!

(தரவு கொச்சகக் கலிப்பா)

மன்பதையின் சிறப்பறியீர்;மனத்தொளிருஞ் சுடரறியீர்;
புன்புரைசொல் வினைமிகுந்தீர்; புறத்தறிவே உயர்வென்று
பன்வகையால் உடல்எழிலைப் பரவுகின்றீர், பாரகத்தீர்!
என்கொலும தறியாமை; இதுவாழ்வென் றியம்புவதே!

முன்பிருந்த பழம்பெருமை முழக்கிடுவீர்; முன்னிருப்பார்க்
கன்பிருந்த மொழிபுகலீர்; அயலார்க்கொன் றுதவுகிலீர்;
என்பிருந்த தோற்பாவைக் கெழில்போலும் இருந்தீரே,
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

தின்பொருளின் சுவைபேசித் தேய்பொருளின் புகழ்பாடி
மின்பொருந்தும் ஆற்றலெலாம் மேவியுளம் மேவாமே
வன்மமிகு கொடுஞ்செயலின் வாய்ப்பட்டீர்! வாய்மையிலீர்!
என்கொலு மதறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

கன்மடையி னிடைநீராய்க் கலகலெனச் சலசலெனச்
சொன்மாரி பொழிவிப்பீர்! சுழிமனத்தீர்! தேங்குபுனல்
என்மான வுணர்வடங்கிச் செயலிழப்பீர், இருநிலத்தீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

முன்பருவத் தலைந்தாடி இளமையிலே மொய்த் தடங்கண்
மின்பாய்விற் கிழுப்புண்டு மேனிநற வுண்டவளோ
டின்பாய்ந்த பெரும்பயனா வெண்ணரிய மகப்பெறுவீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

தன்மனைக்கும் தன்மகர்க்கும் தங்கியிளைப் பாராமே,
பன்வகையாற் பொய்ச்சாற்றிப் பன்னலமுஞ் செய்விப்பீர்!
என்பயனிங் கெதிர்கொண்டீர்? இவண்பிறந்த ஏதறியீர்
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

துன்னூசி நுனித்தனையும் ஒரறமுந் தோற்றுகிலீர்!
தின்னூசிப் போம்பொருட்குத் திசையெட்டுந்
தோய்ந்தலைவீர்!
மன்னுமுளப் பெருஞ்சிறப்பை மறந்தீரே, மண்ணகத்தீர்!
என்கொலுமத றியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

பொன்னணியும் முத்தணியும் பூந்துகிலும் பூண்டுபல
மின்னிடையார் மருங்கணைந்து மிசைவதுவே இன்பமெனப்
பன்னியுரை சாற்றிடுவீர்! பழிவினைக்கிங் குயிர்செருப்பீர்,
என்கொலுமத றியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

நன்னருடல் பேணுகிலீர் நலிந்துழன்று நாறுகின்றீர்!
என்னவகை வாழ்ந்திடுவ தென்பதையு மெண்ணுகிலீர்!
மின்னொளிபோல் தோன்றுகிறீர்; மாளுகிறீர்; நீணிலத்தீர்!
என்கொலுமத றியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

பின்விளைவை எண்ணுகிலாப் பேதையரா யீங்கிருந்து
பன்விளைவுக் காளாகிப் பதைபதைத்துச் சிதைந்தொழிவீர்;
முன்பிழையே பின்துயரை மூட்டுவிக்கு மென்றறியீர்!
என்கொலுமத றியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

-1966

## 78 இறைவணக்கப் பாட்டு!

(ஆங்காங்கு நடைபெறும் கூட்டங்களிலும், விழாக்களிலும் பொதுவுணர் வெழுப்பவேண்டிய பள்ளிகளிலும் தொடக்கத்தே பாடப்பெறும் இறைவணக்கப் பாட்டு பொதுவானதாக இல்லை என்ற குறை என்னிடம் கூறப்பெற்றதுண்டு, எனவே மாந்த இனத்திற்கே பொதுவானதும், மெய்யுணர்வு ஒன்றே கொளுவப் பெற்றதுமான இப் பாட்டை எழுதினேன். பொதுவினார் பயன்படுத்திக்கொள்க.)

விரிவிசும்பைச் செங்கதிரை விண்மீனை நிலவை
வெப்பவொளி மண்டிலத்தை விளங்கருபாழ் வெளியை,
எரிவளியைத் தீம்புனலை இருநிலத்தை, நிலமேல்
ஏந்துகின்ற நுண்ணுயிரை இயங்குநிலைத் திணையை,
திரிதருமென் புள்ளினத்தைத் திறல்விலங்கை நீரில்
தேங்குறுமீன் கூட்டத்தைத் தெருள்மாந்த வினத்தைப்
புரிமனத்தைப் பெருநினைவைப்
பொருள்செறிந்த தமிழைப்
புலப்படுத்துந் திறலெதுவோ புலனுறவாழ்த் துவமே!

தமிழாருஞ் செம்பொருளைத் தவிர்தலிலா முதலைத்
தாயாருக்குந் தாயாகித் தனித்திருக்கும் மெய்யைக்
குமிழாரும் உயிர்ப்புனலைக் கூட்டுவிக்கும் நெறியைக்
கோதில்லா நல்லுணர்விற் குமிழ்த்தெழுமெய்க் கூத்தைச்
சிமிழாரும் இமைவிழிக்குள் சிறுபாவைக் குள்ளே
சிதறொளியைக் குவிக்குமொரு செயலறுத்த செயலை
அமிழாதெம் நன்னெஞ்சம் அங்காந்த தாகி
அறிவறியத் துடிப்பதெதோ அதுதனைவாழ்த் துவமே!

**-1969**

## 79 வித்தும் விளைவும்!

தென்மொழிக்கே மூச்சுயிர்த்து விடுதலைக்கே வாழும்
தீதறியா என்னுளத்தைக் கேள்வியொன்று கேட்டேன்:
"புன்மொழிகள் தாங்கினைநீ; பழிபலவும் ஏற்றாய்;
புதுநினைவுக் கிடமின்றி ஒருநினைவால் வாழ்ந்தாய்;
வன்மொழிக்கும் சோர்கிலைநீ; வஞ்சருக்கும் அஞ்சாய்;
வாழ்க்கையெனும் தனிநிலைக்கும்பொதுமையுரை சொன்னாய்;
இன்மொழிக்கும் மயங்கிலைநீ; ஏற்றம்பல தோற்றாய்;
ஏசலுக்கும் கூசிலைநீ!, என்னபயன் கண்டாய்?"

"கதிர்தோன்றி விழும்வரைக்கும் காட்சி, உரை யாவும்
கையசைத்துச் செய்துவரும் பல்வினையும் போக்கும்
எதிர்தோன்றி எவர்தடுத்துக் கூறினும்சா யாமல்
"எந்தமிழ்க்கே எந்தமிழர் நாட்டினுக்கே" என்னும்
புதிர்தோன்றும் வாழ்க்கைக்கே பொழுதமைத்துக் கொண்டாய்;
போக்கிலெள்ளின் மூக்களவும் மாற்றமிலை என்றாய்;
கதிர்தோன்றும் எனும்நினைவில் காணிபல வித்திக்
காத்திருந்தாய்; காத்திருந்தாய், என்னபயன் கண்டாய்?"

"மாறிவரும் வாழ்க்கையிலே மனமழிப்பார் கோடி;
மயக்கிவரும் உலகியலில் வயப்படுவார் கோடி;
ஊறிவரும் நலங்களிலே உளம்புதைப்பார் கோடி;
உவப்பளிக்கும் வருவாய்க்குத் தவங்கிடப்பார் கோடி;
ஏறிவரும் இல்லறத்தில் இலக்கிழப்பார் கோடி;
இழுத்தலைக்கும் பணங்காசில் வழுக்கிடுவார் கோடி;
கூறிவரும் கொள்கையிலோர் அணுவுங்குறை யாமல்
கூறுகின்றாய்; கூறுகின்றாய், என்னபயன் கண்டாய்?"

"முட்டுகின்ற வறுமையினுள் மூழ்கியழி யாமல்
முகமாறிப் பேசுகின்ற அன்பர்பலர் கண்டாய்!
விட்டகன்ற அன்பர் பலர் உனைவீழ்த்தும் போக்கில்
வீசுகின்ற பொய்யுரைக்கும் வீழவில்லை நின்தோள்;
கட்டுகின்ற நல்லமைப்பும் சிதைகின்ற தவரால்;
காட்டுகின்ற பாதையிலோ கல்பரப்பி வைப்பார்;
எட்டுகின்ற கொள்கைக்கோ எழுநூறு தடைகள்;
எழுதுகின்றாய்; எழுதுகின்றாய் என்னபயன் கண்டாய்?"

உள்ளமெனும் வழிகாட்டி தனைநோக்கிக் கேட்டேன்;
ஒருநூறு முறைகேட்டேன்; விடைகேட்க நின்றேன்;
வெள்ளமெனும் பேருணர்வில் எனைவீழ்த்தி வாழ்வை
வீணடிக்கும் வல்லவனைச் சலிப்புமிகக் கேட்டேன்,
பள்ளமிது மேடிதென்று பகுத்துணரார் பாங்கில்
பாக்கள்பல வித்திவிட்ட சோர்வதனால் கேட்டேன்
கொள்ளையுணர் வெழுந்ததுபோல், கொழுந்துவிட்ட தீப்போல்
கூர்த்தெழுந்தே ஆர்த்ததுள்ளம்! இடிமுழக்கம் கேட்பீர்:

"மூளுகின்ற பேரறிவில் பிள்ளையடா நீதான்;
முங்கிவரும் வல்லுணர்வில் சிறுதுகள்நீ; புடவி
நீளுகின்ற ஊழியிலே சிறுபொழுதுன் ஆட்சி!
நினைவென்னும் விரிவானத் தொருசிறுகூ றாம், நீ!
ஆளுகின்ற நிறைத்திருவின் இறைப்பெரும்பே ராற்றல்
ஆட்டிவைக்கும் மேடையில்நீ ஆடுகின்ற சிறுவன்;
மாளுகின்ற வாழ்க்கையிலே மனம்வைத்துக் கேட்டாய்!
மட்கிவிடும் நீயெனது மாண்பினை ஐ யுற்றாய்!

வித்தழிந்து செடியாகும்; செடியழிந்து மரமாம்;
விரிந்தலரும் பூவழிந்து காயழிந்து கனியாம்;
ஒத்தழிந்த கனிகளுக்குள் ஒருகோடித் தோற்றம்;
உருவழியும் நிலையினுக்கேன் உளமழிய நொந்தாய்!
பித்தழிந்த பின்னையன்றோ மெய்ப்பொருளுங் காண்பாய்!
பேச்சழிந்து போனதற்கா மூச்சழித்துக் கொண்டாய்!
செத்தழிந்து போவதெது? சிறப்பதெதென் றந்தச்
சீரறிந்து கொண்டவன்போல் நீபிதற்று கின்றாய்!

கோடிபுலம்; கோடிநிலம்; விளைவுபல கோடி;
கூர்தலெவை; ஆர்தலெவை; தீர்தலெவை என்று
தேடிநலங் கண்டதுபோல் தீர்ந்தவுரை செய்வாய்!
திகைப்படைவாய்; உலகியற்குத் தேய்ந்திடிந்து போனாய்;
நாடிநிலங் கண்டவிடத் துழுதுவிதை யூன்றல்
நானுனக்குத் தந்தவினை; விளைவுபயன் முற்றும்
கூடிநலங் கூட்டுவதும் குறைப்பதுவும் நீயோ?
குறைமதிக்குங் கீழ்மதியால் குழம்புவதும் ஏனோ?

நின்னுடலம் வளர்ச்சியுற உணவருந்தும் நின்வாய்
நிகழ்த்துவினை மென்றுணவை விழுங்குநிலை ஒன்றே!
உன்னுடலுள் சென்றவுண வுட்கலந்த சாற்றை
உறிஞ்சுவதும் செந்நீராய் மாற்றுவதும் யார்கொல்?
தின்னுணவைத் தேடியிடுங் கையோநின் வாயோ?
திகைப்படைந்தால் உணவுநிலை பயன்மாறிப் போமோ?
என்னுணர்வாய் நீயிலங்க வேண்டுமெனக் காண்பாய்!
எதிர்விளைவைக் கண்டெதற்கேன் நீதயங்கல் வேண்டும்?

வித்திடுக; வித்திடுக, வித்திடுக! தன்னால்
விளைந்துவரும்; விளைந்துவரும்; விளைந்துவரும் ஆக்கம்!
எத்திசையில் எத்தரையில் எத்துறையில் நின்னால்
இயன்றிடுமோ அவ்வகையில் முயலுகநீ நன்றே!
வித்தியதன் விளைவெண்ணிக் கவன்றிடுதல் வேண்டா;
விளைவுசிறி தாமெனிலோ பயனுடனே தோன்றும்!
முத்துவிளை காலமென்ன, கரிவயிர மாகும்
முழுக்காலம் என்னவென்ன நீயறிய மாட்டாய்!

மரமழிந்து நிலம்புதைந்து பழுத்தணுக்கள் கரியாய்
மாறவிரு பத்திலக்கம் ஆண்டுசெலல் வேண்டும்!
உரமிகுந்து கருமையுற்று நிலக்கரியாய் மாறி
உருப்பெறவோ மேலுமிரு பத்திலக்கம் ஆண்டு!
கரிவயிர மாகவிரு பத்திலக்கம் மேலும்
கழிந்திடுதல் வேண்டுமதைக் கனியியலார் அறிவார்!
கரிமாறிக் காழகமாய் மாறுதற்கே ஊழி
காத்திருக்க வேண்டுமெனில் உள்ளமென்ன கரியா?

சிறையார்ந்து புடைபரந்து விரிந்திடுவான் வெளியில்
சிறுத்ததொரு கதிரவனின் தெறித்தபொறி உலகம்
துறையார்ந்து கிடக்கின்ற சிறுமணல்போல்! அந்தத்
துணுக்குலகின் அணுக்களுளே துண்ணணுவும் நீதான்!
குறையார்ந்த சிறுமாந்தத் துகளே! நீ சொல்வாய்!
“கொத்திவிதை யிட்டவுடன் பயனிலைகாண்” என்பாய்!
மறையார்ந்த தோற்றமதும் முடிவதுவும் கண்டார்
மாந்தருக்குள் ஒருவருண்டோ? மற்றுனக்கேன் கவலை?

இயற்கையெனும் பெருவினைஞன் இட்டவொரு தீர்ப்பில்
எழுந்தனைநீ; எழுந்ததுளம்; எழுந்ததுணர் வுன்னுள்!
மயற்கையிலா துணர்ந்தவை, நீ மற்றவர்க்கும் உரைப்பாய்!
மற்றவற்றால் விளைவதெலாம் உலகமன்றோ துய்க்கும்!
செயற்கையன்றோ நின்கடமை! விளைவவனுக் கன்றோ!
செயலுக்கொரு கருவியன்றோ நின்னுருவும் அறிவும்!
முயற்கையால் முழுநிலமும் அளந்துமுழங் காண
முயல்வதுகாண் நீவிளைவை அளந்திடுமந் நோக்கம்!

பாவெழுத உணர்வமைத்தேன்; பாடலுன்றன் செய்கை!
படித்துணர அறிவமைத்தேன்; படிப்பதுநின் கடமை!
நாவெழுதும் உரையமைத்தேன்; நாற்புறமுஞ் சென்று
நாட்டுநலம் மக்கள்நலம் அறிவுநலம் பற்றி
யாவருக்கும் உரைதரவுங் கட்டளைநான் இட்டேன்!
யாதுவிளை வென்றறிதல் நின்மிகுந்த செய்கை!
பூவிருக்கும் நிலையினிலே கனியறிதல் உண்டோ?
பூமணமும் வேறதனின் கனிச்சுவையும் வேறாம்!

என்னருமைச் சிறுசுடரே! திருவுடலே! செயலே!
எவ்விளைவும் கருதற்க! செய்கவுன்றன் வினையே!
நின்னருமைச் சிறுவினையால் விளைவுபல வாகும்!
நின்விளைவை நீயறிதல் நீளுலகில் இல்லை!
பொன்னருமை பொன்னறிவ தில்லையன்றோ? வாழ்வுப்
பொழுதெல்லாம் நின்னுணர்வால் பொழிந்திடுக! என்றும்
நின்னிலையில் தாழற்க! கவலற்க! உலகில்
நிகழ்த்தவெண்ணும் பலவிளைவுகள் நின்விளைவும் ஒன்றே!

தூய்மையுளம்; தூய்மையுரை; தூய்மைவினை; என்றும்
துவள்தலிலா ஒருநிலைக்கே நினையிருத்திக் கொண்டால்
வாய்மைநிலை வாய்ப்பதல்லால் வேறுநிலை யில்லை;
வறுமைநிலை என்பவெல்லாம் வெறுமைநிலை யாகா!
தேய்தல்நிலை யில்லை; உளம் தீங்குறுதல் இல்லை!
தெருள்நிலையும் தோன்றிவரும் மருள்நிலைமாய்ந் தக்கால்!
ஒய்தல்நிலை யற்றொருகால் சாய்தல்நிலை யில்லா
துழைத்திடுக; உழைத்திடுக; விளைவுபல கோடி!"

உள்ளமெனும் அன்னையெனக்குரைத்தவிடை யிஃதாம்!
உற்றவிடை கேட்டதன்பின் உடல்முழுதும் காந்த
வெள்ளமெனும் பேருணர்வால்சிலிர்சிலிர்க்க நின்றேன்!
விளக்கமிலாப் பலநிலைகள் விளங்கிடவும் கண்டேன்!
விள்ளரிய பெருமுழக்கம் என்னுளத்துள் கேட்டேன்!
வியனுலகப் பொருளனைத்தும் ஒன்றெனவு ணர்ந்தேன்,
எள்ளவொரு பொருளுமிலை; வாழ்த்தவொன்று மில்லை!
எண்ணவொரு நினைவுமிலை! மறக்கவொன்று மில்லை!

-1969

## 80 நடக்கின்ற செயலனைத்தும் நாடகமே!

நடக்கின்ற செயலனைத்தும்
நாடகமே என்றெண்ணிக்
கடக்கின்ற மெய்ந்நிலையைக்
கருத்தளவில் நாமுணர்ந்தால்
கிடக்கின்ற பொருள்களிலே
கீழேது மேலேது?
தடக்குன்றத் தோளுடையான்
தாள்பட்டுச் சிதறுவதே!

-1973

## 81 எவ்வழி நினைவோ, அவ்வழி நிகழ்ச்சி!

*உனக்கு முன்னும், இவ்*
*வுலகம் இருந்தது!*
*உனக்குப் பின்னும், இவ்*
*வுலகம் இருக்கும்!*
*ஊழியிற் சுழலும், இவ்*
*வுலக வண்டியில்*
*நாழியே ஏறிடும்*
*நல்வழிப் போக்கன், நீ!*

*தொடங்கிய தெங்கே?*
*தொடர்வது மெங்கே?*
*அடங்கா முடிவினில்*
*அடைவது மென்ன?*
*என்பவை எல்லாம்*
*எண்ணினும் விளங்கா!*
*மன்பதைக் கடலுள்*
*மண்துகள் அசைவு, நீ!*

*எந்த இடத்தினில்*
*இறங்கிடு வாயோ?*
*அந்த நொடிவரை*
*ஆர்ப்பரிக் கின்றாய்!*
*சொந்தமும் சுற்றமும்*
*சுழன்றிடும் அணுக்கள்!*
*சிந்துகண் ணீரும்*
*சிரிப்பும் கனவுகள்!*

*வந்தது நினையாய்!*
*வழிதடு மாறுவாய்!*
*வெந்தது தின்றிட*
*வீணிற் பேசுவாய்;*
*மந்தையில் ஆடுபோல்*
*மனத்தைச் சுழற்றுவாய்!*
*முந்தையர் விட்ட*
*முழுமை தொடருவாய்!*

நினைத்தவை எல்லாம்
நிலைத்தவை ஆகா!
அனைத்து முயற்சியும்
அரைகுறை முயற்சியே!
மனத்திருள் குறைந்தால்
மனத்துயர் குறையும்!
மனத்தொளி பெறுதலே
வாழ்க்கையின் மலர்ச்சி!

ஒளிபெற எண்ணுவாய்;
ஒளித்துவை யாதே!
வெளிவான் விரிவுபோல்
விரியட்டும் நினைவுகள்!
துளியே யாயினும்
தூய்மையே வாழ்க்கை!
களிசேர்ப் பதுவும்
கசடிலா எண்ணமே!

ஒவ்வொரு நொடியும்
ஒவ்வொரு மலர்ச்சி!
ஒவ்வொரு நாளும்
ஒருபடி உயர்ச்சி!
எவ்வழி நினைவோ
அவ்வழி நிகழ்ச்சி!
செவ்விய மனமே
செவ்விய வாழ்க்கையாம்!

-1974

## 82 துன்பமும் இன்பமும்!

துன்பம் என்பதோ மனத்துறு கோணல்!
தொல்லைகள் என்பன செயல்களின் கோணல்!
இன்பம் என்பதோ உள்ளம் இசைவது;
இனியது, எதிர்பார்த் திருந்தது கிடைப்பது!

நாம்இருக் கின்றோம் என்பதோர் இன்பம்!
நாம்வாழ் கின்றோம் என்பதோர் இன்பம்!
நாம்பெற் றிருக்கும் உடல்நலி வின்றி
நலமாய் இருப்பது மற்றுமோர் இன்பம்!

கால்முட மின்றிக் கண் குரு டின்றிக்
காதுகள் இரண்டும் கற்செவி டின்றி
நால்வகை உறுப்பும் நன்றாய் இருப்பது
நமக்குக் கிடைத்த மிகப்பெரும் இன்பம்!

மழையிற் செல்கையில் இடிவிழுந் திடாமல்,
மலையே றுகையில் உருண்டு விழாமல்,
தழைமிகு மரநிழல் ஒதுங்கி யிருக்கையில்
தடங்கிளை முறிந்தே தலையில் விழாமல்,

ஆற்றில் செல்கையில் படகு கவிழ்ந்தே
அழுந்திய நீரில் மூச்சுமுட் டாமல்,
ஏற்றிப் போகும் வண்டி கவிழ்ந்தே
இறந்துபோ காமல்,இருப்பதே இன்பம்!

உண்ணுவ தின்பம் ஒருவருக்(கு); அதுவே,
உளையாத் துன்பமாய் மற்றவர்க் கிருக்கும்!
மண்ணிடைத் துன்பமும் இன்பமும், மனத்தின்
மயக்க உணர்வென எண்ணி அமைகவே!

இனிப்பன என்றுமே இனிப்போ டிருக்கா;
இனிமை இலாதவை என்றுமே புளிக்கா;
இனிப்பதும் புளிக்கும்; புளிப்பதும் இனிக்கும்,
இடமும் காலமும் மனத்தொடு பொருந்தியே!

மனத்தில் இனிப்பது வாயினில் புளிக்கும்!
மாலையில் புளிப்பது காலையில் இனிக்கும்
சினத்தில் கசப்பது சிரிக்கையில் இனிக்கும்!
சிந்தனைக் கினிப்பது செயலிடைக் கசக்கும்!

உடலுக் கினிப்பது உளத்தினில் புளிக்கும்!
உளத்திற் கினிப்பதோ அறிவினில் கசக்கும்!
கெடலும் நலமும் உடல், அறி(வு), உள்ளம்!
கீழ்மேல் என்பதோ இடம், பொருள், ஏவல்!

துன்பம் வருகையில் நமக்கமைந் திருக்கும்
துயரமி லாப்பிற நிலைகளால் மகிழ்க!
இன்பம் பெறுகையில் நமக்கமைந் திருக்கும்
இன்பமி லாப்பிற நிலைகளால் அடங்குக!

-1977

## 83 விளையாட்டும் வாழ்க்கையும் !

வாழ்க்கைஎனும் விளையாட்டுள்
வந்து இணைந்த நாள்முதலாய்
வீழ்க்கைக்கும் வெற்றிக்கும்
விசை இயக்கம் மாறாதே!

விசை இயக்கம் மாறாமல்
விரும்புகின்ற ஆட்டத்தில்
திசை திரும்பிப் போகாமல்
தேர்ந்துவரல் வெற்றியென்போம்!

உனக்குகந்த விளையாட்டை
உளம்விரும்பி ஆடுதல்போல்
தனக்குகந்த கொள்கையிலும்
தழைத்துயர்தல் வாழ்க்கையன்றோ?

விளையாட்டுள் எதிரணிபோல்
விளைபயிர்க்குக் களைகளைப்போல்
முளைகாட்டும் கொள்கைக்கும்
முளைத்திடுவார் எதிரி பலர்!

எதிர்த்துவரும் தடைகளையும்
இடர்விளைக்கும் பகைவரையும்
விதிர்ப்பின்றி வெற்றிகொள்ளும்
வினையேதான் வாழ்வாகும்!

-1983

## 84 ஒவ்வோர் உடம்பும் ஒவ்வோர் உலகம் !

ஒவ்வோர் உடம்பும்
ஒவ்வோர் உலகம்!
ஒவ்வோர் உடம்பிலும்
உள்ளியங்(கு) உயிர்தான்

உலகினில் உள்ள
இயற்கையை ஒத்ததாம்!
அலகிலா அணுக்களே
அனைத்துலக உயிரினம்!

மண்டுதசை எலும்பெலாம்
மண்ணும் மலைகளும்!
அண்டுசளி, கோழை
அடுபனி, குளிர்நிலை!

கடல்போல் அரத்தம்
கனப்பே நெருப்பு!
உடலிடை ஓடும்
உயிர்ப்புவளி காற்று!

மூளை, ஆ காயம்!
மூண்டறிவு இறைமை!
ஈளையும் காய்ச்சலும்
எழுகுளிர், கோடை!

நம்முடல் உலகினை
நல்லாட்சி செய்திடும்
நம்மின் 'நான்' உணர்வே
நாடாளும் அரசனாம்!

அரசன் எவ்வழி
அவ்வழி குடிகள்போல்
இருக்கும் 'நான்' உணர்வே
இயல்பாய் இயங்கினால்,

உடல் உல(கு) ஆட்சி
ஒழுங்குற நடந்திடும்!
உடலுறுப் பனைத்தும்
ஒத்துழைத் தியங்கும்!

இருக்கும் 'நான்' உணர்வே
இறுமாப்பின் இயங்கினால்,
செருக்கு மிகுந் தாட்சி
சீர்கெட்டுப் போகும்!


உடம்பின் பூதங்கள்
ஒவ்வொன்றும் நலமுடன்
திடம்பெற அமைதலே
முதன்முதல் தேவையாம்!

அவரவர் உடம்பை
ஆளப் பழகலே
எவர்க்கும் இயற்கை
ஈந்த வாழ்க்கையாம்!

அறிவெனும் இறைமைத்
துணையுடன் மாந்தச்
செறிவெனும் நன்மனம்
சீர்மையோ டியங்குதல்

உடலுலக ஆட்சி
நடைபெற உதவிடும்!
கடனிதாம் எவர்க்கும்;
கடமை தவ றாதீர்!

-1989



விரிவிசும்பைச் செங்கதிரை விண்மீனை நிலவை
வெப்பவொளி மண்டிலத்தை விளங்கருபாழ் வெளியை,
எரிவளியைத் தீம்புனலை இருநிலத்தை, நிலமேல்
ஏந்துகின்ற நுண்ணுயிரை இயங்குநிலைத் திணையை,
திரிதருமென் புள்ளினத்தைத் திறல்விலங்கை நீரில்
தேங்குறுமீன் கூட்டத்தைத் தெருள்மாந்த வினத்தைப்
புரிமனத்தைப் பெருநினைவைப் பொருள்செறிந்த தமிழைப்
புலப்படுத்துந் திறலெதுவோ புலனுறவாழ்த் துவமே!

தமிழாருஞ் செம்பொருளைத் தவிர்தலிலா முதலைத்
தாயாருக்குந் தாயாகித் தனித்திருக்கும் மெய்யைக்
குமிழாரும் உயிர்ப்புனலைக் கூட்டுவிக்கும் நெறியைக்
கோதில்லா நல்லுணர்விற் குமிழ்த்தெழுமெய்க் கூத்தைச்
சிமிழாரும் இமைவிழிக்குள் சிறுபாவைக் குள்ளே
சிதறொளியைக் குவிக்குமொரு செயலறுத்த செயலை
அமிழாதெம் நன்னெஞ்சம் அங்காந்த தாகி
அறிவறியத் துடிப்பதெதோ அதுதனைவாழ்த் துவமே!